
# பாவியக் கொத்து

பெருஞ்சித்திரனார்



# பாவியக் கொத்து

[தனித்தமிழ்ச் சிறு பாவியம் பத்து]

பெருஞ்சித்திரனார்

# பாவியக் கொத்து

[சிறு பாவியத் தொகுப்பு]


முதற் பதிப்பு : சிலை க. தி.பி. ௨௰௰ (16 -12 - 1962)
இரண்டாம் பதிப்பு : மேழம் க. தி.பி. ௨ ௰ ௧௬ (13—4—1985)

(உரிமை ஆசிரியர்க்கு.)

விலை உரு. 25.00 உருபா.

[இந்நூலையோ நூற்பகுதியையோ எவ்வகையினும் பயன்படுத்திக்கொள்ள ஆசிரியர் ஒப்புதல் பெறுக.]

தென்மொழி மின் அச்சகம்,
சென்னை-5.





## படையல்

பெற்றீர்; மகிழ்ந்தீர்; பெயரிட்டீர்; பீடுதமிழ்
கற்று மகிழநறுங் கல்விதந்தீர்; வற்றாத
அன்புமிகக் காட்டினீர்; அன்றன்றும் பாராட்டி
என்பும் நெகிழ எனைவளர்த்தீர்; பின்புதமிழ்த்
தொண்டுசெயக் கண்டுந் துணைநின்றீர்; தூயவுளங்
கொண்ட **துரைசாமி, குஞ்சம்மாள்** உங்கட்கே
பூப்படையல் வாடிவிடும்; பொன்படையல் மங்குமென்று
பாப்படையல் செய்தேன் பணிந்து!

# பொருளடக்கம்


| எண். | பாவியங்கள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அத்திப்பூ | ... | 9 |
| 2. | காளாம்பி | ... | 34 |
| 3. | குருடர் காதல் | ... | 43 |
| 4. | பறவைகள் மாநாடு | ... | 55 |
| 5. | வில(ா)ங்கு | ... | 65 |
| 6. | பெண்ணல்லள் | ... | 73 |
| 7. | மணல்திட்டு | ... | 84 |
| 8. | பட்டமரம் | ... | 93 |
| 9. | நடுகல் | ... | 103 |
| 10. | வழக்குரைகாதை | ... | 110 |



**என்னுரை :**

**கவி, காவியம்** என்பன வடசொற்கள். **கவிதை, கவிஞன், காவியம்** என்னும் சொற்களோ வட சொல்லும் தமிழீறும் இணைந்த கலவைச் சொற்கள் (**Hybrid**) ஆகும். தமிழடிமையும் ஆரிய வழக்குப் பெருமையும் மிகுந்த காலத்தில் இச் சொற்கள் பெரிதும் ஆளப்பட்டனவேனும். தமிழ் மலர்ச்சியுற்றுவரும் இக்காலத்தே இத் தகைய சொற்களைக் கையாளுதல், மேலும் நம் மையும் நம் மொழியையும் வல்லடிமைச் சேற் றில் புதைத்துக் கொள்வதாகும். **கவி** எனும் வட சொல்லுக்கிணையாக வழங்கும் **கவிதை, கவிஞன்** என்னும் இருமொழிக் கலவைச்சொற் களுக்கும் தூய தமிழ்ச்சொற்கள் **பா, பாட்டு** அல்லது **பாடல், பாவலன்** என்பனவே. **கவி** தழுவி யெழுந்த தொடர் நிகழ்ச்சி **காவியம். பா** தழுவி எழுந்த தொடர் நிகழ்ச்சி அல்லது கதை பாவியம். பாவியம், குறும்பாவியம், நெடும் பாவியம் என்றும் பிரிக்கப்பெறும். **'பாவியக்**

**கொத்து'** என்பது பாவியங்கள் சில சேர்ந்த தொகுப்பு என்று பொருள்படும்.

இப் **பாவியக் கொத்தில்** நான் முன்னரெழுதிய பத்துச் சிறு பாவியங்கள் அடங்கியுள்ளன. பிற சிறு பாவியங்கள் பின்னர் வேறு பெயரில் நூலாக வெளிவரும். இதில் வரும் பாவியங்கள் பலவகைப் பாவினங்களிலும் எழுதப் பெற்றுள்ளன.

இக் கொத்துள் அடங்கும் சிறு பாவியங்கள் யாவும் ஒரேபொழுதில் இயற்றப்பெற்றன அல்ல. அன்றியும் அவை யாவும் மனவியலைத் தழுவி யெழுந்த பல்வேறு வாழ்க்கை யமைப்புகளைப் பற்றியனவாகும்.

வெறும் பொழுதுபோக்கிற்காக எழும் ஆக்கங்களைப் போலன்றி, மாந்தரின் உள் மனத்தே ஆங்காங்கு எழுந்து குமிழியிடும் பல தீய எண்ணங்களை ஒடுக்கவும் நல்லெண்ணங்களை ஊக்கவும் எழுதப்பட்டனவாகும் இப் பாவியங்கள். இவற்றுள் **குருடர் காதல், பெண்ணல்லள்** இரண்டும் **'வானம்பாடி''** என்னும் பாட்டிதழில் வந்தவை. பிற யாவும் **'தென்மொழி'**யில் வெளியிடப் பெற்றவை.

பாவியங்களைச் சுவைக்கும் பழங்கால மக்களுக்கும் இக்கால மக்களுக்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகின்றது. முற்கால மாந்தர் அகவெழுச்சிகளையே மிகுதியும் பாராட்டிப் பாவியங்களைப் படைத்தனர்; சுவைத்தனர். தற்கால மாந்தரோ, புறவெழுச்சிகளையே மிகுதியும் பாராட்டிப் பாவியங்களைப் படைக்கின்றனர்; சுவைக்கின்றனர். புறவெழுச்சிகள் பாடல்களிலோ கதைகளிலோ வரப்பெறலாகாவென்பது கட்டளையன்று. கூறப்பெறும் புறவெழுச்சிகள் அகத்தின் உருவமாகக் காட்டப் பெறுதலே சிறப்புடையது. அகவுணர்வு மிகுந்தவிடத்து வாய்ச் சொற்களும் வடிவிழந்து போகுமன்றோ? அகப்புலன் விழையாது புறப் புலன் வேட்கும் இற்றை மாந்தரின் சுவைநலம் இன்னும் ஒரு நூற்றாண்டில் விலங்கினும் கீழாகத் தாழ்ச்சியுறும் எனினும் வியப்பில்லை. பாவியங்களின் எழுச்சியுணர்வும், உள்ளீடும் அவ்வவற்றின் முன்னுரைகளில் கூறப்பெற்றுள்ளன. அவ்வக் கதைகளில் வரும் நிகழ்ச்சிகள் இயற்கைக்குப் பொருந்தியும் காலத்துக்கேற்பவும் வருவன. கதைத் தலைவர், தலைவியரின் மனவியல்புகளும் அப்படியே. "**பறவைகள் மாநாடு**" மட்டும் உருவகக் கதை; இந்தியெதிர்ப்பு அதன் உட்கரு. மொழிவல்லாண்மை அறிவுக்குப் பொருந்தாததை அப் பாவியம் கூறுகின்றது '**நடுகல்**'லும் '**வழக்குரை**

காதையும் ஈந்தி யெதிர்ப்புப் பாவியங்களே ! அன்போடும், அறத்தோடும் தொடர்பு படுத்திக் காட்டப் பெற்றுள்ளன. '**விலாங்கு**' மாந்தர்களை எவ்விடத்தும் காணலாம். '**பட்டமரத்துள்**' காட்டப்பெறும் கோழைமை மாந்தர்க்கு-குறிப்பாகத் தமிழர்க்கு வேண்டுவதன்று.

இந்நூல் வெளிவருவதற்குப் பல்லாற்றுனும் முனைந்து முழுத்தொகையினையும் திரட்டியுதவிய **அவநாசி திரு. வி. க மன்றத்தாரே,** சிறப்பாக திரு. **ப. துரையரசன்** அவர்களே இதன் எல்லாச் சிறப்புக்கும் உரியவராவர். என்றும் **தென்மொழி** வளர்ச்சிக்குத் தோன்றுத் துணையாக நிற்கும் அவரும் அம்மன்றமும் என்மேல் வைத்த அன்புக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். மற்றும் இது வெளிவரக் கரணியமாக விருந்த அன்பர் யாவர்க்கும், ஓவியர் திரு. வி. சின்னையாவிற்கும் என் நன்றி என்றும் உரியது.

கடலூர்-க,
சிலை க.,தி.பி. - 2000.
16—12 69

அன்பன்,
துரை-மா.

பாவியக் கொத்து

# நுழைவாயில் உரை

(சொல்லாய்வறிஞர். ப. அருளி, வணி.இ. ச.இ.)

பல்வேறு பாவினங்களால் மிடையப்பெற்று, மணம் பரப்பி நிற்கின்ற இப் பாவிய நூல், - பத்துச் சிறுகதை யமைப்புகளையுள்ளடக்கிய,-நறுஞ்சொற் பூக்களால் யாத்துக் கோத்தெடுக்கப் பெற்றுத் தொங்கி யொளிர்கின்ற ஒரு தூமாலைக் கடையாகக் காட்சியளிக்கின்றது.

இஃது, ஓர் இணரூழ்த்து மணக்கும் அணிமலர் நூல்மாலைக் காடு! இவ் விருபதாம் நூற்றாண்டின் பத்துப்பாட்டு! யாத்துக் கோத்தவர், அறிவெழில் நிறைவுறை- ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ஆவார். அவரின் ஒள்ளிளமைக் காலத்தும் நள்ளிளமைக் காலத்தும் புறம் பெயர்த்துத் தொடுக்கப்பெற்றுள்ள இப் பாமாலை ஒவ்வொன்றனுள்ளும், அவரின் இன்றைய உரத்திறமனத்தையும், பசிய உள்ளத்தை யும், கொள்கைப் பூட்கையையும், கோளரிமாப் போக்கை யும், இடைநெகிழா நோக்கையும்,-திறனாய்வாளன் ஒருவன் மேம்போக்காகவே கூட கண்டு தெளியக்கூடுவான்!

பா ஒவ்வொன்றும் ஒளியவும் எளியவுமான சொற்களால் புனைவுறுத்தப் பெற்றிருத்தலால், - கருத்தும் அதன் விளக்க மும் தெளியவும் பொலியவுமாகி விளக்கொளிறுகின்றன!

கருத்துகளுக்கும் காட்சிகளுக்கும் ஏற்ற பாவின இயக்க வொழுங்கு, பாச்சுவை வேட்கும் அறிவினர்க்குப் பசி தணிக்கவல்ல தன்மையன!

'ஆற்றொழுக்கு, அரிமா நோக்கம், தவளைப் பாய்த்து அன்ன, சூத்திரநிலை',-என்ற பவணந்தியாரின் பாயிரவுரைப் பகுதி நூற்பாவுக்கு; இலக்கியஞ் செய்து விளக்கினாற் போன்ற ஓர் ஏற்ற நடைத்திறத்தை, இவ் வாசிரியப் பெருமகன் தோற்றி விளைத்த இப் பாவிய நூலுள் அயர்ந்து, தங்கி, நடந்து, ஓடிப் பறக்கும் பாச் செலவிடையே நாம் பார்த்து உவக்கலாம்!

பாவியம் படிக்கிறோம், எழுத்தைப் பார்க்கிறோம் என்ற நினைவேயில்லாதபடி, நூற்றிரைட்டிரையில் (நூல்தாள்திரையில்) காட்சிகளே கண்படுகின்றன! எளிய பார்வையிலேயே தெளியத் தென்படுகின்றன!

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் ஒருவரின், இளந்தை மனமும், அறிவும்,-அத்தகு சாறநிலையை யும் கருத் திருவையும் திறத்தையும் உள்ளடக்கியனவாகவே இருக்கும் என்பதை; இந் நூலாசிரியரின் அன்றைய படைப்புக ளுள்ளும் இன்றைய படைப்புகளுள்ளும் இடையறவின்றி இழையூடு நீடித் தொடர்வதை நுண்ணோக்காளன் ஒருவன் கண்டு, இம் மேற்கண்ட உண்மையுண்மையைத் தெளிவுற உணர இயல்வானுவான்!

தமிழின நல முதன் மீட்பர்,- மூதினத் தந்தை-புலமிகு. திருவள்ளுவப் பெருந்தகையாரின் ஒரு தனிச் செவ்வற விலக்கிய விலக்கணமாகிய திருக்குறளை ஆழ்ந்து உள்வாங்கிய குளிரிய நெஞ்சகத்தை இந் நூலாசிரியர் இளந்தைமைப் பேர்ழ்திலேயே நிறுக்கப் பெற்று நிறைந்திருந்தார் என்னும் ஓர் உண்மை,-இப் பாவிய நூலுள் காட்டப் பெறும் காட்சி களுக்கிடையிடையே இவர் கையாண்டிருக்கும் குறட்பொருள் களின் வெளிப்பாடுகளில் வெளிப்படுவதைப் பரக்கக் காணலாகும்.

சில சான்றுகள் :

(1—1) 'பூக்கும் பூவையாள் புலனைந் தின்பம்
தேக்கும் இன்பத் தேனிரா'

(பக்: 13 வரி: 73-74)
(ஒ; நோ: குறள் எண்: 1101)

(1—2) 'மக்களே போல்வர் கயவர் எனுமொழி
ஒக்கப் பொருளெலாம் உற்றது கண்டேன்'
(பக்: 26: வரி: 367-368)
(ஒ. நோ: குறள்: 1071)

(1—3) 'ஆன்றவிந் தடங்கிய அருளோய் கேட்க'
(பக்: 26: வரி: 373)
(ஒ. நோ: குறள்: எண்: 635)

(1—4) 'பொறுத்தேன் இறப்பினை என்றும் அதனை
மறந்தேன் இனியுன்னை மன்னித்தேன்'
(பக்: 33: வரி: 552-553)
(ஒ. நோ: குறள்: எண்: 152)

(1—5) 'அன்பும் அறனும் உடைத்தாய இல்வாழ்க்கைப்
பண்பும் பயனுமென் றாகிப் படர்ந்தது காண்'
(பக்: 58: வரி: 201-202)
(ஒ. நோ: குறள்: எண்: 45)

இப் பாவியக் கொத்தில் ஒளிரும் ஒவ்வொரு பாவியமும், ஒவ்வொரு தனித்தனிக் கதையை உடையதாகவும், ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு தீர்வு முடிவை உடையதாகவும் முறைப்பட்டு உள்ளன.

தமிழியப் பண்பையும் நாகரிகத்தையும் உலகியல் தெளிவையும் மானத்தையும் உரிமையுணர்வையும் சுட்டி அறிவு கொளுத்தி நிலைநிறுத்தும் பாங்கினவாக அவை அமைந்துள்ளன:

## அத்திப்பூ :

இக் கதையின் முகமை உறுப்பினர்களாக உள்ளோர், கதை நாயகன், கதை நாயகி கதை நாயகனின் நண்பன் ஆகிய மூவராவர். மற்ற கதையுறுப்பினர்கள் யாவரும் பொத்தாம் பொதுவாக வந்து போகும் துணைமைப் பொது வுறுப்பினர்களே !

கதை நாயகன் நாயகி ஆகிய இருவரின் திருமண நிகழ்ச்சிக்குப் பின்னர், கதை தொடக்கமாகிறது: இருவரும் ஒன்றிப் பிணையவந்த முதலிரவு முன்னிற்கின்றது! ஆம்

முதலிரவு!... ('முதலிரவு' என்ற பொருட்சொல், 'அத்திப்பூ' எனும் இப் பாவியக் கதையுள், 'தலைநாள் இரவு' (வரி: 23; ...39-40), 'அணியிரா' (வரி: 66), 'முதலிரா' (வரி: 68), தனியிரா (வரி: 70), 'தலையிரா' [வரி: 72], நல்லிரா [வரி: 76]; என்றவாறு தனித்தனி யழகொளிர் சொற்களால் புனைவுசெய்து காட்டப் பெறுகின்றது:)

முதலிரவுக்கென்று ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த நீல விளக்கொளி நிலவிய நல்லறையில், கோலவெண்திரைக் குள்ளிருந்த மென்மலர்க் குவியல் மிசைபரப்பப் பெற்றிருந்த உயர்காற்கட்டிலில், பாவியத்தலைவன், தலைவி வருகைக்காகக் கதவிடுக்கினிலே கண்களை அனுப்பி எதிர்பார்த்துத் துடித்துக் கிடக்கின்றான் !

மல்லிகை நறுமணம் மூக்கை மணக்கிறது! மெல்லிசை வளையல்களின் நல்லிசை கேட்கிறது! தலைவன் விழிகளைத் திறந்து நோக்குகின்றான்! வி தி ர் ப் பு ற நடுங்கியவாறு கதவொடு கதவாகக் கதைத் தலைவி உள்வந்து நிற்கின்றாள்!

விண்ணில் பறக்கவும் விசும்பில் தூங்கவும், உறவெதிர் கொள்ளவும் உயிர் துடித்தவாறு எதிர்பார்த்திருந்த தலைவனுக்கு தலைவியின் விதிர்ப்பும் நடுக்கமும் கலந்து கலங்கிய தோற்றக் காட்சியால் பதைபதைப்பு ஏற்படுகின்றது.

அந்த நேரத்தில், அந்த அறையில், அந்தச் சூழலில் ஓர் அமைதி அமைந்திருந்திருக்குமல்லவா? [ஒரு 'நிசப்தம்'] அந்த அமைதியை ஆசிரியர் சுட்டும் அழகைக் கொஞ்சம் எண்ணிப் பார்த்தாலும், உள்ளமெல்லாம் உகளிக் குதிக்கின்றது !

அங்கிருந்த அமைதியை ஆசிரியர் இப்படிச் சுட்டுகின்றார்!

'அமைதி! அமைதி! அசைவிலா அமைதி !
இமையின் துடிப்பும் எனக்குக் கேட்டது!'
[ப: 16: வரி: 153-154]

இவ்வகையாகக் கருத்தைத் துலக்கும் சான்றுமுறை, அரிதினும் அரிதானதாகும் என்பதை ஒப்பீட்டு நலங்கண்டு உணர்ந்து சுவைக்கும் இலக்கியத் தோயன் எவனும் ஆமோதி

ஒப்புக் கொள்ளவே கொள்ளுவான்! அவ்வளவு, 'அழகு! அழகு! ஈடிலா அழகு' - வாய்ந்தன, - இவ்வுரை முறையும் உட்புறத் தெளிவுமாகும் !

தலைவி அழுதுகொண்டே யிருக்கின்றாள்! அரற்றிக் கொண்டேயிருக்கின்றாள்! அந் நிகழ்ச்சியைப் 'பாவலரேறு' இவ்வாறு காட்டுகின்றார்!

'ஒன்றொன் றொன்றென உதிர்ந்தது கண்ணீர்!'

அவளின் நெஞ்சை இறுக்கிய நிகழ்ச்சியைச் சொல்லத் துடிக்கிறாள்! பொருமுகின்றாள்! இவ் விடத்தில், 'மாண்ட கண்ணகி மீண்டாள் போல'-என்ற உவமைகாட்டி [வரி: 320] ஒரே வரி வழி , அவளின் நிலைமையையும் சூழலையும், மனவுணர்ச்சியையும், அவளின் சினமும் பொருமலும் கவ்வி வெடிக்கும் தோற்றத்தையும், ஆசிரியர் நம் கண்முன் கொண்டுவந்து விடுகின்றார் !

மூன்றாண்டுகளுக்கு முன்னர், தன் அருமை நண்பி ஒருத்தியோடு அளவளாவியிருந்துவிட்டு, இருளில் மீண்ட பொழுது, ஒரு திருப்பு முனையில், நடையும் ஓட்டமுமாக வந்து கொண்டிருக்கையில் முன்பின் தெரியாத வன்மனத்துக் கயவன் ஒருவனால், தான் கற்பு சிதைக்கப் பெற்ற உண்மையை, அழுது அரற்றித் துடித்துக் கதறித்தன் தலைவனிடம் வெளிப்படுத்துகின்றாள் !

தலைவனோ, 'அக் கயவன் நானே,' என்கின்றான் ! அவளோ அவனை அறைந்துவிட்டுப் பின்னர் அவனின் கால்விழுந்து அரற்றி, 'என்னைப் பிழை பொறுத்து ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றேன்', என்கின்றாள்! தலைவனோ, 'முன்பு யான் செய்த பிழை முற்றும் பொறுத்தே என் புது வாழ்க்கையின் விளக்கை ஏற்றுக!' என்கின்றான்! இந் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கையில் இளஞாயிற்றொளி எழுந்துவரத் தொடங்கி விட்டமையால், மறு இரவை நோக்கி மங்கை ஏங்குகிறாள் !

இந் நாளில், 'முத்தப்பன்' என்னும் தலைவனின் நண்பன் தொடர்வண்டியில் வருவது பற்றிய தொலைவரி வருகின்றது. அவனை அங்கு தலைவன் சென்று வரவேற்கின்றான். இருவரும் ஆங்கொரு சோலைக்குச் சென்றமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்! திருமணத்தைப் பற்றி முத்தப்பன் கேட்கிறான்! தலைவன் அழுகின்றான்!-நடந்த நிகழ்ச்சிகளையும், 'கயல் விழி' கூறிய அதிர்ச்சியுரைகளையும் தலைவன் முத்தப்பனிடம் கூறுகின்றான்! 'நான்தான் செய்தேன்! என்று, அவளிடம் கூறினேன்' என்று தலைவன் சொல்லவும், உன்னவளை - நீ முன் உருக்குலைத்தது உண்மையோ?' என்று உள்ளங்குமுறி முத்தப்பன் கேட்கிறான்.

'அவளை இறக்காமல் காக்கத்தான், நான் பழியை ஏற்றேன்', என்று தலைவன் அழுகின்றான். முத்தப்பன் எழுந்து, நின்ற நெடுமரம்போல் நீள விழுந்து தலைவனிடம் அழுது, 'அக் கொடிய செயலைச் செய்தவன் நானே!' என்கின்றான்! தன்னை மன்னிக்கச் சொல்லி மன்றாடுகின்றான்! 'பொறுத்தேன் இறப்பினை என்றும் அதனை மறந்தேன், இனியுன்னை மன்னித்தேன்;' 'வா போவோம், வீட்டுக்கு' என்று முத்தப்பனைத் தலைவன் அழைக்கின்றான். 'குடியழித்த இந்தக் கொடியவனை உதறிவிடு' என்று கண்ணீர் மல்கக் கூறிவிட்டு, முத்தப்பன் பிரிந்து போகின்றான்!

தலைவன் வீடுவந்து சேர்ந்து, அவளிடம் மகிழ்ச்சி நிரம்பியவனாகவே வாழ்கின்றான்! இதுவே கதையமைப்பு!

இக் கதையின் தீர்வாகத் தாம் சொல்ல வந்த முடிவுக் கருத்து ஒன்றை, முத்தப்பன் வாயிலாகவே ஓரிடத்தில் ஆசிரியர் சுட்டி விடுகின்றார்!

'தித்தித்த நெஞ்சுணர்வால் தீயதையும் மன்னிப்போர்
அத்திப்பூப் போல அறியார்க்கு அறியாராய்
வல்லார் ஒருசிலரும் வாழ்கின்றார் இவ்வுலகில்!
அல்லார் அவரை அறிவதில்லை !

[பக்: 33: வரி: 564-567]

அத்திப்பூப் பூவாமல் ,அத்திக்காயின் தோற்ற மேயில்லை; காண்பதற்கு அரிதே காரணமாக, அத்திப்பூவே இல்லை யெனச் சொல்லிவிடல் இயலாது! அத்தகு பூக்களைப் போன்று. மாந்தர் சிலர் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டுதாம் இருக்கின்றனர் !

அறியார்க்கு அறியாதது அத்திப்பூ! அதே போன்று அறியார்க்கு அறியாதவராக வல்லார் ஒரு சிலர் இவ்வுலகில் வாழ்கின்றார் என்று இத் தலைவனைச் சான்றுக்குக் காட்டி நிறைகின்றார், இப் பாவியக் கொத்தின் பாவலரேறு!

தலைவியின் பெயர் 'கயல்விழி' என்றும், தலைவனின் நண்பன் பெயர் 'முத்தப்பன்' என்றும் அவரவரின் பெயர் களைப் பல்லிடங்களில் பயின்ற இப் பாவலர் பெருமகனார், கதையின் கருவுயிர்ப்பாக நின்றிலங்கும் பாவியத் தலைவன் அத்திப்பூப் போன்ற அருமையும் வல்லமையும் செறிந்த பண்பினனுயொளிறும் காரணத்தால், அவனின் பெயர் இன்னது என்பதாகப் பாவியத்துள் எங்கணுமே சுட்டாத நிலை, பாவிய அமைப்புக்கும் கருத்துக்கும் ஓர் உச்ச ஏற்றச் சிறப்பாகவே உள்ளது !

வழக்குரை காதை, நடுகல், பட்டமரம்; பெண்ணல்லள் பறவைகள் மாநாடு, - ஆகிய பாவியக் கொத்தின் பாதிப் பகுதிகள், தமிழர்களின் மானவுணர்வைக் குறிப்பாக மொழி யின மானவுணர்வைக் கிண்டிக் கிளறித் தூண்டிக் கீண்டி எழுப்பி விடுவதற்கென்றே எழுதப் பெற்றனவாயுள்ளன!

சில சான்றுகள் :

[1-1] 'கூறிவந்த எல்லா வளமும் குறைவற்று
நூறுபங்காய்ப் பன்னூறு நூற்றாண்டாய் நந்தமிழர்
வாழ்ந்துவர வில்லையா? வாய்த்ததென்ன அன்னவர்க்கே'
[பக்: 80: 145-147]

[1-2] 'தொல்லைப் படுகின்றார் தொன்தமிழர்; இன்னும்
சிறிதுகா லஞ்சென்றால் செந்தமிழும் மாறி
அரிதாந் தமிழரென ஆகுமென எண்ணுவாய்'
[பக்: 81: 168-170[

[1-3] 'நாட்டு நலிவாலும் நல்லறிவுக் கேடாலும்
வாட்டம் அடைந்திருக்கும் இக்கால், வடவோரும்
வேகின்ற வீட்டில் விழுந்ததெல்லாம் தாமெடுத்துப்
போகின்றார் போலப் புகுந்திங்கு மேய்கின்றார்'
[பக்: 83: 213-216]

[1-4] "தான் பிறந்த நாட்டுக்கும்
தாய்மொழிக்கும் செய்யும்
தனித் தொண்டே தமிழ்த் தொண்டாம்!"
[பக் : 98 : 14 : 1-2]

[1-5] "சாகையிலும் தண்டமிழை வாழவைத்துச்சாவாய்!
சாகாத பெரும்புகழைக் காவலிட்டுப் போவாய்!
வேகையிலும் நின்னுடலம் தமிழ்மணந்து வேகும்!
வெற்றுயிரும் செந்தமிழால் ஒளிசிந்திப் போகும்!"
[பக் : 98-99: 15:5-8]

[1-6] "சீர் சுமந்த தமிழ்த் தொண்டைப்
பூணுக, நீ! என்றேன்"
[பக் : 99: 17-2]

[1-7] "........... தமிழ் வித்தை ஊன்றின்
விளைவதெல்லாம் நல்லொழுக்கம்
வாய்மை அறம் அன்பே!"
[பக் : 19 : 17: 5-6]

[1-8] "பயிர்போலும் காய்ந்தது,
தொண்டுமழை யின்றிப்
பகலிரவாய்த் தெருத்தெருவாய்,
ஊர்ஊராய்ச் சென்றே
அயர்வின்றிச் செந்தமிழ்த் தொண்
டாற்றுக; நின்தொண்டால்
அடிகாயா முடிகாய்ந்த
தமிழ்ப்பயிரும் வாழும்!"
[பக் : 99 : 18 : 3-6]

[1-9] "நன்று செய்வேன்; இன்று செய்வேன்;
என்றுமினிச் செய்வேன்!
நான் பிறந்த நாடு மொழி
தமக்குத் தொண்டென்றான்!"
[பக் : 100 : 19: 7-8]

[1-10] நாம் பிறந்த நாட்டிற்கும்
செந்தமிழ்க்கும் கேடுவந்தால்
தாம்பறுந்த காளையென உள்ளம் தழலாதோ ?
கொஞ்சும் தமிழின் குரல்வளைக்குத் தீதென்றால்
நெஞ்சம் துடிக்காதோ? கூனும் நிமிராதோ ?
போக்கற்ற இந்தி, தமிழைப் புதைப்பதெனில்
தாக்குற்ற செந்தமிழர், தக்கைகளா பார்த்திருக்க?
(பக் : 105 : 15-20)

[1-11] "அத்தான்! நான் ஒன்றுரைப்பேன் ;
அன்னைத் தமிழ்க்கு உடலம்
செத்துமடிந் தீர் எனினும்
செம்மாந்து நான் சாவேன் !"
(பக் : 106: 53-54)

[1-12] "செந்தமிழ்க்கு நானும்
எனக்குத் தமிழ் அமிழ்தும்
சொந்தம் அத்தான் ! சொந்தம் !
உலகளவு சொந்தமென்பேன் !
நானும் தமிழச்சி !
என்குடியும் தொல்குடியே !"
(பக் : 107: 63-65)

[1-13] "எந்த உரிமையால் இந்தியைக் கொணர்விரோ,
அந்த உரிமையால்அதனை எதிர்ப்போம் !"
(பக் : 115: 106-107)

[1-14] "வெள்ளைக் காரனை எதிர்த்துப் பெற்ற
நொள்ளை உரிமை இதுவென்று உரைப்பின்
நீங்கள் அவனை எதிர்த்து நிற்கையில்
நாங்கள் மட்டும் நண்டா பிடித்தோம் !"
(பக் : 115-116: 110-113)

[1-15] "எந்தமிழ் மொழியில் நல்லுணர்வு இயற்கை !
அந்த உணர்வுதான் தமிழினம் அழியாது
இன்று காறும் இருந்து காப்பது"
(பக் : 116, 130-132)

[1-16] "அருள் அறம் மறம் சேர் அருந்தமி ழகமே
இருளில் வீழ்ந்தனை! என்றெழு வாயோ ?
புகழ்செய் புலவோர் புரந்தசெந் தமிழே
இகழ்படச் சாம்பினை! என்று அலர் வாயோ ?
பழிபடா வாழ்க்கைப் பைந்தமிழ் மகனே!
இழிபடக் கிடந்தனை! என்றெழு வாயோ ?
(பக்: 122: 258-263)

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், தமிழர்கள் தம் மொழி இன நாட்டுணர்வில் மழுங்கலுற்றுத் தேய்ந்திழியும் மானத்தைப் புதுக்கிக் கொள்ளவும், தம் வாழ்வியலிடையே பல்வேறு அகப்புறத் தாக்கங்களால் தளர்ந்து சரிகின்ற பண்பாட்டையும் நாகரிகத்தையும் திறமுறுக்கேற்றிச் செப்பஞ் செய்து கொண்டு நெகிழாது நின்று நேர்வழியைக் கடைப்பிடித்து நடையிட்டு முன்னேறவும், தன்னைப் பயனுக்கிக்கொள்ள வேண்டியே, இப் **பாவியக் கொத்து** இலங்குகின்றது என்பது தெளியத் துலங்குகின்றது !

யாக்கப் பெற்ற பாக்களால், கோக்கப்பெற்ற இப் பாவியத்துள் வார்க்கப் பெற்ற ஆக்கங்கள், நோக்கப் பெறுகையில் இவை மட்டுமே அல்ல !

இன்னும் இன்னும் பன்னூறுள !...
நுழைந்து சுவைத்து நுண்பொருள் தோய்கவே !

அன்பன்,
**ப. அருளி.**

# இரண்டாம் பதிப்பு முன்னுரை!

ஏறத்தாழ இருபத்துமூன்று ஆண்டுகளுக்குப்பின் இவ்விரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. முதல் பதிப்பு நூல்கள் தீர்ந்து ஏறத்தாழ எட்டாண்டுகள் ஆயினவெனினும் போதிய பொருள் வலிவின்மையால், இதன் மறுபதிப்பைத் தேவை கருதியும் உடனே வெளியிட முடியவில்லை. பின்னர் அச்சடிப்புத் தொடங்கியும் மெதுமெதுவாக ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பின்னரே இதை வெளிக் கொணர முடிகிறது.

இக் காலத்தில் தமிழ் ஆர்வம் ஓரளவு மிகுந்து வளர்ந்து வருகின்றதெனினும், தமிழறிவு அந்த அளவுக்கு இணைந்து வளர்வதாகக் கூறமுடியாது.

ஒருபுறம் தமிழ் அறிவும் உணர்வும் ஐந்து விழுக்காடு வள்ர்ச்சிபெற்றால், எதிரான நிலையில் தமிழ்க்கெடுப்பு முயற்சிகள் ஐம்பது விழுக்காடு ஏற்றம் பெற்று, அந்த வளர்ச்சியைக் குறைத்து வருகின்றன.

எனவே, தமிழ்மொழி வளர்ச்சி நிலையில் பெரிய போராட்டமே நிகழ்த்த வேண்டியுள்ளது.

தமிழ்மொழியை முன்னேற்ற விரும்புபவர்க்கு ஆதரவும் இல்லை; ஆக்கமும் இல்லை.

இந்நிலையில் என்ன செய்வது?

அடுத்து, இக்காலப் பாடல் இலக்கியம் தொடர்பாக ஒருசில கூற வேண்டியுள்ளது.

மரபுப் பாடல்களுக்கும், உரைப்பா என்னும் புதுப்பா (அதைக்கூட புதுப்பா என்று சொல்வதில்லை; புதுக்கவிதை என்றே கூறுகிறார்கள்.) வகைகளுக்கும் உள்ள உயர்வு சிறப்பை யாரும் உணரவில்லை.

அறிவு மேலோட்டமாகவே கொரிக்கப்படுகிறது!

யாப்பே தேவையில்லை என்கின்றனர். யாப்பு இல்லாமற் போனால் எப்படிப் 'பாட்டு' என்பது?

பாடுதற்கு உரிய-பண்ணுக்கு உரிய-சந்த அமைப்போடு கூடியதுதானே பாடலாயிருக்க முடியும்.

சந்த அமைப்பைச் சரிபார்ப்பதுதானே யாப்பு !

'அடிக்கோல்' இல்லையானால் ஓரடிநீளம் என்று எப்படிச் சொல்லமுடியும்? கையோ, முழமோ ஓரடி நீளம் ஆகுமா? ஒரு கை நீளம், ஒரு முழ நீளம் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, ஓரடி நீளம் என்று எப்படிச் சொல்வது?

எனவே, அடியளவு இல்லாதது அடியென்று சொல்ல இயலாததுபோல், பா அளவு இல்லாதது பாட்டு ஆகுமா ?

பா அளவுதானே யாப்பு !

ஏனோ தெரியவில்லை, இந்த வகையில் தெரிந்தவர்களெல்லாம் முரணிப் பேசுகிறார்கள்.

இனி, எதிர்காலத்தில், இவர்களெல்லாரும் சேர்ந்து எழுவாயும் பயனிலையும் இல்லாமலேகூட தொடர்களை(!) எழுதலாம்.

தாள் ஆடையை உடுக்க முற்படுபவர்களுக்கு, நூலிழை ஆடை எப்படிப் பிடிக்கும் ?

எப்படியோ? தமிழ் தப்பிப் பிழைத்து வருகிறது? இல்லெனில் தமிழையேகூட வேண்டாம் என்று இவர்கள் கூற முற்பட்டு விடுவார்கள் !

என் செய்வது? அழிந்து வரும் தமிழினத்தைத் தமிழே யல்லாமல் வேறு யார் தடுத்து நிறுத்திவிட முடியும்?

இனி, தமிழே அழியத் தொடங்கினால், தமிழைக் காப்பது எதுவாக இருக்க முடியும் ?

தமிழைத் தமிழேதான் காக்கும் !

எனவே, தமிழில் எழுதப்பெறும் செப்பமான இலக்கியங்கள்தாம் தமிழைக் காக்க முடியும் !

ஆங்கில இலக்கியங்கள் இருக்கும் வரை —

— சேக்சுபியர், மில்டன், டென்னிசன், ஓர்ட்சுஒர்த் — ஆகியோர் இருக்கும் வரை-ஆங்கிலம் அழியாது.

அதேபோல், திருக்குறளும், தொல்காப்பியமும், கழக இலக்கியங்களும் இருக்கும் வரை தமிழ் அழியாது.

மொழி மரம் என்ருல், இலக்கியங்கள் அதன் வேர். மரம் கோடையில் பட்டுப்போவது போல் தோன்றினுலும், அதன் வேர் என்றும் உள்ளதால், அடுத்து வரும் மழைக் காலத்தில் அது தழைத்து விடுவதுபோல், அழியாத இலக்கியங்கள் உள்ளவரை மொழி அழியாது.

அதேபோல் மொழி உள்ளவரை இலக்கியமும் அழியப் போவதில்லை.

மொழிக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு இது!

**'பாவியக் கொத்து'** எனும் இந்நூல் தமிழில் புதுவதாக மலர்ந்து வரும் சிறுகதை இலக்கியம் போலும், **சிறுபாவிய** இலக்கிய வகையைச் சேர்ந்தது.

சிறுகதை உரைநடை! சிறுபாவியம் பா நடை!

இதிலுள்ள சிறுகதைக் கருக்கள் எல்லாம் மனவியல் சான்றவை. படித்தபின் மனத்தில் அழியாமல் நின்று நிலைப்பவை!

ஆயிரம் வகையால் போலியும் பொய்ம்மையும் ஆரவாரக் கூத்துகள் ஆடினுலும், உண்மைகள் வயிரச் சுரங்கங்களாக என்றுமே நிலைத்திருப்பன. அவற்றை அழிக்க யாராலும் முடியாது!

இப் **'பாவியக் கொத்து'** அந்த வகை!

இதை இரண்டாம் முறை அச்சிட்டு வெளிக்கொணர்வதற்குள், அப்பப்பா போதும் போதுமென்ருகிவிட்டது.

வழக்கம்போல் என் மகன் **பொழிலனுக்கு** இதை வெளிக்கொணர்வதில் நிறைய பங்குண்டு.

உங்கள் ஆதரவை நம்பித்தான் நாங்கள் அனைத்தையும் செய்கிறேம்!

தமிழ்தான் நமக்குத் துணை.

சென்னை — 5.
கன்னி ௩௦
16—10—85

**பெருஞ்சித்திரனர்.**

பாவியக் கொத்து

# பிழை திருத்தப் பட்டி

| வரிசை எண் | பக் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 9 | 15 | நிலேபடுத்துகின்ருர் | நிலேப்படுத்துகின்ருர் |
| 2 | 11 | 39 | நடத்திட | நடந்திட |
| 3 | 27 | 401 | ‘இங்குவா’... | ‘இங்குவா’ என்று |
| 4 | 28 | 442 | களேயொடு | கலேயொடு |
| 5 | 29 | 464 | தலேக்கேறிப்! | தலேக்கேறிப் |
| 6 | 47 | 68 | நீங்கியவள் | நீங்கி, அவள் |
| 7 | 50 | 135 | கண்ணிருந்த | கண்ணிருக்கும் |
| 8 | 51 | 165 | பேரோளியை | பேரொளியை |
| 9 | 58 | 35 | ஆராங்கே ? | ஆரங்கே? |
| 10 | 58 | 44 | நினேவற்க | நினேயற்க |
| 11 | 58 | 58 | நல்லுணர்வு | நல்லுணவு |
| 12 | 62 | 148 | வண்மைக் | வன்மைக் |
| 13 | 63 | 180 | ஊரும் | ஊறும் |
| 14 | 63 | 186 | குரல்வளேயகை் | குரல்வளேயைக் |
| 15 | 75 | 30 | என்றவனு | என்றவனும் |
| 16 | 77 | 64 | உரைகின்ருள் | உரைக்கின்ருள் |
| 17 | 83 | 218 | சொத்தணேத்தும் | சொத்தனேத்தும் |
| 18 | 86 | 21 | வலமுமாய்க் | வலமுமாய்ச் |
| 19 | 109 | 106 | மந்திந் தனத்தை | மந்தித் தனத்தை |
| 20 | 110 | 13 | பாவிதயதுள் | பாவியத்துள் |
| 21 | 116 | 129 | கிளேயா! | கிளேயா! |
| 22 | 117 | 143 | மாந்நர் | மாந்தர் |
| 23 | 120 | 215 | இடர்பாக்கித்தான் | இடர்பாக்கித் தான்யன் |
| 24 | 121 | 266 | கிடக்கு தென்றே | கிடக்கிற தென்றே |



# அத்திப்பூ

- முன்னுரை

பிழையே செய்யாதவருக்கிருப்பதைவிடப் பிழையைச் செய்து, அதற்காக வருந்தித் திருந்துபவருக்கு மிகவும் மன வலிவு வேண்டும்; இவரை விடப், பிழை செய்வோரைப் பொறுத்துக் கொள்பவருக்கு மிக்க மனவலிவோடு அருளும் வேண்டும்; இவரினும் பொறுத்துக் கொண்ட பிழையை மறப்பவருக்கு மிகுந்த மனவலிவும், அருளும் தெளிந்த அறிவும் வேண்டும்.

பிழை செய்யாதவர் தம்முடைய வாழ்வைமட்டுமே நிலைப்படுத்துகின்றார்; அதைச் செய்து வருந்தித் திருந்துபவர் பிறர் வாழ்வை நிலைப்படுத்துகின்றார்; பிறர் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்பவரோ, தம் வாழ்வோடு, பிறர்வாழ்வையும் நிலைப்படுத்துகின்றார். அதனை மறந்து விடுபவரோ, மக்கள் குலத்தையே நிலைப்படுத்துகின்றார்

பிழை செய்தார், பிழை செய்யப்பட்டார், பிழையைப் பொறுத்து மறப்பார் ஆகிய மூவர் வாழ்க்கைக் கோணங்களும் ஒரு புள்ளியிற் கூடுமானால் ................ அப்புள்ளியில் எழும்பும் உணர்வு அலைகள் ........................!!

## 1· அத்திப் பூ! (1959)



# 1

முழுநிலா வெழுந்தது! மூச்சிலும், நெஞ்சிலும்
எழுநிலா முகத்தின் எழிற்கொடி-என்றன்
கையைத் தொட்டுக் காலையில் மணந்த
பைங்கிளி உருவே பரவி யிருந்தது!

முற்றத் திருந்தேன்; முன்னுள வாயிலில்
உற்ற உறவினர் ஓயாப் பேச்சும்,
சிறுவர் முழக்கிய சிரிப்பும் ஓலமும்,
குறுநடைக் குழவிகள் குரலெழு இசையும்
விரும்பா விடினும் விழுந்தன செவிகளில்!
அரும்பா மலர்கள் காற்றிற் கசைவதாய்
விளையாட் டயர்ந்தனர் விளையாச் சிறுமியர்!
களியாட் டாழ்ந்தனர் காளையர் ஒருபுறம்!

அகன்ற உள்ளறை அடைத்துள பெண்டிர்
புகன்ற பகடியும், புகழ்ச்சியும், இகழ்ச்சியும்
தந்தம் திருமணத் தன்று நடந்ததும்,
தந்தங் கணவரைத் தாமுதற் கண்டதும்,
பூனையா யிருந்தவள் புலிபோல் வளர்ந்ததும்,
ஆனையா யிருந்தவள் அருகாய் இளைத்ததும்,
தந்திரு மணங்களின் தாயர் வரிசையும்,
வந்திருந் தார்பால் வந்த பரிசிலும்,
தூங்குங் காலையில் தொலைத்த தொங்கலும்,
ஆங்கொரு பெண்ணதை அடிமடி யொளித்ததும்,

தலைநாள் இரவில் தனக்குக் கணவன்,
விலையிலா தீந்த விரலணி வீழ்ந்ததும்,
முதல்நாள் அவன்றன் முன்வர அஞ்சிக்
கதவிடுக் கில்அவள் கணவனைக் கண்டதும்,
இற்றையோ அவள்முன் இவன்வர அஞ்சி
ஒற்றைக் காலால் ஒருநூறு கரணம்
'இடு'எனும் முன்னம் 'எண்ணுநீ' என்பதும்,
'விடுவிடு' எனினும் விடாமல் தொடர்வதும்,
'பிள்ளையே வேண்டா' வென்று பிணங்கியள்
உள்ளும் புறமும் ஒன்பதைப் பெற்றுப்
புடலங் காயாய்ப் போனதும், பூசுணை
உடலுடை ஒருத்தி ஒன்றுக் கேங்கலும்
இன்ன பற்பல இளமை நிகழ்ச்சிகள்
அன்னவர் பேச்சில் அடிபட் டாலும்,
என்செவி என்னவோ ஏறவே இல்லை;
இன்மொழி ஒருத்திசொற் கேங்கின அவையே!

இரவு நடத்திட இருக்கும் தலைநாள்
இரவு நிகழ்ச்சியில் என்மனம் ஒன்றிச்

சுற்றிய காட்சிச் சூழலை மறந்து
வற்றிய நிலத்தில் வருபுனல் போலப்
பெருகிய உணர்விற் பின்னிய நினைவால்
உருகிய நெஞ்சோ டுட்கார்ந் திருந்தேன்.

இராவிருந் தயின்றவர் ஏகினர்; என்தாய்
வராவிருந் தோடி வரவேற் பதுவும்,
வெற்றிலைத் தட்டுடன் விரைவது மாக
முற்றத் திருந்தார்; முதிய தந்தையும்
பெரியவர் சிலரொடு பேசி யிருந்தார்;
உரியவென் தங்கை உவகை விழியோ(டு)
என்பால் நெருங்கி "இனிமேல் உங்கள்
அன்பும், என்பும் அண்ணிக் குரியன;
இலையா? அண்ணா?" என்றனள்; அந்த
விலையிலா அன்பை வியந்து,அவள் கையைப்

பற்றி, இழுத்துப் பனிமுகங் கிள்ளி
நெற்றி நீவி, 'என்நெஞ்சில் ஒன்றிய
அருமைத் தங்கையே! அண்ணியும் உன்றன்
பெருமை கேட்பின் பெரிதுவப் பா'ளெனச்
சொல்லி விடுத்தேன். சுவைவிருந் துண்டு
நல்ல நண்பர் நால்வர் நெருங்கினர்!
'இருந்துபோ' என்பாய், இனியோ உண்ட
விருந்து முடிந்தது வீடுபோ' என்பாய்!
இன்றை இராவோ இல்லறத் தரசி—
மன்றவிற் பின்னிய மலர்க்கொடி வந்தே
ஓவியத் துருவை உள்ளத் திருத்தி
ஆவியைப் பறிக்கும் அணியிரா! இதுவரைக்
கண்டுகண்டு உவந்த கனவு நிகழ்ச்சியை

உண்டு உண்(டு) உவக்கும் உவகை முதலிரா!
மேவுகலை எல்லாம் மேலன்று; உணர்வைத்
தூவுகலை மேலெனத் தோற்றும் தனியிரா!
ஒற்றைத் தனியனாய் உலகத் திருந்தவன்
கற்றைக் குழலொடு கலக்கும் தலையிரா!
பூக்கும் பூவையள் புலனைந் தின்பம்
தேக்கும் இன்பத் தேனிரா இஃதாம்;
உள்ளம் என்பதும் உயிர்,உடல் என்பதும்
விள்ளியுங் கட்கு விளக்கும் நல்லிரா!
மேவும் ஈருயிர் மின்னிப் பொருந்தி
மூவுயிர் ஆகும் முதலிரா! இஃதாம்!
இவ்விரா உங்கட்(கு) இன்பம் வழங்குக!
கவ்விய இருளும் களிப்பை நல்குக!
இன்று முளைத்த எழில்நிலா வானில்
நின்று பொழிக நீடிய இன்பமே"
என்று வாழ்த்தினர் இனிய தமிழில்!
நன்றென நவின்றேன்; நகர்ந்தனர்; தனித்தேன்.

அன்னை வந்தார்; "அன்புறு மகனே!
முன்னை ஈன்று மூழ்கிய இன்பம்
குன்றள வாயின் கோதை ஒருத்தியோ
டின்றுனைச் சேர்த்த இன்பமோ, வானினும்
பெரிதே! வேறென் பேசுவேன்? நீ எனக்(கு)
அரிதாய்க் கிடைத்த அருமைச் செல்வம்!
என்னை மறவா திருப்பாய் தம்பி; உன்
அன்னையின் ஆவல் அவ்வள வேதான்"-
என்று கூறினார்; இருகை யாலும்
குன்றுதோள் நீவிக் குறுநுதல் தடவி
உச்சித் தலையில் உள்ளங் குளிர
இச்சிச் சென்றே ஏழெட்டு முத்தம்

பொழிந்தார்; அவர்தம் பொன்முகம் நோக்கினேன்
வழிந்தது கண்ணீர்! வாயெழ வில்லை;
பொன்னடி வீழ்ந்தேன்; பூங்கையால் தடுத்தார்.
அன்னையின் அன்பை அளவிலா துண்கையில்
அன்னையைத் தந்தை அழைத்தார்; அவரும்
என்னை விடுத்தே உள்ளறை ஏகினார்.

நால்வகைப் பேச்சும் நடந்த தாயினும்
சேல்விழி நினைவிலென் நெஞ்சம் சுழன்றது!
காலையிற் கண்ட கவின்நிலா முகத்திலும்
சேலினை யொத்த விழியிலும், சிரிப்பிலும்,
மெல்லிய தோளிலும், மென்விரல் நெளிவிலும்,
ஒல்லி இடையிலும், ஒசிந்த நடையிலும்,
மூழ்கி யிருக்கையில் முதியவர் ஒருவர்
'வாழ்க மனையறம்' என்றே வாழ்த்தி
'எழுங்கள் தம்பி!' என்றார்; அந்தக்
கொழுந் தமிழ் நெஞ்சைக் குளிர்மை செய்ததும்
எழுந்தது நெஞ்சம்; எழுந்தன கால்கள்;
எழுந்தது வாழ்க்கை; எழுந்தது நல்லறம்;
எழுந்தேன், நடந்தேன்; எழிலறை போகி
விழுந்தேன் படுக்கையில், விண்ணில் பறக்கவே!

# 2

நீல விளக்கொளி நிலவிய நல்லறை!
கோல வெண்திரை! மென்மலர்க் குவியல்!
உயர்காற் கட்டில்! ஒண்பூ விரிப்பு!
மயர்வறு நறுங்கனி! மணமெழு பூம்புகை!
தேம்பூங் கட்டி தூவிய தீம்பால்!
தாமரை யிதழ்போல் தளிர்வெள் ளிலைகாய்!
வெள்ளிச் செம்பில் விடாய்க்கென நறுநீர்!
அள்ளிப் பூசுதற்(கு) ஆரக் குழைவு!
வெயர்வைத் துண்டு! வெட்டிவேர் விசிறி!
அயர்வற உண்ணற்(கு) ஆநெய்ப் பண்ணியம்!
எனப்பல வாக இருந்தன-

-இவற்றில்
நினைப்பில தாக நெடுங்கட் பிறைநுதற்
பாவையின் வரவெதிர் பார்த்தது நெஞ்சம்!
பூவையின் மணிநடை பொதிந்தன செவிகள்!
நுண்ணிடை வருவழி நோக்கின கண்கள்!
பண்மொழிக் குரைதரப் பதைத்தது கடிவாய்!
துவரிதழ் கவ்வத் துடித்தன இதழ்கள்!
இவர்கிளிக் கிடந்தர எழுந்தன தோள்கள்!
புறவெதிர் கொள்ளப் பறந்தன கால்கள்!
உறவெதிர் கொள்ள உயிர்துடித் ததுவே!

துடித்த வல்லுயிர்த் துணுக்கை யடக்கி
வடித்த எழிலுரு வந்ததும், 'அவளொடு
முதன்முதற் பேசும் முதற்சொல் ஏது'என

கதவிடுக் கினிலே கண்களை அனுப்பி
எண்ணி இருந்தேன்; இருந்தேன்! இறக்குமுன்
நண்ணிய பெண்களின் நடையும் சிரிப்பும்
கேட்டன; உள்ளம் கிறங்கிய(து)! உடலம்
ஆட்டமுற்றதே! ஆவல் அடைத்தது!
கண்களை மூடினேன்! கலகல வென்று
பெண்கள் நகைத்த பெருநகை தேய்ந்து,
மல்லிகை நறுமணம் மூக்கை மணந்தது!
மெல்லிசை வளையல் நல்லிசை கேட்டது!
விழிகளைத் திறந்தேன்! வெதிர்ப்புற நடுங்கிப்
பழியிலா ஓவியப் பாவை விளக்குக்
கதவொடு கதவாய் நின்றது கண்டேன்!

பதைபதைத் ததே,என் பழியிலா நெஞ்சம்!
அமைதி! அமைதி!! அசைவிலா அமைதி!
இமையின் துடிப்பும் எனக்குக் கேட்டது.
வெளிப்புறத் திருந்தவர் வேறுவீ டேகினர்!
களிப்போ டெழுந்தேன்! களைத்தேன்; அமர்ந்தேன்;
ஒருநொடி தாழ்த்தி உள்ளத் துணிவொடும்
பெருமகிழ் வோடும் பின்னும் எழுந்தேன்.
அந்த மயிலை, அழகுப் பாவையைச்
சிந்து கலையெழிற் சேர்ந்த கிளியினை,
நெருங்கினேன்; நின்றேன்; நெடுமூச் செறிந்து
கருங்குழல் நீவிக் 'கயல் விழி' என்றேன்.

மின்னி யதிர்ந்திட, மேனி குலைந்திட,
என்னிலை யழிந்துகொண் டிருக்கையில், ஏந்திழை
ஆல்விழு தொன்றங்(கு) அற்றுச் சாய்ந்ததாய்க்
கால்விழுந் தலறினள், கைகால் பதறினள்;

நெடுந்தரை அறைந்தாள்; நீள்குழற் பிய்த்தாள்;
படுந்துயர் வுற்றாள்; பதைபதைப் பேற்றாள்;
'அத்தான், அத்தான், அத்தான்' என்றே
பித்துரை பயின்றாள்; பீடழித் துயிர்த்தாள்;

நடுங்கினாள்; நாணினாள்; நான்தொட விலகி
ஒடுங்கினாள்; அடங்கினாள்; உரையிலா(து) அரற்றினாள்;
'ஐயகோ' என்றாள்; 'அன்னாய்' என்றாள்;
'உய்வனோ' என்றாள்; 'உலகமே' என்றாள்;
துடித்தாள்; துவண்டாள்; துயரினால் தலையில்
அடித்துக் கொண்டாள்; அறைந்துகொண் டாளே!
தரையே பிளந்து தணற்குழம்(பு) எழுந்ததாய்
உரையிலா துள்ளம் ஒடுங்கிய(து) எனக்கு!

விண்ணில் பறக்கவும் விசும்பில் தூங்கவும்
எண்ணிய எண்ணம் எல்லாம் புதைந்தன.
துடித்த கைகள் தொடவும் அஞ்சின.
அடித்த தென்றலும் அனலெனச் சுட்டதே!
அருவி நீராய் அழுதவள் கண்ணீர்,
பெருகிட யானும் பேச்சிலா துயிர்த்தேன்!

அழுதாள்; அழுதாள்; அயர்விலா(து) அழுதாள்;
ஒழுகுநீர் உதிர்த்தே உரையிலா(து) அழுதாள்.

(வேறு)

உளமிருந்தது; உணர்விருந்தது; அழுதாள்!-அதில்
ஊறுகின்ற நினைவிருந்தது; அழுதாள்!
வளமிருந்தது; வனப்பிருந்தது; அழுதாள்!-அதில்
வாழ்க்கை என்ற கனவிருந்தது; அழுதாள்!
குளமிருந்தது; நீரிருந்தது; அழுதாள்!-அதிற்
குளித்து மூழ்க வழியிருந்தது; அழுதாள்!
மளமளவென நீர்வழிந்தது; அழுதாள்!-என்
மடியிருந்தது தரையில் புரண்டே அழுதாள்!

இடமிருந்தது; இரவிருந்தது; அழுதாள்!-நெஞ்சில்
இளமை என்னும் தேனிருந்தது; அழுதாள்!
தடமிருந்தது; காவிருந்தது; அழுதாள்!-நாங்கள்
தனிமை என்னும் நினைவிருந்தது; அழுதாள்!
உடலிருந்தது; அழகிருந்தது; அழுதாள்!-நாங்கள்
ஒன்றிப்போன நிலையிருந்தது; அழுதாள்!
குடலிருந்தது; வயிறிருந்தது; அழுதாள்!-நாங்கள்
கூடிமகிழப் பசியிருந்தது அழுதாள்!

காற்றிருந்தது; கனப்பிருந்தது; அழுதாள்-நான்
கணவ னென்ற உறவிருந்தது; அழுதாள்!
ஊற்றிருந்தது; மாற்றிருந்தது; அழுதாள்!-என்
உள்ளத்தவளின் உறவிருந்தது; அழுதாள்!
நேற்றிருந்த நிலையிறந்தது; அழுதாள்!-இனி
நீங்கிடாத பிணைப்பிருந்தது; அழுதாள்!
ஏற்றிருந்த பொறுப்பிருந்தது; அழுதாள்!-நான்
இருந்தும் எண்ணி விசித்து விசித்துஅழுதாள்!

பாலிருந்தது; பழமிருந்தது; அழுதாள்!-உள்ளப்
பதைப்பிருந்தது; வாய்திறந்து அழுதாள்!
சேலிருந்தன போலிருந்தன விழிகள்-நன்குச்
சிவந்திருந்தன; மேலும் மேலும் அழுதாள்!

ஆலிருந்தது போலிருந்தது என்தோள்-முகத்தை
அதிற்புதைக்க வழியிருந்தது; அழுதாள்!
காலிருந்தது தலையிருந்தது அதன்மேல்-அவள்
கண்கள் வடித்த நீர்வழிந்தது; அழுதாள்!


(வேறு)

களிப்பாளென் றெதிர்பார்த்தேன்; காணேன் இன்பக்
காதலெனும் உணர்வுவெள்ளத் தவளும் வந்து,
குளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; குறியுங்காணேன்.
கூடலுக்கு முன்னூடல் காட்டி, முத்தம்
அளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; அதுவுங் காணேன்
அருகுநுனி விளக்கொளிக்கும் உடலைக் காட்டா
தொளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; ஒன்றுங்காணேன்;
ஒசிந்துவிட்ட மலர்க்கொடியாய்க் கால்வீழ்ந்தாளே!

வித்திடுவாள் வாழ்வுக்கென் றிருந்தேன், காணேன்;
விலக்குகின்ற கைவிலக்கி முகத்தைக் கையால்,
பொத்திடுவாள் என்றிருந்தேன்; பொத்தக் காணேன்;
பொருதோளிற் பசுங்கிளியாய்த் தாவி வந்து
தொத்திடுவாள் என்றிருந்தேன்! தொத்தக் காணேன்!
தொலைவறியாப் பேரின்பங் காட்டிக் காட்டி
ஒத்திடுவாள் குளிர் முகத்தை என்றிருந்தேன்!
ஒடிந்துவிழும் மலர்க்கொடியாய் அடிவீழ்ந் தாளே,

(வேறு)

தலையிரா இனிக்கும் என்றனர்; காணேன்;
தணிப்பறியாப் பெருந் துன்பம்!
இலைவிரித் தே,சோ றிட்டனர்; அதனை
எடுத்துணக் கையிழந் தவன்போல்
நிலையிருந் தேயவள்; நினைப்பாள்; அழுவாள்;
நெட்டுயிர்ப் புறுவாள்; மெழுகை
உலையிலிட் டதுபோல் உருகுவாள்; குலைவாள்;
'உற்றதென்?' என்றறி யேனே!



## 3

நாழிகை நடந்தது; நள்ளிருள் நேரம்.
'வாழிய முதலிரா' என்று வாழ்த்திய
நண்பர் முழக்கம் நாணம் தந்தது.
பெண்கள் கூடிப் பேசிய பேச்சு
நெஞ்சில் ஒலித்ததே! அவர்க்கு நிகழ்ந்த
விஞ்சு நிகழ்ச்சியை விஞ்சிய தெனக்கு
வந்து வாய்த்த வளமிலாக் காட்சி!
அந்தப் பெண்டிர் அனைவரின் கூற்றிலும்
நான்காண் கின்ற நலமிலாக் காட்சிபோல்
தோன்றிடக் காணேன்! என்ன தொல்லையோ?
என்னை மணந்த ஏந்திழை தனக்கே!

அன்னையைப் பிரியும் ஆறாத் துயரோ?
முன்பின் உணரா எனக்கு மொய்குழல்
தன்புது நலத்தைத் தருவதில் அஞ்சிக்
குளிர்முகம் குளிரக் குளிரஅழு தனளோ?
தளிரிதழ் காதல் தழற்கஞ் சாதோ?
ஏந்திழைக் கென்னைப் பிடித்ததோ இல்லையோ?
தேர்ந்த தன்னுளத் திருவுரு வேறோ?
இவைவிட் டவளை எதுவருத் தியதோ?
கவையற் றிருந்த கடிமலர்க் கொடிஅவள்!
அவளைத் தாங்கிய அயராக் கொம்பு,யான்!
துவளத் துவள அழுது துடித்திட
வேறென் காரணம் உண்டென விளங்கிலேன்;
கூறெனக் கேட்கவும் நெஞ்சங் குன்றினேன்!

குழப்பம் என்றன் அறிவைக் குடைந்ததே!
இழப்பதோ இரவை? என்னென் றாகிலும்
‘நாமே கேட்போம்’ என்று நயந்து-
“நாமே உள்ளோம்; நமக்குள் பிரிவிலை!
கயல்விழி! நானுன் கணவன் என்பதற்(கு)
இயைந்ததும், உள்ளம் ஏற்றதும் உண்மையின்
உன்னை வருத்திய துன்பம் உரைப்பாய்;
என்னை வேறென்(று) எண்ணின் மறுப்பாய்”
என்று கூறியவ் வெழில்முகந் திருப்பினேன்.

ஒன்றொன் றொன்றென உதிர்ந்தது கண்ணீர்!
பின்னும் பேசினேன்; “பேதைப் பெண்,நீ!
இன்னும் அழுவதால் எனக்கு விளங்குமோ?
இங்குப் பார்என்னை; என்னைப் பிடித்ததா?
தங்கு வாழ்வில் தனித்துணை யாக
இருப்பேன் என்கிறேன்; ‘இல்லை’யென் பாயா?
விருப்ப மிலாமல் மணந்து விட்டனை
என்று நினைக்கின்றேன்; ‘இல்லை’யென் பாயா?
நன்று விண்டிட வேண்டும்; நாணமேன்?
இன்னும் நானுனை இம்மியும் தீண்டிலேன்.
என்னை வெறுப்பையேல், இதோ,இந் நொடியே
உன்னைக் கவர்ந்த ஒருவனை அழைத்து
நின்னை அவனொடு நீள்நகர் அனுப்பி,
‘வாழ்வை உனக்கு வகுத்துக் கொடுத்(து)உன்
தாழ்வைப் போக்குவேன்; தடையிலா தென்னை
நம்பி யுரைப்பாய்” என்று நவின்றதும்
வெம்பும் நெஞ்சம் வெடித்தது போலக்
கீழ்வரு மாறு கிடுகிடு வென்று
பாழுரை செய்தாள்; என்னெனப் பகர்வேன்?

"அத்தான்!-இப்படி உங்களை அழைக்க
ஒத்திலை உள்ளம்; எனினும் நீங்கள்
துன்புறத் தாளேன்; அதனால் துணிந்துளேன்;
இன்புறும் நினைவொடு இத்திரு மணத்திற்(கு)
ஒப்பிட வில்லை என் உள்ளம்; என்னைக்
கப்பி இருக்கும் கடும்புயல் நினைவை
என்முன் விரிந்துள இவ்வை யத்துள்
நன்மனங் கொண்டொரு நல்லவர் பால்யான்
சொல்லத் துடித்தேன்; சொல்லி என்னுயிர்
கொல்லத் துணிந்தேன்; அத்தான், உங்களை
அருளும் அறிவும் உள்ளவர் என்று
பெரியோ ரெல்லாம் பேசிக் கொண்டதைக்
கேட்டு வியந்ததால் எனைக்கேட் டவர்க்குக்
'கூட்டுவீர் மணத்தை' என்றுரை கொடுத்தேன்.
உள்ளத் துணர்வெலாம் உங்களின் முன்னே
வெள்ளப் பெருக்கென விரித்திடத் துணிந்தேன்.
நெஞ்சை இறுக்கிய நிகழ்ச்சியைச் சொன்னதும்
எஞ்சும் என்னுயிர் ஏகிடும் அத்தான்!

வாய்மையும் அன்பும் உங்கள் வழியெனின்,
தூய்மையே உங்கள் துணையெனின், அத்தான்
என்னைப் பொறுப்பீர், என்னைப் பொறுப்பீர்!
"உன்னைப் பொறுத்தேன்" எனுமொரு சொல்லே
மண்ணில் பிறந்து மாண்பினை யிழந்த,யிப்
பெண்ணின் பிறப்பைப் பீழையின் றாக்கும்!
வேண்டு கின்றேன் அத்தான்" என்று
மாண்ட கண்ணகி மீண்டாள் போலப்
பொருமினாள்; நெஞ்சு புழுங்கினாள்; எனைக்கண்
டுருகினாள்; மேலும் உரைப்பா ளாயினள்:

''ஐயகோ! அத்தான் அழிந்திலாப் பேதை
வெய்ய கொடுமை விளைத்தேன்; உங்கள்
வாழ்வைக் கெடுத்தேன்; எனினும் சிறந்த
வாழ்வைக் கொடுப்பேன்; எனவை யாதீர்;
எந்தப் பெண்ணை இனியளென் றீரோ,
எந்தப் பெண்ணை ஏற்றுவந் தீரோ,
எவளை மனைவியென் றிருமாந் தீரோ,
எவளைத் துணையென எண்ணிநின் றீரோ
யாரைத் தழுவிட ஏங்கிநின் றீரோ,
யாரைப் புரையிலா ளென்றிருந் தீரோ,
அந்த ஒருத்தி, ஐயகோ அத்தான்,
வெந்த உளத்தவள், வேறொரு தீயனால்
உண்ணப் பட்டவள்; ஐயகோ உலகமே!
உண்ணப் பட்டவள்; உரங்கெட் டவளே!''
என்றனள்; என்றனள்; என்றுயிர் தன்னைக்
கொன்றனள்; கொன்றனள்; கூற்றமாய் என்முன்
நின்றனள்; நின்றனள்; நெஞ்சைப் பிசைந்து
தின்றனள்; தின்றனள்; தீயினுங் கொடியளே!



# 4

மயக்கம் தெளிந்தது மனஞ்செய லற்றதே.
இயக்கம் இன்றி எழாமற் புரண்டேன்.
பச்சைக் கொடியாய்ப் பசுங்கிளிக் குஞ்சாய்
அச்சுப் பாவையாய் அவள்கிடந் தாளே!
'நெஞ்சம் இறுக்கிய நிகழ்ச்சியைச் சொன்னதும்
எஞ்சும் என்னுயிர் ஏகிடும் அத்தான்'
என்று,அவள் கூறிய(து) எண்ணினேன்; எழுந்தேன்;
நின்றேன்; உன்னினேன்; நெருங்கினேன்; வாழ்வைக்
கருதினேன்! தொட்டிடக் கைநீட் டும்முன்
உறுதி பூண்டேன்; ஒருநொடி தயங்கி
வருவது தீங்கே என்னினும் வருகென
இருகை நீட்டி ஏந்திழை யாளைத்
தூக்கிக் கிடத்தினேன் தூமலர்ப் படுக்கையில்!
தேக்கிய அருளால் நெஞ்சம் திகழ்ந்ததே!
நீரைத் தெளித்தேன்! நீள்விழி மலர்ந்தாள்.
தாரையாய்க் கண்ணீர் வழிந்திடத் தளிர்க்கொடி
எழுந்தாள்; எழுந்தே என்னடி வந்து
விழுந்தாள்; விழுந்து வெம்பினாள்; புழுங்கினாள்;
கண்களில் எனக்கும் கசிந்தது கண்ணீர்!
பெண்களின் கொடுமையைப் பேசநாத் துடித்ததே,

அவளே தொடர்ந்தாள்; "அத்தான் ஒன்றும்
கவலைப் படாதீர்; கண்ணிமைப் பொழுதே
எனினும் உங்களோ டிருந்த வாழ்க்கையே
இனியது! முழுச்சிறப் பேற்றதே! இனிஎனைத்

தீண்டுதல் வேண்டா! தீதிலா உளத்தீர்
வேண்டுவேன் ஒன்று! விரிந்தயிவ் வுலகில்,
'மக்களே போல்வர் கயவர்' எனுமொழி
ஒக்கப் பொருளெலாம் உற்றது கண்டேன்!

விரும்பிக் குலைந்தவள் அல்லள். விளக்கிடாப்
பெரும்பே ரிடர்வரப் பிழைசெய் தேனே!
என்னைக் குலைத்தவன் எவனென அறியேன்!
அன்னைக் குரைத்திலேன்; ஆருமஃ தறியார்;
ஆன்றவிந் தடங்கிய அருளோய் கேட்க!
மூன்றாண் டிற்கு முன்னை நடந்தது;
ஒருபுன் மாலை; ஊர்முனை யிருந்த
அருமை நண்பி ஒருத்தியோ டளவி
இருளில் மீண்டேன்; எவரும் காணா
ஒருமுனை திரும்பி ஓடு நடையுடன்
வந்துகொண் டிருந்தேன்; வந்தவள் என்பின்
வந்துகொண் டிருந்தான், வன்மனத் தொருவன்!
அவன் வர(வு) அறியேன்; ஆள்உரு மறைக்கும்
குவியிருள் முடக்கில் கொடுங்கை இரண்டு
வாயினைப் பொத்தின; வால்விழி கட்டின.

ஆய கொடுநிலை அயர்ந்தேன்; விழிக்கையில்
அத்தான், என்னென் றறைகுவேன்; அறிவில்
கொத்தும் பசிக்கென் உயிரைக் குடித்ததை;
ஒருநொடிப் பொழுதில் உளத்தைச் சிதைத்ததை;
பெருநிறை யழித்துப் பெருமை தீய்த்ததை;
வாழ்வெனும் நற்பெரும் வழியினை அடைத்ததை;
பாழ்ங்கிணற் றென்னைப் பாழ்மகன் வீழ்த்ததை;
என்னென் றியம்புவேன்? இயம்பி இருசெவி

என்னென் றேற்பேன்? ஏற்று நல்லுயிர்,
என்னெனக் காப்பேன்? என்னெனக் காப்பேன்?
என்னென வாழ்வேன், அத்தான்?" என்றவள்
அழுது துடித்தாள்; ஆறாத் துயரொடு
தொழுதுகால் பற்றிக் கொடியவள் துவண்டாள்.

அசையா ஓவிய மாகி இருந்தேன்;
பசையிலாள் ஆழ்துயர்ப் பட்டன ளமர்ந்தே!
மயலுற நெஞ்ச மாத்துயர் உள்ளி,
'கயல்விழி!' என்றேன்; கலங்கிய விழியோ
டென்னை நோக்கினாள்; 'இங்குவா' என்று
தன்னை அமர்த்தித் தரையினி லமர்ந்தேன்.
'உன்னைச் சிதைத்த உலுத்தனை யறிவையோ?'
என்றேன் தலையை இல்லையென் றசைத்துப்
பொலபொல வென்று கண்ணீர் பொழிந்தாள்.
நிலையினின் றெழுந்து நிகழ்த்தினேன்; 'கயல்விழி,
உன்னைச் சிதைத்தவன்-உயிரினும் மேலாம்
நின் னருங் கற்பை நிலைகுலைத் தழித்தவன்-
புயலென வந்துன் புதுநலங் குடித்தவன்-
கயல்விழி, இதோ, நான் காண்காண்' என்று
கண்களை மூடினேன்; 'ஓ'வெனக் கதறிப்
பெண்ணுருக் கொண்டு பெருவலி கொண்டே,

"ஐயகோ! அத்தான்! அத்தான்! இனிநான்
உய்வனோ? உய்வனோ?" என்றுரை பயிற்றி
ஓயா தென்முகத்(து) ஒருநூறு அறைகள்
மாயா தறைந்தாள்; மறுமொழி யில்லாக்
கற்பா வைபோல் கடிதுநின் றேற்றேன்;

பொற்பா வையின் பூவுடல் வீழ்த்தி;
என்கால் பற்றி 'என்னரும் அத்தான்!
என்பிழை பொறுத்தெனை ஏற்றருள் கெ'ன்றே
அழுது புழுங்கினாள்; அவள்விழி துடைத்துப்
புழுவெனத் துடித்த பூங்கை பற்றிப்
படுக்கை அமர்த்திப், "பழியிலாப் பெண்ணே,
கடுக்கும் நெஞ்சொடும், அழலும் உயிரொடும்,
இதுவரை இருந்த இழிநிலை மறந்து
புதுமணப் பெண்ணாய்ப் பொலிக; என் அன்பே!
முன்புயான் செய்பிழை முற்றும் பொறுத்தே
என்புது வாழ்க்கையின் விளக்கை ஏற்றுக!
இனிநீ தூயவள்! எனக்கே உரியவள்;
பனிவில கிற்று" எனப் பாவையின் முகத்தை
நீவினேன்; அவளோ நெட்டுயிர்ப் புற்றே
தாவியென் முகத்தைத் தன்னிரு கைகளால்
தடவித் தடவித் தன்முகம் ஒற்றி
மடமட வெனக்கண் மழைபொழிந் தனளே!

திரைபோட் டிருந்த தீதறு ஓவியம்
திரையினை விலக்கிடத் திகழ்ந்தது போல,
உள்ளங் காய்ச்சிய நிகழ்ச்சி ஒழிந்ததும்
வெள்ளம் புரண்டதாய் உணர்வு வெளிப்பட,
விழிகளை நல்லொளி விழுங்கிய(து); உவகை
குழியிட் டவள்முகங் கூடிய(து); உள்ளம்
விளைத்த புன்னகை இதழில் வெடித்தது!
களைத்த மெல்லுடல் களையொடு திகழ்ந்தது!
இடையின் னியதோ ரிளமான் போல
நடைதுன் னியது! நாணம் படர்ந்ததே!

# 5

இளஞா யிற்றொளி எழுமுன் எழுந்த
இளைஞர் பேச்சொலி எம்செவி படவே
பிரிய நேர்ந்தது! பிணைப்பிலா நீங்கினோம்.
அரிய முதலிரா, ஆயினும் உளத்தால்
ஒன்றினோம்; எனினும், உடலால் ஒன்றிலோம்;
அன்றிரா போகி அடுத்த இரவினுக்
கேங்கி இருந்தாள்; ஏதோ ஒருதுயர்
தாங்கி இருந்ததென் துணிவிலா நெஞ்சம்;

காலை எழுந்ததும் கண்ணாடி நாடி
மாலை யிருந்த முகத்தையும், மங்கை
சிதைத்த பின்றைச் சிவந்த முகத்தையும்
பதைத்த நெஞ்சொடு பார்த்துநீர் வடித்தேன்.

(வேறு)

நான்பெற்ற வாழ்வின் நலிவை நினைந்துநினைந்
தேன்பெற்றாய் அன்னையே என்றே துடித்தழுதேன்!
என்னை யறியாமல் என்னுள்ளம் நொந்ததுவால்!
பின்னை ஒருவரொடும் பேசாமல் ஆங்கிருந்தேன்.
புன்னைச் சிறுசிட்டாய்ப் பூரிப்பில் மூழ்குவதும்,
என்னை ஒருமுறைவந் தேறெடுத்துப் பார்ப்பதுவும்,
முத்துநகை சிந்துவதும் மொய்குழலைப் பின்னுவதும்,
பித்தந் தலைக்கேறிப்! பின்னுமவள் ஏதேதோ
சொல்லுவதும், நெற்றிச் சுருள்மயிரின் கீழ்விழியாற்
கொல்லுவது மாகக் கயல்விழியாள் மேவுகையில்
தந்த தொலைவரியைத் தாவியவன் வாங்கிவந்தாள்.
"வந்திருப்பாய் வண்டி நிலையத்தில்; நான்வருவேன்"
என்று விடுத்திருந்தான் என்நண்பன் முத்தப்பன்.
நன்றென் றெழுந்தேனே நான்!

# 6

வண்டிக்குப் போயிருந்தேன்; வந்திருந்தான் மூத்தப்பன்
கண்டளவிப் பேசிக் கடுவழியும் பாராமல்
ஊர்க்கு நடந்துவந்தோம்; ஓய்விற் கருகிருந்த
சீர்பெற்ற சோலையொன்றில் சென்றமர்ந்து
சொல்விளைத்தோம்.

நானவனைப் பார்த்தளவி, நாள்கள் பலவிருக்கும்!
ஆனதனால் என்றன் அணிமணத்தைப் பற்றிநான்
அன்னவனுக் கன்றே அறிவிக்க வில்லை; அவன்.
இன்னவூர் தன்னில் எனக்குமணம் என்றறிந்தே
ஓடோடி வந்திருந்த செய்தி உரைத்திட்டான்;
நாடோடி போல நெடுநாள் திரிந்திருந்து,
மூன்றுநாள் முன்னைவந்த செய்தி முடித்துவிட்டே
'ஆன்ற திருமணத்தைப் பற்றி அறை' யென்றான்,
கண்ணீர் வழிந்ததனைக் கண்டிருக்க வேண்டுமவன்;
பெண்ணன்றோ நீர்வடிப்பாள்; பேதைபோல் ஏனழுதாய்?
கூறெ'ன்றான்! உள்ளம் குமுறி எழுந்ததுவால்!
மாறென்று காண மனமுந் துடித்ததுவால்!

தேங்குபுனல் போலத் திகழ்ந்திருந்த துன்பத்தைத்
தூங்குணர்வின் நெஞ்சைத் துளைத்திருந்த பேரிடும்பைக்,
கொட்டிவைத்த தீக்கனலைக், கூட்டிவைத்த பேரிழிவைத்
தட்டி எழுப்பிவிட்டான்; தன்னுணர்வால் நானெழுந்து,
கண்களிலே நீர்சுரக்கக், காது கனல்பற்ற
எண்ணம் அலைபாய நெஞ்சில் இளைப்பேறக்
கூறத் தொடங்கியே கூறுங்கால் அன்னவனும்,
ஏறிவரும் வெள்ளத் தழுத்தம் எழுந்தது போல்-

கேட்டு வந்தான்; நானும், கிளிமொழியாள் வந்ததுவும்
வாட்டுந் துயரென்னும் வாடைக் கனலிலுள்ளம்,
வெந்து புழுங்கியதும், வேரற்று வீழ்ந்ததுவும்,
அந்தக் கொடுங்கயமைக் காட்பட்டான் நானென்று
கூறி யதும், அன்னாள் கொடுந்துயரத் தால்மாறி
மாறி யறைந்ததும், மாயாமல் வாங்கியதும்,
பின்னையவள் ஓய்ந்து பிழைபொறுக்க வேண்டியதும்,
தன்னைப் பழியில்லாள் என்று தருக்கியதும்,
கூறி வருகையிலே, நண்பன் குமுறியழ
'ஊறிவரும் நெஞ்சத்தின் உள்ளுணர்வாற்
பொங்குகின்றான்'
என்றெண்ணித் தேற்ற எழுந்தனனால்! அன்னவனும்
"நின்றிஃதைச் சொல்லிடுவாய் நண்பா! எனநிறுத்தி
என்ன உளத்தானும் ஏற்காத பெண்ணவளை-
உன்னவளை-நீமுன் உருக்குலைத்த தண்மையோ?
கூறுகநீ கூறுகநீ" என்றான் குமுறியுள்ளந்,

தேறுகிலாப் பேதையெனத் தேம்பலுற்றேன்; 'ஐயகோ
எவ்வாறு சொல்வேன்; இதைப் பொறுப்ப தெப்படியோ?
அவ்வாறு செய்ததில்லை; அன்பா நான் என்னென்பேன்?
கீழ்மைத் தனத்தாலே கெட்டழிந்து, காலமெல்லாம்
வாழ்விலுளம் செத்துப் புழுங்கி வதைகின்ற
தீயவரைப் போலல்லன்; நண்பா திகைக்காதே.
ஏயதீங் கேற்றவளுக்கென்வாழ்வைத் தான்கொடுத்தேன்.
கற்பிழந்தாள் நெஞ்சிற் கனன்ற நெருப்பையெல்லாம்
நற்பண்பால் என்றன் நடுநெஞ்சில் பற்றவிட்டேன்!
தன்னைச் சிதைத்தவனும், தன்வாழ்வைத் தூர்த்தவனும்,
தன்னை அழற்குழியில் தள்ளிவிட்டுப் போனவனும்,
தானேயென் றேன்; அவளை நம்பவைத்தேன் நான்பழியை
ஏனேற்றேன் என்றால் இறக்காமல் காக்கத்தான்;

காக்கத்தான்; கற்பைக் கழற்றியவட் கும்வாழ்க்கை
பூக்கத்தான்; அன்பைப் புதுக்கத்தான்; பேரின்பம்
சேர்க்கத்தான்; உள்ளம் சிறுத்தார்க்கும் நல்வாழ்வை
வார்க்கத்தான்; மன்னித்தால் வாழ்வுபெறு ளாவென்றே
பார்க்கத்தான்; பொய்சொல்லிப் பாவையினை
வாழவைத்தேன்.'

என்றழுது கூற, எழுந்தவனும் என்காலில்
நின்ற நெடுமரம்போல் நீட்டி விழுந்தழுதே
'என்னைநீ மன்னிப்பாய் மன்னிப்பாய்; என்நண்பா,
பொன்னை—மணிச்சுடரை—பொற்புள்ள மங்கையினை,
வாய்த்த குலக்கொடியை—வந்திணைந்த நல்லமிழ்தை—
மாய்த்துச் சிதைத்தவன் யான்;மாளா திருந்தவன்யான்"
என்றானே; நெஞ்சம் எரிபற்றி வெந்ததுவால்!—
கொன்றாலும் அன்ன கொடியவனைத் தீதில்லை!
என்று நினைந்தே இருகையாலும் அறைந்தேன்;
ஒன்றொன்றாய் எண்ணா தொருநூறு தந்திருப்பேன்.

ஊழிப்புயலில் உலகஞ் சுழல்வது போல்
ஆழி பெருகி அலைபுரண்டு சீறுவதாய்,
என்கண்கள் மயங்கினவே! என்றுமிலா வல்லிருளில்
என்னைக்கொண் டாழ்த்தியன; மீண்டும் எழுநினைவால்
கண்விழித்துப் பார்க்கக் கடுங்குளிரில், வெம்பனியில்,
விண்ணில், நடுங்கி வெலவெலத்துப் போனவன் போல்!
வீழ்ந்து கிடந்தான்; விளைந்த தறிந்தெழுந்தான்,
ஆழ்ந்து நினைந்தேன்; அறுந்த நினைவொருங்கே
கூடுமோ? இன்னவரைக் கூறி வருத்துவதால்,
நீடுமோ வாழ்க்கை? எனவே நினைத்(து) அவன்பால்,

'முத்தப்பா, வாழ்க்கை முழுமை உறுவதெல்லாம்
ஒத்தநெறிக் கொத்தஉளம், ஒத்தசெயல் என்பவற்றால்!
இம்மி இழிந்தாலும் மாந்தனென்று கூறுவதும்
அம்மிக்குழவியென் றாவதுவும் ஒன்றே!

பொறுத்தேன் இறப்பினை; என்றும் அதனை
மறந்தேன்; இனியுன்னை மன்னித்தேன்; வாபோவோம்!
என்மனைவி காத்திருப்பாள்; என்றனுக்கும் உன்றனுக்கும்
நன்விருந்து செய்திருப்பாள்' என்று நவின்றழைத்தேன்,
கண்ணிரண்டில் நீர்பெருகக், கைகூப்பி நாத்தழுக்கப்
''புண்ணில்வேல் விட்டதுபோல் பின்னும்பேசாதே!
இறைவன் எனக்கில்லை; இல்லையவன் எங்கும்;
இறைவன்நீ; நீயே எனக்கு வழிகாட்டி!
அடிவீழ்ந்து கெஞ்சுகின்றேன்; அன்பா! அருளாய்!
குடியழித்த இந்தக் கொடியவனை விட்டுவிடு!
வாடிக் குலைந்திருக்கும் வல்லாள் உளமகிழ
ஓடித் தழுவிடுநீ! என்னை உதறிவிடு!
தித்தித்த நெஞ்சுணர்வால் தீயதையும் மன்னிப்போர்
அத்திப்பூப் போல அறியார்க் கறியாராய்
வல்லார் ஒருசிலரும் வாழ்கின்றார் இவ்வுலகில்!
அல்லார் அவரை அறிவதில்லை; அன்பரசே!
வாழ்கநீ!'' என்றுரைத்து வந்த வழிநடந்தான்.

வீழ்கின்ற கண்ணீர் விழிமல்கப் பார்த்திருந்து
வீடுவந்து சேர்ந்தேன்; விழியால் வழிகாண்பாள்
ஓடிவந்து பூத்த ஒளிர்முகத்தில் அன்பு
குடியிருக்கக் கண்டேன்; குலைகுலையாய் இன்பம்
மடியிருக்கக் கண்டேன் மகிழ்ந்து.


- முன்னுரை -

[அறிவு தழுவாத வெற்றுணர்ச்சிக்கு அடிமைப் பட்டுச் சுழலும் உ ள் ள ம், உறுதியில்லாமல் பொது பொது வென்றிருக்கும் குப்பைப் புழுதிக்கு ஒப்பாகும். எப்பொழுதாவது பொழியும் உணர்ச்சி மழையினுல் அங்கு முளைக்கின்ற காளாம்பிகள் பிறர்க்கு அருவருப்பையும், ஏ ள ன த் தை யு ம் உண்டு பண்ணுகின்றன.

வேரற்ற அவ்வெற்றுணர்வு நிகழ்ச்சிகள் திடீரென வெழுந்து நின்று சிறுபொழுது மாந்தனை ஆட்டிப் படைத்து உடனே மறைந்து விடுவன வெனினும், அவை மற்றவர்பால் ஒருவர்க்கு மாருக் கறை யைப் பதிக்கின்றன. சிறிது நேரமே எழுந்து நிற்கும் அவ் வெற்றுணர்ச்சிகள் குப்பைமேட்டுக் காளாம்பிகளைப் போல் பூப்பதுமில்லை; காய்ப்பது மில்லை; சிம்பும் கொம்பும், தளிரும், தழையும் விட்டுப் படர்வதுமில்லை. அந்தச் சிறு நேரத்து வெற்றுணர்வுக் காளாம்பிகளைப் பிடுங்கியெறிய வல்ல அறிவாற்றல் உள்ளவர், என்றும் சிறந்த ஒழுக்கமுடையவராய் இருப்பது திண்ணம்.

சூழ்நிலை யென்னும் கார்முகிற் கூட்டம், வாய்ப்பு என்னும் குளிர்காற்றைத் தீண்டி, வெற்றுணர்ச்சி மழையைப் பொழிவிக்கும் பொழுது, வன்மையற் றிருப்பார்தம் உ ள் ள நிலத்தில் தீய எண்ணம் எ ன் ற காளாம்பிகளைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய காளாம்பிகளை முளையிற் கிள்ளி யெறி வோர், அவ் வெற்றுணர்வுக் கனலவிந்து, அறி வுப் புனல் சிலிர்க்குங் காலை, தாம் செய்யவிருந்த தீய செயற்கு மிகவருந்துவதும், அவ்வாறு செய்யாமற்றப்பி ஒழுக்கத்தைக் காத்தமைக்கு உவப்பதும் கண்கூடாகக் காண்கின்ருேம். அத் தகைய வெற்றுணர்ச்சிக்குப் ப ழு தா கா ம ல் ஒழுக்கங் காப்பார் உயர்ந்தோராவார். மற்றை யோர் விலங்குகளே ஆவார்.]

## 2. காளாம்பி [1958]



ஏந்திய நெஞ்சன்! இளங்கதிர் முகத்தன்!
நீந்திய கருவிழி, காந்திய நோக்கினன்!
எடுத்த மூக்கினன்! எழில்மலர் வாயினன்!
தொடுத்த முத்தெனத் தோன்றிய பல்லினன்!
வீங்கிய தோளான்! வீழிருங் கையான்!
தேங்கிய அழகெலாந் திரண்ட உருவிலோர்க்
கட்டிளங் காளையன் ஒருவன், கலையெனும்
மட்டிலா உவகை மாந்திய வாழ்வினன்.
வெள்ளி நிலவொளி வீழ்த்திய குளிரில்
நள்ளிராப் பொழுதில் நன்னடை பயின்றே
அண்மையில் உள்ள அழகிய புகைத்தொடர்
வண்டி நிலையம் வந்துநின் றிருந்த
படுங்கிடை வண்டியைப் பற்றியுட் சென்றே
இடங்கண் டமர்ந்தான்; இரைந்தது வண்டி!

முன்னால் ஒருத்தி மொய்த்த எழிலொடும்,
சின்ன மகவின் சிறுதலை அணைத்த
வகையொடும், புன்னகை வனைந்த வாயொடும்
முகைவிழி மூடி, முழுவுடற் கிடத்தி,
அறுவர் அமரும் அகலப் பலகையில்
ஒருவர்க் கமர இடம் ஒதுக்காமல்
தூங்கி யிருந்தாள்! தோகையின் முன்னே
தாங்கிய கைமேல் தலையினைச் சாய்த்தே
உறங்கினார் ஒருவர். உள்ளிருந் தெவரும்
இறங்க வேண்டுதல் இல்லா மையினால்
அவரவர் அயர்ந்தே அயர்ந்து தூங்கினர்.
இவர்தம் நடுவில் இமைமூ டாமல்,
முன்னால் இருக்கும் முத்துப் பாவையை
உன்னி உன்னி உருக்குலைந் திருக்க
மன்னிய நினைவால் மலைப்பொன் றெய்தினான்
பின்னால் வந்த பெருங்கலை நெஞ்சன்!

ஓடிய வண்டியின் உரத்த ஊதலும்,
ஆடிய ஆட்டமும் அதன்மருங் குறங்கிய
மகவை எழுப்ப, மங்கையும் விழித்துத்
தகவோ டணைத்துத் தலைநிமிர்ந் திடவே,
முன்னால் அமர்ந்து மொய்விழி நோகத்
தன்னைப் பார்க்கும் தனியனைக் கண்டாள்!
கண்டதும் பாம்பைக் கண்டது போலப்
பண்டை நிகழ்ச்சி பாவையை உலுக்க
நெஞ்சு பதைத்தாள்! நெட்டுயிர்ப் புற்றாள்!
அஞ்சு மடமான் அரிமா முன்னம்
உடல்நடுங் கிடல்போல் உயிர்நடுங் கினளே!
அடலே றவனும் ஆழ்ந்துளம் உன்னத்
தொன்மை நினைவு பற்பல தோன்றி
முன்னை நிகழ்வில் மூழ்க்கி யெடுத்ததே!

ஓவியப் பாவையை ஒருநாள் கண்டதும்
ஆவியைத் தந்தவள் ஆவியைப் பெற்றதும்,
பொன்னங் குரும்பைப் பொலிகுலை தொங்குந்
தென்னந் தோப்பில் தெரிவையைத் தொட்டதும்,
ஆற்றுப் படுகையில் ஆழத் தோண்டிய
ஊற்றுப் புனலை யவட்கூட் டியதும்,
நெய்விட் டளவிய நொய்க்கொழும் பொங்கல்
கைதொட் டளாவி கன்னிவாய் தந்ததும்,

பல்லை முத்தாய்ப், பவளமாய் இதழைச்
சொல்லி மகிழ்ந்ததும், சுருள்குழல் அலைத்ததும்,
காத்திருந் தாளின் கண்களைப் பொத்தியப்
பூத்த முகத்தைப் பார்த்து மகிழ்ந்ததும்,
சிறுகை பற்றிச் சிவக்கக் கிள்ளி
ஒருநா ளாகிலும் உனைமற வேனென்
றுரைத்த காட்சியும், ஒண்டொடி முகமலர்
மறைத்த அழகையும், மகிழ்ந்த வகையையும்,
அடிக்கிளை மாங்காய் அவள்தரக் கேட்க
நொடிப்பொழு துச்சிக் கனிநூ றுகுத்ததும்
நன்மணல் நாக நறுங்கனி பொறுக்கிப்
பின்னெழ இருவரின் பெருந்தலை இடித்ததும்,
முத்துப் பல்வரி முறுவல் காட்டி

“அத்தான்!” என்றவள் ஆயிரஞ் சொன்னதும்
விண்ணில் தூங்கிய வெண்ணிலா வொளியில்
மண்ணில் ஆற்று மருங்கினில் அயர்ந்ததும்,
மேட்டுப் பாலையில் உண்ணீர் விடாய்க்கவன்
ஆட்டுப் பாலை அங்கையிற் கறந்து
செவ்விதழ் பருகத் தந்ததும், சேயிழை

அவ்விதழ் பருக அவற்குத் தந்ததும்
நீட்டிய கையில் மலர்நிறைக் காது
காட்டு மல்லிகை குழலில் வைத்ததும்,
கருமுகில் புதையும் கவின்நிலா வெனஅவள்
திருமுகம் புதைத்தவன் திருமடி புரண்டதும்,
ஓடிய புனலில் ஒண்டொடி யோடே
ஆடிய வகையும் அவள்தலை பற்றி
உள்ளே மூழ்க்கி உடன்நீர் புகுந்ததும்,
வெள்ளத் தவள்செல, விரைந்து மீட்டதும்,
தங்கைக் கன்னை தந்ததைக் கவர்ந்து
மங்கைக் கணிந்த மணிமுத் தலங்கல்
இன்னும் கழுத்தினின் றிறங்கா திருப்பதும்,
பொன்னந் தாலியொன் றதனொடு பொலிவதும்,
ஆடியும் பாடியும் அன்பை வளர்த்ததும்,
ஓடிய காலத் துறும்பிரி வாலும்
பொல்லா மாந்தர் புலைநெஞ் சாலும்
கல்லாப் பெற்றோர் கருத்திழப் பாலும்,

ஒருகுலை இருகனி, ஒருநோக் கிருவிழி,
ஒருசெயல் இருமனம், ஒருயிர் ஈருடல்,
பிரிக்கப் பட்டதும், பிரிவெனும் உரவில்
நெரிக்கப் பட்டதும், நினைவெனும் புனலில்
சிக்கித் தவித்ததும், காதல் சிதைத்ததும்,
மட்கிய நினைவுகள் மலர்ந்து மீண்டதும்,
எண்ணி எண்ணி யிருவரும் நினைவறக்
கண்ணீர் உகுக்க, காதகம் கனல,
தொண்டை வரள, தொன்மை உணர்வெழ
அண்டைச் சூழலை அடியொடு மறந்தே
ஒருவர் விழிகளை ஒருவர் கவ்வி
ஒருவர் உணர்வை ஒருவருக் குணர்த்தி,

அவிந்த தீயெழுந் தாடிய வகையாய்க்
குவிந்த அமைதியில் உள்ளங் கூடிட,
விரும்புவ ளென்றும், விரும்பியப் பக்கந்
திரும்புவ ளென்றும், திரும்பியோர் புன்னகை
அரும்புவ ளென்றும், அணுகுவள் என்றும்,
கரும்பவள் தனக்கினி என்றும் கருதி,

உயிர்த்தீப் பற்ற உளந்தீப் பற்ற
மயர்வறி யாமல் மணந்தவள் என்ற
நினைவறி யாமல், நிலையறி யாமல்,
வினையறி யாமல், விளைவறி யாமல்
உறுத்து நோக்கியவ் வொண்டொடி உளத்தையும்
அறுத்தறுத் தெறிந்திட, அக்கொடி யாளும்,

முன்னர் தனக்கவன் முகமலர் உவந்ததும்,
புன்னகை தந்தவன் புன்னகை பெற்றதும்
நீட்டிய கைகளில் நிலையிலா தோடிக்
கூட்டி லடைபடும் குருவிக் குஞ்சென
அடைப்பட் டிருந்ததும், அதனால் மகிழ்ந்ததும்,
இடைப்பட் டிருந்த இடர்களை எதிர்த்ததும்,
குன்றுபோல் தன்னில் தன்முகம் குழைந்தவள்
மென்றோள் கனப்பின் மிசையவன் துயின்றதும்

பாலிற் பிசைந்த பைங்கொழு வடிசில்
வேலி மருங்கில் வீற்றவற் கீந்ததும்,
ஆற்றுப் படுக்கையில் அவன்காத் திருக்கச்
சோற்றை இலையோடு சுருட்டி மறைத்தே
அன்னை உணரா ததனை எறிந்ததும்,

பின்னை யவனிடம் ஓடிப் பிணைந்ததும்,
மறப்பா யோவன மறித்துக் கேட்டவற்
'கிறப்பே' னென்றவள் இளங்கை யடித்ததும்
'தடுத்தார் பெற்றவர்; தனைவாழாது
கெடுத்தார்' என்று கிளத்தி நொந்ததும்
வீட்டுக் குள்ளறை விட்டவள் அன்னை
கூட்டுக் கிளியெனக் கொடுஞ்சிறை காத்ததும்,
வந்தவன் ஒருவன் தன்னொடு வாழெனத்
தந்தவள் கழுத்தில் தாலியேற் றியதும்
தன்னை விழைந்தவன் தன்னை மறந்து
தன்னை மணந்தவன் தன்னை விழைந்து
வாழ்வதைத் தவிர வழிவே றின்றென
ஆழ்ந்துணர்ந் ததன்படி அதுவரை வாழ்ந்ததும்,
இறந்தா னென்றே எண்ணி யிருந்ததும்,
பிறந்தான் போலவன் பின்னை வந்ததும்,
முனையுரி மையினால் மூண்டெழுந் துள்ளம்

தனையறி யாமல் தவியாய்த் தவிப்பதும்,
முன்னி நெஞ்சினில் முன்னிகழ் வெல்லாம்
மின்னித் தோன்றிட மேனி கனப்ப
இழந்ததைக் கண்ட இரப்பா ளன்போல்
குழந்தை அரற்றுங் கூக்குரல் மறந்தும்,
கண்முன் உறங்கும் கணவனை மறந்தும்,
பெண்முன் னிற்கும் பெரும்பழி மறந்தும்
அற்றைநாட் பழகிய அன்னவன் முகத்தை,
உற்றுப் பார்ப்பதும் உயிர்த்தலும் உணர்வெனும்
எரிமூண் டெரிய எண்ணெய் விடல்போல்
விரிந்த பார்வையில் விளைந்த நினைவால்,
அறிவு சுருங்கி அகமிகச் சுருங்கி
வெறியுணர் வெழும்ப, வெயர்வுடல் அரும்ப,
தன்னை மறந்துயிர் தளர்வுற் றிருந்தாள்.

என்னை இயம்புவ தென்றவள் எண்ணி,
நாத்துடி துடிப்ப, நடுங்கிட நெஞ்சு,
காத்த ஒழுங்கு கழன்றுயிர் அலைய,
அவளுளம் உள்ளிய ஆயிரஞ் சொற்களில்
தவறியு மொருசொல் தந்நா வுரையா(து)
குரல்வளை நடுங்கக் குமைந்தவன் றனக்கு
விரல்நெளி வாலே விழைவினை உணர்த்த
எண்ணினள்; கைகள் இரும்பாய்க் கனத்தன.
திண்ணின விரல்கள்; திகைத்து நின்றனள்.

பேசத் துடித்தது பேதையின் பழவாய்!
ஊசல் மூச்சும் ஒடுங்குவ தல்லால்,
சொல்வர வில்லை; சுடர்மின் னென்று
வல்நெஞ் சொளிர, வல்லுணர் வொடுங்கிடச்

சென்ற வண்டியிற் பட்டுச் சிதைந்த
தென்றற் காற்றால் தெரிவையின் முகத்தில்
வரவரத் தெளிவு வளர்ந்ததும் உள்ளம்
பரபரப் படங்கிப், பாலுக் கழுதே,
இமைகள் மூடி இளமக வுறங்க
தமைமறந் தந்தத் தாய்முலை ஊறி,
நெஞ்சம் நனைப்ப, நெடுந்துயில் நீங்கி,
அஞ்சிய மடக்கொடி அறிவு தெளிவுற,

ஒருநொடி அவிந்த உள்ளுணர் வெழுந்தே
ஒருகொடு நினைவை ஊட்டி மறைந்த
நிகழ்வை எண்ணவும் நேரிழை அஞ்சி
இகழ்வா ளாயினள் இளமையை! அக்கால்,

கையணைத் துறங்கிய கணவன் பெருந்தலை
கையணை நழுவிக் கடிதென வீழ்ந்து
பலகணி விளிம்பிற் படாலெனப் பட்டதும்,
தலைபுடைத் தெழுந்தான்; தளிர்க்கொடி மருண்டே
'அத்தான்' என்றே அலறினாள்; அவனோ
சொத்தை அடியெனச் சொல்லிச் சிரித்தான்.

மாண்ட காதலை மீண்டும் நினைத்தவன்
ஆண்ட பேருணர் வகன்றிட வருந்தி
நிகழ்ந்திட விருந்த நெறியிலாச் செயலை
இகழ்ந்து கொண்டனன்! இணையிலா தாண்மை
அன்னவன் தோளை அணைத்தது கண்டீர்!

பின்னர் ஓடிய பெரும்புகை வண்டி
நிலயம் ஒன்றில் நின்றதும், அந்த
விலையிலா ஒழுங்கினன் விரைந்தெழுந் திறங்கினன்.
பெண்ணாள் கடைவிழி பிறந்தது ஒருதுளிக்
கண்ணீர்! இதனைக் கண்ட கணவன்
"நிலைகலங் கிடலேன் நீ"யென அவளும்
"தலையில் வல்லடி தாங்கினீர்" என்றாள்.


ஒருநொடி ஓய்ந்த உள்ளம் போலப்
பெரும்புகை வண்டி பின்னும் பறந்ததே!



# குருடர் காதல்

-முன்னுரை.

"காதலே குருட்டுத்தனமானது', (Love is Blind)-என்பர் ஆங்கிலப் பெரும்புலவர் சேக்சுபியர். காதலுக்கு விழியைவிட மொழியும் உள்ளவுணர்வுமே தேவையானவை. விழி அழகில் மொய்க்கும்; உள்ளத்தைச் சுவைப்பதில்லை, உணர்வே உள்ளத்தைச் சுவைப்பது; வருடுவது; அதில் புதைவது; அதைத் தன்வயப் படுத்துவது. ஒளிவண்ணங்களை உணராத குருடரும் உள்ள வண்ணங்களை உணர்கின்றனர். ஒருவர் உள்ளத்தில் ஒருவர் ஊடுருவுகின்றனர். ஒருவர்க்கொருவர் ஒளியேற்றுகின்றனர். அங்குக் காதல் மட்டுமன்று; கனிவும் மலர்கின்றது; கருத்தும் காய்க்கின்றது; இன்பமும் கனிகின்றது. விழியுள்ளவர் உடல்வழி உள்ளத்தை நெருங்குகின்றனர். விழியற்றவர் உள்ளத்தின்வழி உடலைச் சுவைக்கின்றனர். அக்கால் அவர் உடல் அணுக்கள் முழுவதும் விழிகளாகி ஒளி வீசல்களை அறிகின்றன. இளைஞனும் இளைஞையுமாகிய குருடர் இருவர் தம்முள் எழுந்த காதலுணர்வைச் சொற்களால் பரிமாறிக் கொள்ளும் உணர்வைப் பாவுணர்வு கண்டு சுவைக்கின்றது. அவர்கள்முன் நாம் காணும் நீல வானும், நீணிலமும், கோலநிலவும் பன்மடங்கு ஒளிவீசல்களை உண்டாக்கி, அவர் தம் காதல் உணர்வுக்குக் காட்சிப் பொருளாகி நிற்கின்றன. பருவுணர்வால் கைவரப்பெறும் நம் காதலுணர்வினும் அவர்களின் காதலுணர்வு மெய்ப்பொருள் நிரம்பியதாகத் தோற்றமளிக்கின்றது...... ]



பகல் விளக்கி ஓய்ந்த பழம்பரிதி மாய,
அகல் விளக்கம் எங்கும் அரசாகி நிற்கும்!
ஒளியறியான் இன்ப உலகுணரான், காட்சி,
துளியறியாப் பேதையோர் தொல்குருடன், என்றும்
வழக்கம்போல் சாவடியை வந்தடைந்து, தான்போய்ப்
பழக்கமாய்த் தங்கிப் படுத்துறங்கும் மூலைக்குச்
சென்றான்; அவன்காலில், செவ்வாழைத் தண்டுபோல்,
நன்றே மிதிபட்டு நங்கை ஒருத்தி,
அலறிப் புடைத்தெழுந்தே 'ஆ'வென்று கத்த,
நிலைதளர்ந்து நின்றான் நெடுங்குருடன்! மங்கையோ,
"என்போலுங் கண்ணை இழந்தாயோ? பெண்ணொருத்தி,
கல்போலும் உள்ளதைக் காணாயோ". என்றுரைத்தாள்!

தன்போலும் அன்னாள் தனிக்குருடி என்றறிந்தே,
அன்பெழுந்து பொங்க அவளிடத்தில், "அம்மே, கேள்!
நானும் ஒருகுருடன்; நாள்தோறும் வந்துவந்து
தானுறங்கும் மூலையில்நீ தயங்கியதை நானறியேன்;
எப்படியோ வந்தாய்! இராப்பொழுது தூங்கியிரு!
இப்படியோர் மூலை எனக்"கென்றான்; இப்பேச்சு
வெள்ளிச் சுடர்வீசும் வீங்குநீர் வையத்தின்
கொள்ளைக் கவின்காட்சி யொன்றையுமே காணாத,
கன்னிக் குருடிதன் கள்ளமில்லா உள்ளத்தில்
மின்னி ஒளிகாட்டி, மேனியெலாம் பாய்ந்ததுபோல்,
நெஞ்சில் விளையாட நேர்ந்துகாண்! அன்னவனும்
பஞ்சதனில் தீப்பிழம்பு பட்டதுபோல் மெய்யெல்லாம்,
என்றுமிலா தோருணர்வால் இன்ப நிலைபாய
பின்னகர்ந்து சென்றான்;பின் பேதைக்குருடியொடும்
ஓர்பேச்சுப் பேசுவதற் கோயாமல் எண்ணுவதும்
நேர்பேச்சுத் தாராமல் நின்றுவிடில் செய்வதென்ன?
என்றுபல எண்ணுவதும் ஏங்குவது மாயிருந்தான்!

நின்று மிதித்தவனை நீள நினைத்தபடி,
உள்ளம் விழித்திருக்க ஒண்டொடி,ஒவ் வோர்நொடியும்
தள்ளி, முழுஇரவும், தானயரா தங்கிருந்தாள்!

அன்னவனைக் காண அவளும் விரும்பவில்லை!
பெண்ணவளைக் காணுதற்கும் பேதையவன் எண்ணவில்லை!
கண்ணின் ஒளிகுன்றி, காணவிய லாதவரேன்
எண்ண விழைகின்றார்? என்றாலும் ஐம்புலனில்
ஒன்று குறைந்தாலும் ஓயாத நாற்புலனும்
தன்றன் துறைக்குத் தடைசெய்து நிற்கவில்லை!

அன்பு கலந்துவரும் அன்னவனின் பேச்சினுக்கே
என்புருகி நின்றாள் இருசெவிகள் தாம் நீட்டி!

பாரில் ஒருபொருளும் பாரா திருக்கின்றாள்!
யாராரோ சொல்லுவதும், யாராரோ பேசுவதும்,
வீடென்று கூறுவதும், காடென்று சொல்லுவதும்,
மாடென்றும், ஆடென்றும், மக்களென்றும் கூறுவதும்,
கேட்டறிந்தாள்; ஆனாலும் கேட்கும் மொழிகளுக்கே
ஏற்ற பொருள்களிவை என்னுந் திறனறியாள்!
மண்ணின் நிறமென்ன? மக்கள் உருவென்ன?
விண்ணென்றா லென்ன? விடிவென்ன? என்றுணராள்!

ஞாயிறீ தென்று நவிலுவதும், ஞாயிற்றின்
ஏய வொளி யாலிவ் வுலகு புலப்படலும்,
கேட்டும் விளங்காமல் கன்னி இருந்துவிட்டாள்!
ஊட்டி வளர்த்துவிட்ட அன்னை உருவினையும்,
காணுதற் கேலாக் கருக்குருடி! அன்னவளைப்
பேணி வளர்த்துப் பெயரிட்ட பெற்றோரும்,
பேரிருளைத் தங்களது பிள்ளைத் துணையாக்கி,
நீர்சூழிவ் வைய நினைவை மறந்துவிட்டார்!

கண்ணை வளர்க்காத காலமெனுங் கோலனுமப்
பெண்ணை வளர்த்தவியாப் பேருணர்வுக் குட்படுத்தி,
வண்ணம் உணராத வாலைக் குமரியினுக்
கெண்ணம் விளைவித்தான்; ஏக்கம் விளைவித்தான்!
காணாத கையெதையோ காணத் துடித்ததுகாண்!
பேணாத நெஞ்சதையோ பேணத் துடித்ததுகாண்!

உள்ளும் புறமும் உணர்வு வளர்ந்தவளின்
உள்ள விழிகளுக்குத் தன்போல் ஒருகுருடன்,

தென்பட்ட பின்னைத் தெரிவைக்குத் தன்முகத்தில்
முன்பட்ட கண்போய் முழுவுடலும் கண்ணாகி,
அன்னவனைக் கண்டாள்! அகத்தில் அவனுருவம்
மன்னுதலைக் கண்டாளிம் மண்ணுலகு நீங்கியவன்,
எண்ணத் தனியுலகில் இன்ப நிகழ்வுகண்டாள்,
கண்ணின் வழியின்றி உள்ளத்தாற் கண்டவர்கள்
யாங்ஙன் மகிழ்ந்தின் புறுவாரோ; அன்னவரும்
ஆங்ஙன் மகிழ்ந்தாரே அங்கு!



# 2

காற்றின் சலசலப்பும், காக்கைக் கரையொலியும்,
ஆற்றுநீர் கொள்ளுதற்குச் செல்லும் அணங்குகளின்
கைவளையின் பேச்சும், கனிவாய் இசைப்பேச்சும்,
மொய்க்குஞ் சிறுவர்பால் மூள்கின்ற பேரொலியும்,
ஏறிவரும் ஞாயிற் றிளஞ்சூடும், அன்னவர்க்குக்
கூறி விளக்கினவே காலை மலர்ந்ததென!

இவ்விருவர் உள்ளத்தும் எங்கிருந்தோ ஓர்நிறைவு
கவ்வி யிருந்ததுகாண்! கன்னியங்கு பேசலுற்றாள்;
"என்முன்னர் தாமே இருக்கின்றீர்?" என்றிடவே
"உன்முன்னர் தானுள்ளேன்" என்றே உரைதந்தான்.

பின்னர் சிலநொடிகள் பேசவிய லாதவராய்,
மன்னும் அமைதியொடு மாணப் பெருமகிழ்வு
கொண்டிருந்தார்; அந்தக் குமரிக் குருடியிடம்,
நண்டாய் நகர்ந்து, நடுங்கும் உளத்தோடே,
'உன்றன் பெயரை உரை'யென்றான்! நெஞ்சில்வந்து
நின்றான் உருவை நினைத்து மகிழ்ந்தவளாய்ச்
'செல்வி' எனச்சொன்னாள்! செப்பும் மறுநொடியில்
ஒல்லி யிடையுருவை உள்ளத்தாற் றான்கண்டான்!
'உங்கள் பெயரென்ன?' என்றாள்; உவகைமிகப்
பொங்கும் உளத்தோடும் பூக்கும் வளத்தோடும்,
'முத்த'னென்று கூறி,அவள் முன்கையைத்
தான்தொட்டான்!
பித்தென்று கூறி யந்தப் பேதை விலக்கவில்லை!

'செல்வி' எனச்சொல்லி வெல்லச் சுவைகண்டான்;
மெல்லியும் முத்தென்று தொத்தினாள் அன்னவன்தோள்!

முன்னே இருந்தவனை 'மூடுவிழி' என்றறியாள்;
இன்னே அவனவளை எண்ணி வெறுக்கவில்லை.
ஊரார் விழிநோக்கை உள்ளத்தில் எண்ணவில்லை.
தேராதார், காதலினைத் தீதென்று
சொல்வதெல்லாம்
எண்ணி வருந்தவில்லை! யாவர்க்கும் அஞ்சவில்லை!
மண்ணில்லை; வீடில்லை; மக்களில்லை; பேச்சில்லை!
காட்சிபல கண்டு கருத்தொடுங்கும் போக்கில்லை!
ஆட்சி! தனியாட்சி! அன்பாளும் நல்லாட்சி!
ஒற்றைத் தனியரசு! ஒண்டொடியே பேரரசி!
கற்றைக் குழல்நீவிக் கண்ணிழந்தான் வீற்றிருந்தான்!

வானத்தில், காற்றிடையில், வாழ்கின்ற கோள்களிடை
கூனற்ற காதல் கொளுவும் தனிச்சுவையில்,
ஏற்றிருந்த உள்ளத் திருவிளக்கின் வெள்ளொளியில்
வீற்றிருந்தார் நோக்கா விழிகொண்டோர்!
செல்வியெனும்
மூசிளமைக் காரியவள் மென்றோள் தனைநீவிப்
பேசுகின்றான்: 'அன்பே! பிழைநினையா உள்ளமே!
காண முடியாத காதலே! நானுனக்குப்
பேண முடியாத பெற்றிப் பெருங்குருடன்!
நீ யெனக்கோ என்றும் நெகிழா எழிலுருவம்!
தாயெனக்கு நீயேதான்! தந்தையினி நீதான்!
உலகென்று மாந்தர் உரைப்பதுவும், வான
நிலவென்று கூறுவதுவும் நீயேதான்! இவ்வுலகில்,
கங்குல் படருவதும், காலைப் பரிதியினால்
எங்கும் ஒளிவந் தரசாட்சி ஏற்றுவதும்

மக்கள் உரைத்தறிவேன். மாண்பே! இந் நாள்வரைக்கும்
ஒக்கத் தனியிருளே உள்ளத் திருந்ததுகாண்!
இன்றே ஒளிதோன்றி உள்ளதுகாண்! இன்பமே!
ஒன்றேதாம் நாமிருவர்; உள்ளங்கள் நம்வீடு!

வன்மைசேர் கையாலுன் தோளை வருடுகின்றேன்;
மென்மை உணர்கின்றேன்; மேனிநிறம் யானறியேன்!
உன்றன் குளிர்குழலை நீவி உணர்கின்றேன்!
என்றும் அதன்நிறத்தை யான்காணப் போவதில்லை!
தென்றல் தவழ்ந்தென்னைத் தீண்டுங்கால் என்னுடலம்,
ஒன்றும் உவகைப் பெருங்கடலில் யான் ஒன்றி
நிற்கின்றேன்; அன்பே; நிலைகுலையா மாணுருவே!
கற்கின்றேன் அன்பை! கருத்தே,இந் நாள்வரைக்கும்
வாடிக் குலைந்திருந்த வெற்றுளத்தை இன்றே நீ
ஓடிவந்து கொண்ட உயர்வை உரைப்பதற்குக்
கண்ணிருந்த நற்புலவர் அல்லால், கருப்பையுளே
கண்ணிழந்தான் கூறிவிடல் கண்ணே எளிதாமோ?"

என்று பலவா றியம்பிப் புலம்பியவன்
குன்றுதோள் நீவிக் குழைந்திருந்த பூங்கொடியாள்,
பின்னே வருமாறு பேசுகின்றாள்; "பூவுலகில்
அன்னை முகமறியேன்; ஆரத் தழுவியெனை
முத்தமிட்ட தந்தை முகமறியேன்! முத்தே! நான்
கத்திக் கிடக்கையிலே கைச்சோற்றை வீசிவிட்டே
ஓடிவந்து தூக்கிப்பின் உச்சிமுதற் கால்வரைக்கும்
கோடிமுத்தம் எண்ணாமற் கொஞ்சிக் கொடுத்தவளைக்,
கண்டே உளங்குளிரக் கண்ணில்லை! என்செய்வேன்?
பெண்ணாக நான்பிறந்தேன்! பெற்றோரைத் தாமிழந்தேன்!

கண்ணோடும், கல்விக் கருத்தோடும் வாழ்ந்து வரும்,
பெண்களிலே சில்லோரும் பெற்றோ ரிழந்ததனால்,
மாண்பிழந்து போனதாய் மக்களுள்ளே பேசுகின்றார்!
ஏன்பிறந்தேன் பெண்ணாக? ஏன்பிறந்தேன் வல்குருடாய்!
பார்த்து நடந்திடவும் பார்வையில்லை! என்னுடலைக்
காத்துக் கிடந்திடவும் கண்ணில்லை; என்செய்வேன்?

நீளத் தனியிருளில் நிற்கின்றேன்! உங்களது
கோலத் திருமேனி காணா திருக்கின்றேன்!
பெண்ணென்றும், ஆணென்றும் பேசுகின்ற மாந்தரெலாம்
என்னுருவாய் நிற்கின்றார் என்னுந் திறனறியேன்?
மச்சென்றும், குச்சென்றும், மண்ணாலும், கல்லாலும்,
உச்சியறி யாத உயரத்தில் வீடுகட்டி,
வாழ்கின்றார் என்றுபலர் வாயாகக் கேட்டுள்ளேன்;
பாழ் குடிலோ, நீளப் படிவைத்த மெத்தைகளோ
ஒன்றுமே வேண்டா; ஒருகை நிலம்போதும்.
என்றென்றும் நானுங்கள் பக்கத் திருந்தபடி,
பேசி மகிழ்கின்றேன்; பேசுகின்ற நல்லுருவே!
மாசில்லா நன்மொழியே! மண்ணுலகில் இத்தனைநாள்
காணாத பேரொளியைக் காண்கின்றேன் உங்கள்பால்!

பூணாத பேருவகை பூண்டேனே! என்னுளத்தில்
ஏறிநின்ற நற்றுணையே! ஏழைக் குருடியிடம்
ஊறிநின்ற இன்பமே! உள்ளுயிரே! உங்களையே,
தொட்டு மகிழ்கின்றேன்! தொல்லுலகில் யானறியா
எத்துணையோ இன்பத்தை இன்றுணர்ந்தேன்; என்சிறுகை

கொள்ளாத மார்பே! குலையாத பேருருவே!
அள்ளாத சீரே! அணைக்கும் திருமார்பில்,
மண்பரப்பில் பேசுகின்ற மாண்பெல்லாம்
யான்கண்டேன்!
பண்பரப்பும் ஓசைவரப் பாடும் புலவரெனப்
பேசுகின்றீர்! இன்றோடிப் பேதையுங்கள் புல்லடிமை!
மூசுகின்ற பேரின்பம் மொய்க்கட்டும்' என்றுபல
சொல்லி முடித்தவுடன் சொக்கிக் கிடந்தவளைச்
'செல்லி'யென் றள்ளியவள் செவ்வாயின் கீற்றிதழில்
முத்தத்தில் ஒன்றை முதல்வைத்தான்; முன்காணாப்
பித்தத்தைக் கண்டுவந்தாள் பின்பு!



# 3

முத்தத்தால் செல்வி முகஞ்சிவந்து போனதையும்,
மத்தத்தால் ஓவியமாய் மங்கையவள் நின்றதையும்,
முத்தன் அறியவில்லை; ஆனாலும் முன்னறியா,
எத்துணையோ நல்லுணர்வை இன்றடைந்தா ரவ்விருவர்!

அன்னவரின் காதலுக்கே ஆருந் தடையில்லை!
மன்னவரின் பேருரிமை மண்ணாகிப் போனதுகாண்!
சாதித் தடையில்லை! செல்வச் செருக்கில்லை!
மோதுகின்ற அச்சமில்லை; மூடர்க் கிடமில்லை
'மானெ'ன்றும் பெண்ணை, மணவாளன் தன்னையோர்
'கூனெ'ன்றும் கூறி, குறைகாட்டும் பேச்சில்லை!
கொட்டிவைத்த பண்டத்தைக் கொண்டானின் தாய்பார்த்தோர்
தட்டுக் குறைந்ததெனப் பெண்ணணங்கைத் தள்ளிவிடும்,
கல் நெஞ்சம் இல்லை; கழுகுநோக் கங்கில்லை!
பல் கொஞ்சம் தூக்கென்றும், பார்வைகொஞ்சம் மட்டென்றும்
மண்ணில் உயிர்கட்குள் மாசுமிகப் பேசுகின்ற
மொண்ணைப் பழக்கமில்லை! மூட வழக்கமில்லை!
கண்ணழகு நீங்கக் கருத்தழகே வாய்ந்திருந்த
பெண்ணணங்கை அன்னவனும்,பேதையினை அன்னவளும்
ஏற்று மகிழ்ந்தபின்னை என்னகுறை அன்னவர்க்கே?
தூற்றும் உலகவர்க்குத் தோதில்லை; ஆதலினால்
அன்பும் அறனும் உடைத்தாய இல்வாழ்க்கைப்
பண்பும் பயனுமென் றாகிப் படர்ந்ததுகாண்!

உள்ளத் தொளிபடர்ந் தோங்குதல்போல் முத்தனவன்,
துள்ளியெழுந்தான்; அத்தோகையவன் பின்னெழுந்தாள்!

முன்னே நடந்துசென்ற முத்தனவன் தோள்பற்றி,
பின்னே நடந்தாளப் பேதை! உலகமெல்லாம்
தீதற்ற வெள்ளொளியால் தேர்ந்ததே! அன்னவர்முன்
ஏதுமற்றுப் போன திருள்!



# பறவைகள் மாநாடு

— முன்னுரை.

[ஒருவர் கருத்து இன்னொருவரை ஆளலாம்; ஆனால் ஒருவர்மொழி இன்னொரு மொழியை ஆளக்கூடாது. மொழி ஆளப்படுமானால் கருத்து குருடாகப் போகின்றது. கருத்து குருடானால் பிறப்பே பொருளற்றதாகப் போகின்றது; வடிவு சிதைகின்றது: உயிர்மை அழிகின்றது.

மொழி மாந்தரை மட்டும் பிணிப்பதன்று; விலங்கு, பறவை, பிற சிற்றுயிர்கள் யாவற்றை யும் பிணிக்கும் ஓர் இயற்கையாக்கம்!

சிற்றுயிர்களும் தம் இயற்கை உயிர்ப்பை விலக்கி வேறோர் உயிரின் உயிர்ப்பில் வாழ ஒருப்படுவ தில்லை. தன்தன் தனிமைச் சிறப்பையே ஒவ்வோ ருயிரும் வெளிப்படுத்த விரும்புகின்றது.

உயிரறத்தை வெறுமையாக்கும் மொழி யடிமையை எதிர்த்துப் போராட ஒரு சிட்டுக் குருவிக்கும் வல்லமை உண்டு. இயற்கைச் சட்டம் மாற்றப்படும் பொழுது அக் குருவியே யானையின் வன்மைகொண்டு போரிடுகின்றது. அரசியல் வலிமை, பொருள்வலிமை, இவற்றால் வரும் அதிகார வல்லாண்மைகள் யாவும் அக்கால் சிதறியடிக்கப் படுகின்றன]

## 4. பறவைகள் மாநாடு [1964]



தென்னன் பொதிகைத் திருமலையில் அன்றொருநாள்
பொன்னின் பரிதி புலர்ந்தெழுமுன், ஆங்கிருந்த
ஓரா யிரம்விழு(து) ஊன்றிப் புடைவிரித்து
கார்போர்த்த வாறு கவிந்திருந்த ஆலடியில்
தெற்கில் குமரி முனைதொடங்கிக் கேரளத்தும்,
வெற்புநிறை ஆந்திரத்தும், கன்னடத்தும், கூர்ச்சரத்தும்,
விந்தியத்தைத் தாண்டி விளங்குபல நாட்டிலும்வாழ்

இந்தியப் புட்கள் இணைந்தொருங்கே வீற்றிருந்த!
கண்ணைப் பறித்திழுக்கும் காந்தப் பறவைகளாம்
வண்ண மயிலும் வளர்கிளியும் பூங்குயிலும்
மின்னற் குருவியும் மேவும் புறவினமும்
நன்னர் மொழிபயிலும் நாகணவாய்ப் புள்ளினமும்
வாழ்வை இசைக்களித்து வாழ்வானம் பாடியும்
சூழ்வுநிறை காகமும் சூர்த்தகுரல் ஆந்தையும்
வாவல் இனமும் வளைகழுத்துக் கொக்கினமும்
சேவலொடு கோழிகளும் சேர்ந்தங் கிணைந்திருந்த!
ஆங்கவற்றின் மேலே அரசக் கழுகொன்று
வீங்குகின்ற மூச்சோடும் வெற்றி நினைவோடும்
சூழ்பறவைக் கூட்டத்தைச் சுட்டெரிக்கும் பார்வையொடும்
'வாழ்க பறவையினம்' என்றவொரு வாழ்த்தெழுப்பிப்
பின்னர் வருமாறு பேச்சைத் தொடங்கியதே;

'என்னருமை மக்களே! இன்றோர் திருநாளாம்!
இன்றோடு நாம்அமைத்த ஏற்றமிகு நல்லாட்சிக்
கொன்பது மாதங்கள் ஓடி மறைந்தனவாம்!
இங்கென்றன் ஆட்சியிலே இங்கொன்றும் அங்கொன்றும்
பொங்கும் பசிப்பிணி,நோய் பூண்டுயிர்கள் மாண்டாலும்
பொல்லா விலங்குகளால் புன்மையிடர்ப் பட்டாலும்,
வல்ல கொலைகளவு வாய்த்தாலும், நீங்களெலாம்
எஞ்சி யிருக்கின்ற காரணத்தால் இவ்வாட்சி
'அஞ்சுமா றில்லை; அனைவர்க்கும் ஒப்புதலே'
என்னும் ஒருகுறிப்பை யானறிந்து போற்றுகின்றேன்—'
(இன்ன இடத்திலே எங்கிருந்தோ 'இல்லைஇல்லை'
என்றோர் பறவை இடுக்கில் தலைமறைத்துக்
கொண்டு குரல்கொடுக்கக் கூட்டம் சலசலக்கும்)

ஆராங்கே?" என்றே அதிர்ந்த குரலெழுப்பி,
நேரங் கடத்தி, நிமிர்ந்தவொரு பார்வைதந்து
வல்ல கழுகரசன் சொற்கள் வழங்கியது:

"புல்லர் ஒருசிலர் மாறாய்ப் புகன்றாலும்
இந்திய நாட்டுப் பறவை இனத்துக்கு
வந்த பெருமையினை வாய்வலிக்கப் பேசிடினும்
காது புளிக்குமோ? நெஞ்சம் கரையாதோ?
ஓது பெருமை உலகப் பெருமையன்றோ?
ஆதலினால் உங்கள் அனைவர்க்கும் ஒன்றுசொல்வேன்;
தீதாய் நினைவற்க; உள்ளந் திறந்துரைப்பேன்;
திங்களொன்றாய் ஆய்ந்துவந்து தீர முடிவெடுத்தே
உங்களது நன்மையாம் ஒன்றே கருதி
இதனை உரைக்கின்றேன்; இங்குவந்த நீங்கள்
அதனை உவந்தேற்க அட்டிசொல மாட்டீர்கள்
என்பதையும் யானறிவேன்; என்றாலும் இங்குசிலர்
தம்பழமை பேசி இசைவு தரமறுப்பர்;
இன்னவரைப் பற்றியான் என்றும் வருந்துகிலேன்;
அன்னவரோ பண்டைப் பெருமை அழப்பேசிப்
பொங்கிவரும் நல்ல புதுக்கருத்தை யொப்புகிலார்;
இங்கிவரின் நாக்கை இழுத்தறுக்க நானறிவேன்;
முன்னோர் முயன்று முடியாமற் போனதிதாம்;
என்னோர் திறத்தால் இதுமுடியும் என்றுணர்ந்தேன்;

"என்னருமை மக்களே! இன்றுநாம் வேண்டுவன:
முன்னர் நறுங்கல்வி! மூக்குநிறை நல்லுணர்வு!
பின்னர் குடியிருப்பு! பீடுற்ற நல்வாழ்க்கை!-
அல்லவா?" என்றரசப் புள்ளங் கதட்டிடவே,
எல்லாமும் ஆம்ஆம் எனவே தலையசைத்த;

இவ் விடையால் உள்ளம் இனித்த கழுகரசன்,
ஒவ்வாதார் இங்கே உளராவென் றேவினவே,
காக்கை யினம்'இல்லை; இல்லை' எனக்கரையும்,
சிழ்க்கை யடித்துவந்து 'வௌவால்' வரவேற்கும்.
பின்னும் கழுகரசன் பேசத் தொடங்கியதே!

''இன்னும் உரைப்பேன்; இதுகேளிர்! நாமெல்லாம்
ஒற்றுமையாய் வாழ்ந்தால்தான் முன்னர்
உரைத்தவற்றை
முற்றும் சிறப்பாய் முடித்தல் எளிதாகும்!
இன்றேல்நம் எண்ணம் எரியுள் இடுபஞ்சாம்!
அன்னவோர் ஒற்றுமை எங்ஙன் அடைகுவதோ?
என்று வினவின் இதோநான் உரைக்கின்றேன்;
ஒன்றும் பிறழாமல் உள்ளத்தில் கொள்ளுங்கள்.
நம்முள் பல இனங்கள்; நம்முள் பலமொழிகள்;
நம்முள் பலவாழ்க்கை; நம்முள் பலவழக்கம்;

ஊரும், மொழியும், ஒழுக்கமெலாம் ஒன்றுவதே
சீரும் சிறப்புமாம்! இல்லையெனின் சீரழிவே!
ஈதை உளத்தோடே எண்ணி முடிவுசெய்தேன்;
ஆகையினால் நீங்கள் அனைவீரும் எம்மின்
கழுகு மொழிதன்னைக் கற்றுவரல் வேண்டும்:
பழகின் மிகஎளிது! பைங்கிளியும் பூங்குயிலும்
ஆடல் மயிலும் அவரவர்தம் முன்னோரின்
பீடாம் மொழியே பெரிதென் றுரைத்திடினும்
ஒற்றுமைக்கு நல்லவழி உண்டால், கழுகுமொழி
கற்றுவரல் ஒன்றே! கனிவாக மீண்டுரைப்பேன்:

காக்கை யொருவகையா 'கா கா கா' வென்றுரைக்கக்
'கூக்கூக்கூ' வென்றே குயிலிசைக்கப், பைங்கிளியோ
'அக்கா அக்' காவெனவே ஆர்க்க, மயிலகவ,
'கொக்கரக்கோ' வென்றிருந்தச் சேவல் குரலெழுப்ப_
தூத்தூத்தூ என்ன மொழிக்குழப்பம்? தோழரீர்?
பூத்துக் குலுங்கும் புதுமைக் கருத்துகளைச்
சற்றே நினையுங்கள்; உள்ளம் சரியாகும்!
பற்றே தவிரப் பழமை உயர்வில்லை!
இந்தக் கருத்தை எதிர்த்திடவிங் காருமிலர்
என்றே கருதுகின்றேன்; இல்லையா, காக்கையே?"

என்றுதன் அண்டை இருக்கின்ற காக்கையினை
மென்றுகூ ழாக்கி விழுங்கும் இடிக்குரலில்
கேட்டிடவும், காக்கை கிடுகிடுத்து மெய்வெயர்த்தே
ஆட்டுந் தலையோடும் ஆடாக் குரலோடும்
"ஆமாமாம் அப்படியே! ஆரெதிர்ப்பார்"
என்றுரைத்தே
பூமாலை ஒன்றைப்போய்ப் போட்டு வணங்கியது;
வௌவால் இனங்களெலாம் 'வாழ்கரசன் வாழ்க'வென
ஒவ்வும் மனக்கருத்தை ஆங்கே உரைத்தமர்ந்த;
ஏந்தும் மனத்துயரால் நெஞ்சில் இடியேறக்
காந்தச் சிறுகுருவி உள்ளம் கனன்றிருக்கும்!
தோகை மயில்களெலாம் நெஞ்சம் துடிதுடிக்கும்!
வேகும்உள் ளத்தால் குயில்கள் வெதிர்வெதிர்க்கும்!
பச்சைக் கிளிக்குப் பதைபதைப்பு வந்தாலும்
அச்சம் ஒருபுறத்தே ஆட்கொள்ள நின்றிருக்கும்!

காதற் புறவினமோ, கன்னித் தமிழ்ப்புலவர்
தீதென்ன வந்தாலும், உள்ளம் திரியாமல்

பண்டை இலக்கியத்தைப் பாடுவதும் விள்ளலுமே
தொண்டென்று கூறித் தொடைநடுங்கிக் கொண்டு வரும்
ஆக்கம் கருதி அமர்வதுபோல் ஆங்கிருக்கும்!
நோக்கம் எதிர்பார்த்தே நிற்கும் கரிக்குருவி!
வானம்பா டிக்குருவி வந்த தடையெண்ணி
மானந் திரிந்திழிந்த மற்ற பறவைகளைப்
பாட்டால் மனந்திருப்பி உள்ளத் துணர்வெழுப்பும்
நாட்டத்தோ டின்னும் நடப்பதெலாம் பார்த்திருக்கும்!
நாகணவாய்ப் புள்ளினமோ நாவும் அசைக்காது
வாகான நல்முடிவு வாராதோ என்றிருக்கும்!
ஆந்தை,'அக் கூ'வென் றவலக் குரல்கொடுத்தே
ஏந்துகின்ற துன்பம் எடுத்துப் பறைசாற்றும்!
கொக்குக் குலமெல்லாம் கூம்பி இருந்தபடி
தக்கதொரு நேரம் தமக்குவரக் காத்திருக்கும்!

இன்னபடி ஆங்கே இருந்த பறவைகளின்
முன்னர் கழுகரசன் மொய்ம்புறவே உள்ளுவந்தும்,
ஆட்சி தலைக்கொண்ட ஆண்மைச் செருக்காலே
மீட்சியிலாப் புட்களெலாம் மீளத் துடிதுடிக்கும்
காட்சி கருதாமல் கால்மேலோர் கால்போட்டு
மாட்சி குறையாதும் மன்னன்போல் வீற்றிருக்கும்!

எண்ணம் முதிர்ந்துவர எல்லாப் பறவைகளும்
விண்ணென்று வானில் வெளிப்பட்டுப் போவதுவும்,
மீட்டும் மரக்கிளைமேல் வந்தமர்ந்து மீளுவதும்
கூட்டமாய்க் கூடிக் குசுமுசுவென் றுய்வதுமாய்
ஆங்கிருக்கக் கண்ட கழுகரசன் மீண்டுரைக்கும்

'ஈங்கென்றன் கூற்றிற் கெதிர்க்கூற் றிருக்குமெனில்
உள்ளத் துணிவோ டெழுந்தே உரைத்திடுக;
தள்ளத் தகாத கருத்தென்னின் மேற்கொள்வோம்',
என்றே குடிநலத்தை எண்ணி உரைப்பதுபோல்
நன்றே புளுகிற்று! நாட்டமெலாம் ஒன்றே!
இருந்திருந்து பார்த்தே எழுந்ததொரு சிட்டே!
அருந்தின் ஒருவாய்க்கும் ஆகாக் குருவியினைக்
கண்ணுருட்டிப் பார்த்துக் கழுகரசன் 'என்ன'வென,
வண்ணச் சிறுசிட்டு வாய்பதைக்கக் கூறியது:

''வண்மைக் கழுகரசே! வாழுகின்ற புட்களெல்லாம்
முன்னம் பயிலும் மொழியைத் துறந்தினிமேல்
உங்கள் கழுகுமொழி ஒன்றே மொழிவதெனின்
எங்கள் மொழியால் எழுகின்ற பல்லிசைகள்
மாய்ந்தொழிந்து போகாவோ? மாய்ந்துவிடின் அந்நிலைமை
வேய்ங்குழலும் யாழும் விறல்முழவும் நல்லுறுமும்
கொம்பும் முரசும் குடப்பறையும் துந்துபியும்
பம்பையும் சங்கும் பதறும் கரடிகையும்
சேர்ந்தியம்பும் பல்லியங்கள் யாவுமே ஒன்றேபோல்
ஆர்ந்தே ஒலிப்பனவென் றாகாவோ? பல்லிசையேன்?

மல்லிகையும் தாமரையும் உள்ளம் மகிழ்மலரும்
முல்லை மருக்கொழுந்தும் முள்ளலரி நன்மலரும்
ஒன்றுபோல் நாற்றம், உருவம் பெறுவதெனின்
நன்றாமோ? அந்தநிலை நாளில் புளிக்காதோ?

ஒன்றில் மனங்கசந்தால் ஒன்றில் உளமினிக்கும்!
ஒன்றில் துயர்மிகுந்தால் ஒன்றில் மகிழ்வலரும்!

இன்னபயன் சேர இயற்கை பகுத்தவற்றை
என்னபயன் எண்ணி இணைத்துவிடப் பார்க்கின்றீர்?
உள்ளம் உடலுணர்வு ஊறுகின்ற நல்லறிவு
கொள்ளும் பயன்முற்றும் சேரக் குமிழ்ந்தவன்றோ
சொல்லும் மொழிகளெல்லாம்? நாம்முனைந்து
தோற்றியவோ?

எல்லா மொழியும் இயற்கை தருவினையே!
ஓசை வடிவாய் உலவும் மொழியாவும்
பேசும் மொழியினுக்கு முந்துநிலை! பேருலகில்
எல்லாப் பொருளும் இருக்குநிலை வேறும்போல்
எல்லாப் பொருளும் ஒலிக்குநிலை வேறாகும்!
அவ்வவ் வொலியமைப்பே அவ்வம் மொழியாகும்!
இவ்வொலியை எல்லாம் எடுத்துப் பிசைந்துருக்கி
ஒன்றாக்கி விட்டால் உலகில் நடப்பேது?
நன்றாக எண்ணி நலங்காண வேண்டுகின்றேன்.

ஒன்றொழியின் அப்பொருளில் ஊறும் பயனழியும்;
நின்று வழங்கும் மொழிக்கும்அந் நேர்ச்சியே!
உள்ள உணர்வலர ஊறும் மொழியழியின்
உள்ளம் அழியும்! அதன்பின் உருவழியும்!
காக்கை மொழியழிந்தால் காகம் உடனழியும்!
கூக்கூவென் றார்க்கும் குரல்சாகின் சாம்குயிலும்!
சிட்டின் மணிக்குரலோ சீரழியின் சிட்டழியும்!
அட்டியில்லை எம்மை அழித்திடவே எண்ணிவிட்டீர்!
கொல்லாதீர்! எம்மின் குரல்வளையைக் கொய்யாதீர்!
எல்லாப் பறவைகட்கும் ஏற்ற கருத்தமைப்பீர்!"

என்று மணிச்சிட்(டு) இயம்பி முடித்திடவும்
'நன்றுநன்று' என்றங்கே நாற்றிசையும் சூழ்ந்திருந்த

புட்களினம் கூறிப் பொலபொலெனத்
தம்சிறகால்,
வெட்கிக் கழுகு வெலவெலத்துப் போகுமட்டும்
ஆர்த்த ஒலியெழுப்பி ஆங்கெழுந்தே ஒன்றையொன்று
சேர்த்தணைத்தே உள்ளம் சிலிர்த்திடவே வான்நோக்கிச்
சிவ்'வென்று தாவிச் சிறகடித்துப் போயினவே!

வௌவாலும் காக்கைகளும் மட்டும் வருந்துவபோல்
தொங்குந் தலையோடு துன்பமுகம் காட்டினவா
றங்கே இருந்த அரசக் கழுகுக்கே
ஆறுதலை கூறி, அவையும் பிரிந்து சென்ற!

மாறுதலை, புட்கள் மலர்ச்சியினை எண்ணியெண்ணி
உள்ளமிகச் சோர்ந்தே உணர்வழிந்து போயடங்கக்
கள்ளக் கழுகரசன் கண்ணீர் வடித்ததுகாண்!
மங்கிவரும் ஆட்சி மறைய இருப்பதையும்,
பொங்கிவரும் மக்கட் புரட்சிப் புயலினையும்,
வெய்ய புரட்சியினால் வீணான மாற்றமும்
பொய்ம்மைக் கருத்தும் பொடிப்பொடியாய்ப்
போவதையும்
எண்ணிப் பறவைகள்முன் ஏதேனும் வம்புரைகள்
பண்ணி யிருந்தால் படும்துயரம் உள்நினைந்தும்
தாக்கப் படாமலுயிர் தப்பியதைக் கண்டுவந்தும்
ஏக்கமொடு சென்ற தெழுந்து!





# வில(ா)ங்கு

முன்னுரை.

(மாந்தரில் விலங்கும் உ ண் டு; விலாங்கும் உண்டு. மெலியோரைத் தம் வலிமையால் சிதைப் போர் மாந்தராயினும் விலங்குகளே யாவர். நல்லவர்போல் வாழ்ந்து வாய்ப்புக் கிடைக்கும் பொழுது தீயராய் வாழ்வோரும் உளர். இவர் விலாங்குமீன் போன்றவர்.

குமுகாய அமைப்பில் உள்ள இத்தகைய விலங்கு களாலும் விலாங்குகளாலும் எத்தனையோ ஏழை எளியவர் வாட்டி வதைக்கப்படுகின்றதை நாம் கண்கூடாகக் கண்டு எதிர்த்துப் போராடும் வன்மையின்மையால் மென்று விழுங்கிக்கொண் டிருக்கின்றோம்.

இத்தகைய தீயவர்களால்-கயவர்களால் நாமோ அல்லது நம்மைச் சார்ந்தவர்களோ சிதைக்கப் படும் பொழுதுதான், நாம் அவர்தம் கொடு மையை உணர்கின்றோம். சிலநேரங்களில் அவர் களை எதிர்த்துப் போராடவும் செய்கின்றோம். அவர்களின் தீமைக்கு அறத்தீர்ப்பையும் நாடு கின்றோம். ஆனால் அவ்வறமும் தீர்ப்புமே அவர் களாகி விடும்பொழுது நம் நெஞ்சம் சுக்கு நூறாகவெடித்து விடுகின்றது. இக்கொடுமையை மாற்ற வழி ........?)

## 5. வில[ா]ங்கு [1965]



பொன்னம் மாள்ஒரு புதிய ஆசிரியை!
அன்னம் போலும் அழகு நடையினாள்!
மயிலைப் போலும் பழகு சாயலாள்!
குயிலைப் போலும் கனிந்த குரலினாள்!
மலரைப் போன்ற தூய மனத்தினாள்!
நிலவைப் போன்று நிலவும் முகத்தினாள்!
கொடியைப் போலும் குலுங்கும் இடையினாள்!

மடியிலா நங்கை மனம்போல் தூய்மையும்
இனித்த காதலும், இளமையும் அழகும்
பனித்த மொழியும், பழகு சீர்மையும்
வாய்ந்த ஒருவனை மணந்த வாய்மையாள்!
ஏய்ந்த அன்பினால் இருவரும் தம்முள்

ஒத்துப் போகும் உயர்ந்த பண்பொடும்
தொத்திக் கொள்ளும் தூய்மை அன்பொடும்
ஒன்றிப் பழகி உயர்ந்ததோர் இல்லறம்
நன்றே நடத்தி வருகையில், அவளை
அண்மையில் உள்ள சிற்றூர் அமைந்த
பெண்கள் பள்ளிக்கு மாற்றிப் பிரித்தனர்!
ஆளன் அரசினர் அலுவல் பார்ப்பதால்
வாள்விழி யாளொடு வராமற் போகவே,
வெட்டப் பட்ட உயிரொடும், கடமையால்
கட்டுப் பட்ட உடலொடும், நெஞ்சொடும்
விட்டுப் பிரிகிலாச் சிட்டுக் குருவிகள்
மட்டிலாத் துயரொடும் வாழ்க்கை நடத்தின!

ஆயிரம் மடல்கள் இடையில் பறந்தன;
சேயிழை நினைவும் சேயோன் நினைவும்
மடலொடு சென்று மடலொடு மீண்டன!
உடலொடு கிடவா உயிர்கள் துவண்டன!

கிழமைக் கொருமுறை கிளிமொழி வருவாள்!
அழகியை அனுப்பிய அடுத்த நாளே,
ஆளனும் வண்டியில் அவள்வயின் சேர்வான்!
நாளும் கிழமையும் மாதமும் நகர்ந்தன.
இடையிடைக் கல்வித் துறையினுக் கெழுதிய
மடல்களோ திரும்பி மறுப்பொடு மீண்டன!
அன்பு நெஞ்சினர் அவலம் உணரா
வன்பு மனத்தினர் அவர்களைக் கூட்டிலர்!

இப்படி இருக்கையில் ஒருநாள் இவளுக்கு
முப்படி யாய்அவன் நினைவு மூளவே,
வெள்ளியும் காரியும் விடுமுறை பெற்றுப்
பள்ளி முடித்துப் பறந்து சென்றே

இறுதியாய்ப் போகும் வண்டியில் ஏறி
உறுதியாய் வீடுபோய் உயிர்க்கும் நினைவோடே
உந்து வண்டிக்குக் காத்தாள் ஒண்டொடி!
அந்த வண்டியோ அன்றைக்குப் பழுது!
மொய்த்த நினைவினுல் மொய்குழல் குலைந்து
வைத்த காலடி வருந்திடத் திரும்பி
இரவு பத்துக்கு இருப்பிடம் வந்தாள்!

திறவுகோல் எடுத்தே அறையினைத் திறந்தாள்!
பொய்யாய்ப் போன வாழ்க்கையால் புலம்பித்
தொய்ந்த உடலொடு தொப்பெனப் படுக்கையில்
சாய்ந்தாள் அன்பின் சாகா நெஞ்சினுள்.

ஏய்ந்த அரைமணி ஏகிய பின்றை
பள்ளிக் காவலன் பதறிட வந்தே
"அம்மா, அம்மா, என்றே அரற்றி
இம்மா நேரமா இங்குதான் இருந்தார்;
உங்களைப் பார்க்க வேண்டுமென் றுரைத்தார்!
உங்களைக் காணுது போகவே அவரைப்
பள்ளியில் இருத்தி, வண்டியைப் பார்த்தேன்;
இல்லையென் றறிந்தே இங்கே வந்தேன்!
உடனே வருக" என்றவன் உரைக்க,
உடனே எழுந்தவள் "ஒருகால் அவரே
என்னைப் பார்த்திட இங்குவந் தாரோ?
என்னினும் அவர்திறம் இருபடி உயர்ந்ததோ?
இறைவா, அவராக இருந்திடல் வேண்டும்!
நிறைவே றாதோ, எண்ணம் நிலைத்திடின்"-
என்றே நினைத்துக் காவலன் ஏக
ஒன்றே யன்றிப் பிறநினை வில்லாள்
பள்ளி யடைந்தாள்!

பள்ளியின் தனியறை!
உள்ளே மின்விளக் கொளியினில் ஒருவர்
நின்றுகொண் டிருந்தார்! நினைவிலாப் புதுமுகம்!
முன்றிலில் நின்று, மணந்தான் தன்னுடற்
சீரைப் பார்த்திட வந்தவள் "இக்கால்
யாரைப் பார்த்திட வேண்டும்?" என்றாள்,
ஊரே அடங்கி யிருந்ததால் இவ்வொலி
கார்முகில் இடிபோல் கேட்டது! கயல்விழி,
விடையெதும் வராமற் போகவே வெடுக்கென
நடையைத் திருப்பினாள்! அதன்பின் நடந்தவை
ஒன்றும் அறியாள் ஒண்டொடி.
சென்றுகொண் டிருந்தது நிலவிலா இரவே!



# 2

மண்விழிப் புற்றதாய்க் காலை மலர்ந்தது!
கண்விழிக் கையிலே கட்டிலிற் கிடந்தாள்!
புண்போல் மெல்லுடற் பொருத்தெலாம் பெருவலி!
விண்போலும் நெஞ்ச விரிவெலாம் சாவொலி!

முன்னிரா நடந்த நிகழ்ச்சிகள் முன்பின்னாய்ப்
பொன்னம் மாவின் நினைவினில் படரவே
'ஓ'வென் றழுதாள்; 'ஆ!'வென் றலறினாள்!
சாவாமல் செத்த துயரை நினைத்தாள்!
நினைத்ததும் நெஞ்சம் நெருப்பாய்ச் சுட்டது!
தனைத்தான் அறைந்தாள்! தலைதரை மோதினாள்!
எழுந்தாள்! புலம்பினாள்! இளமுகம் கீறினாள்!
விழுந்தாள்! புரண்டாள்! வெதும்பினாள்! உருண்டாள்!
சாவொன்று வந்து சாராதோ என்றாள்!
'தூ'வென்று மக்கள் கூட்டத்தைத் துப்பினாள்!
பெண்ணைப் பிழைசெயும் உலகைப் பழித்தழுதாள்!
கண்ணில் கனப்பேற்றிக் குருதிநீர் பிழிந்தாள்!
அறநூல் சாடினாள்! அகநூல் நகைத்தழுதாள்!
புறநூல் தனக்குப் புத்துரை எழுதினாள்!
ஆளனை எண்ணி வாயரற்றி அங்காந்தாள்!
வாள்போல் தமைப்பிரித்த அலுவலைத் தூற்றினாள்!
ஆசிரியை என்றே அரசினர் தந்த
மாசுநிகர் பட்டச் சான்றிதழைத் தூள்செய்தாள்!
கண்முன் கிடந்த பொருள்கள் சிதறடித்தாள்!
பண்மறந்து போன பச்சைக் கிளியாய்,
சொல்மாறிச் சொல்லி உள்ளம் சுண்டினாள்!
அல்வழிக் கவலை ஆளாக்கி யோனைக்
கொல்வழி என்னென்னக் குறிக்கொண் டரற்றினாள்!

தன்னைக் கவின்செய் அணிமணி தவிர்த்தாள்!
மின்னிடை முறிய மேனியை வீழ்த்தினாள்!
வளப்பம் கொடுத்த இளமையை ஏசினாள்!
உளப்பாங் கில்லா உலுத்தரை இகழ்ந்தாள்!
கல்வித் துறையைச் சாவித்தாள்! கற்றோர்
புல்லிய அறிவைப் புழுதியென் றிகழ்ந்தாள்!

இன்ன வாறாய் என்ன அரற்றியும்
பொன்னம் மாளின் உள்ளம் பொறாததாய்ச்
சாம்பிய உடலொடும் உயிரொடும் துடித்தது!
தேம்பித் தேம்பிச் சிறிய மகவுபோல்
குரல்வற்றி வறள அழுதுயிர் குமைந்து
மருள்வந் தடங்கிய மங்கை கிடந்தாள்!
வேலையை முடித்து நெஞ்சம் விருப்பெழ
மாலைப் பொழுதில் மனைவியைப் பார்க்க
ஊர்வந் திறங்கி உறவோன் விரைந்தான்!
மூசிக் கிடக்கும் அகல்விழி மூடி
வீசிக் கிடந்த யாழ்போல் கிடந்தாள்
பெறற்கரும் மனைவி! பேதையின் நெஞ்சம்
இறப்புறத் துடிக்க, ஏந்திழை தன்முகம்
தூக்கிப் பார்த்தான்; உயிர்துணுக் குற்றான்!
போகிலை உயிரென உள்ளந் தேறிக்
கொதியுறும் முகத்தில் குளிர்நீர் தெளித்தான்!
பொதியவிழ் மலர்போல் விழிகள் புலர்ந்தன.

ஆளைக் கண்டதும் அணங்குவாய் அரற்றித்
தோள்தலை சார்த்தித் துயர்பொறா தழுதாள்!
ஒன்றும் விளங்கிலா துள்ளம் வருந்தினான்!

பொன்றளிர் மேனி பொலிவிழந் திருக்கக்
கண்டுளம் வெதும்பிக் கண்ணெனும் மனைவிபால்
கொண்ட துயர்தனைக் கூறுக வென்றான்!
பச்சைக் குழந்தைபோல் பாவை அழுதே
அச்சிலா வண்டிபோல் ஆனதை-தானொரு
நச்சு மனத்தனால் நலிக்கப் பெற்றதைக்
கூறினாள்; ஆளன் குமையும் உளத்தொடும்
ஏறிடும் சாத்துயர் இடும்பொடும் கேட்டான்!
உடற்கொதிப் படங்கி உளக்கொதிப் படங்கிக்
கொடியுடல் தன்னை வாரி நிறுத்தித்
தீயில் விழுந்து புழுப்போல் துடித்த அவ்
வாயிழை தன்னைத் தேற்றினான்; அதன்பின்
களங்கமில் ஒருத்தியின் கற்பைக் குடித்த அவ்
விலங்கைப் பிடித்துச் சிதைத்திட வேண்டி,
அவ்வூர் காக்கும் ஆணையோர் பாலே
வெவ்விய நிகழ்ச்சியை விளக்கிட நடந்தனர்!

மன்றம் இருந்தது! மக்கள் இருந்தனர்!
முன்றில் நெடுங்கொடி துலாக்கோல் எழுதிப்
பறந்துகொண் டிருந்தது! பயன்பெறு மக்கள்
அறங்கூ றவைய வாயிலில் நின்றனர்;
சிதைக்கப் பட்ட உடலொடும், செத்துப்
புதைக்கப் பட்ட நெஞ்சொடும், தன்னால்
அருந்துயர் உற்ற கணவன் தன்னொடும்
பொருந்துயர் மன்றம் புகுந்தனள்; ஆங்கே,
மங்கையின் கற்பை மாய்த்த
வெங்கொடுங் கயவனே வீற்றிருந் தானே.



# பெண்ணல்லவள்

முன்னுரை.

(குடும்ப நிலையில் பெண்கள் பலவகை. கணவனின் வருவாயை எண்ணாமல் தம் உள்ளப் புனைவுகளையே பெரிதாகக் கருதுவார் பலர். அத்தகையாரில் சிலர் எவர் கூற்றுக்கும் செவி சாய்ப்பதில்லை; சிலரை அறிவு கூறித் தெருட்டியும் விடலாம்.

உண்மைகளை எடுத்து விளக்குங்கால், பொதுவாகப் பெண்ணே ஆணினும் அவற்றை எளிதாகப் புரிந்து கொள்ளுகின்றாள். அவ்வுண்மையான போக்கிற்குத் தானே அவனினும் பன்மடங்கு முன் நிற்கின்றாள். ஓர் ஆணைவிட, கொள்கையைப் புரிந்துகொண்ட பெண்ணே அதனை இறுதிவரையில் கடைப் பிடிக்கின்றாள். தனக்குப் பிடிபட்ட ஒன்றிலிருந்து அவள் எளிதில் பின்னடைவதில்லை. அந்நிலையில் அவள் தன் முன்னுள்ள யாவரினும் மேம்பட்டு விளங்குகின்றாள்; பிறர்க்கு முன்னோடியாகவும் நிற்கின்றாள்.

அத்தகைய பெண் திருத்தப் படுவதற்கு முன்னும் அதற்குப் பின்னும் கொண்டுள்ள மனவுணர்வுகள் இங்குக் கூறப்பட்டுள்ளன.)

## 6. பெண்ணல்லள்" [1959]



"பத்துநாள் முன்பிறந்த பச்சைப் பசுங்குழந்தை,
கத்திக் குரல்வற்றிக் கண்ணயர்ந்து தூங்குமட்டும்
எங்குநீ போயிருந்தாய்" என்றிரைந்தாள் மாமியவள்!

"பொங்கிவரும் சோற்றைப் புனலிட்டே ஆற்றிவிட்டுத்
துள்ளிக் குதித்தோடும் கன்றின் துடுக்கடக்கிக்
கிள்ளிவைத்த கீரைக் கொழுங்கட்டைத் தின்னவந்த
வெள்ளாட்டுக் குட்டியைநான் வேலிவரை ஓட்டிவிட்டுப்
பள்ளத்தில் கால்வைத்துப் பாதஞ் சுளுக்கேற,
முன்வீட்டுப் பாட்டி மருத்துவத்தைக் கேட்டுணர்ந்து
மின்வெட்டும் நேரத்தில் மீண்டிருக்க, நீயென்னை
ஏன்விரட்டு கின்றாய்? இளங்குழந்தை கத்துமட்டும்
கூன்கூரை தாங்கி, என்றும் கூறாத தூண்போலப்,

பார்த்துக் கிடந்தாயோ? பையனுக்கு மேலெல்லாம்
வேர்த்து விறுவிறுத்துப் போயிற்றே! வீணுக்கேன்
உள்ளம் வருந்துவதாய் ஓலமிட்டாய்? நீபெற்ற
பிள்ளை வரட்டு" மெனப் பேசியவள், ஓயாமல்
பின்கட்டிற் கேகிப் புகையும் அடுப்பூதிக்
கண்முட்டி நிற்கின்ற கண்ணீர் துடைத்தெறிந்து,
பாயெடுத்துப் போட்டுப் படாலெனத்
தான்சாய்ந்தாள்;

'வாயெடுத்தால் வம்பு வரு'மென் றவள்மாமி
முன்கையை ஊன்றி முழங்காலால் தானகர்ந்து
முன்கட்டிற் குப்போய் முடங்கினாள்! காலைபோய்
தண்பகலைப் போல நடந்துவந்தான் மாமிமகன்!

உண்பதற்கு வாழையிலை ஓடிப் பறித்துவந்தே
"அன்னம்" எனத் தான்மணந்த அன்னத்தைக்
கூப்பிட்டான்;
உண்ணும் நிலையில் ஒருபொழுது காத்திருந்தான்.
வேலைக்குப் போயிருந்தான் வீடுவந்து சேர்ந்ததுவும்,
வாழை இலையறுத்து 'வா'வென் றழைத்ததுவும்,
அன்னம் உணர்ந்தும் அசையாம லங்கிருந்தாள்.

இன்னமுமாத் தூங்குகின்றாள்' என்றவனு
தீண்டிடவே,
"காலையிலே நானெழுந்து காற்காப்பு தேயுமட்டும்
வேலையிலே கண்ணூரன்றி, வெந்நீர்க்கும், தண்ணீர்க்கும்
நானே விலாவலிக்க, நாடுவதும் ஓடுவதும்,
மேனி தளர்வுறவே மேல்வேலைக் குப்பின்னே,

ஆப்பஞ்சுட் டுண்ண அடுக்குவதும், நீங்களதை
ஏப்பம்விட் டுண்ண முடியாமல் உண்ணுவதும்,
எஞ்சியதை நானுண் டிருப்பதுவும், நண்பகலில்
பஞ்சாய்ப் பறந்து பலவகையிற் காய்கறிகள்,
செய்வதவு மாகிப்பின் சின்னக் குழந்தைக்கு
வெய்யிலே காயவைத்த இளஞ்சூட்டு வெந்நீரை,
ஊற்றித் தலையுணர்த்தி உண்ணப்பா லூட்டிப்பின்
ஆட்டி யுறங்கவைத்தே 'அப்பாடா, வென்றே
உடல்சாய்த்தால், உண்ணுவதற் கோடோடி வந்து
கடல்மேலே விட்டுவைத்த கப்பலுக்குப் போவதுபோல்
ஆட்டிப் படைக்கின்றீர்! ஆராலே ஆகுமிது?
நீட்டிப் படுக்கவொரு நேரமில்லை! ஆமாமாம்!
காலைக்குள் வீட்டுக் கதையை நடத்திவைக்க
வேலைக்கா ரப்பெண் ஒருத்தி வேண்டும்''என்றாள்.

வாழை யிலையில் விரல்உகிரால் ஓவியத்தை
ஆழ வரைந்தபடி அன்னத்தாள் சொன்னவற்றைக்
கேட்டுத் தலைநிமிர்ந்த காதற் கணவனவன்
ஏற்று வெளிநடந்தான்! எங்கிருந்தோ தேடியன்று,
பின்மாலைப் போதிலொரு பெண்ணை
அழைத்துவந்தான்!
இன்மாலை யாகிற் றது!

∴ ∴ ∴

# 2

நேற்றுவந்த பெண்ணாள் நடத்துகின்ற வேலைகளால்,
ஆற்றாத கண்கொண்ட அன்னம் மனங்கசந்தாள்!

'சீவி மினுக்குகின்றாள்; சேலைபல மாற்றுகின்றாள்;
ஏவுகின்ற வேலைக் கெதிர்நின்று பேசுகின்றாள்;
தாய்வாங்கித் தந்திருந்த தண்ணீர்க் குடமெடுத்துப்
போய்மீளும் போதினிலே பொட்டென்று வைக்கின்றாள்!
'கொட்டுக்கொட்' டென்றொலிக்கக் காலால் நடக்கின்றாள்;
விட்டுக் கொடுக்காமல் வாய்நீளப் பேசுகின்றாள்;
கூன்கிழவி மாமியிடம் கூனிப் பணிந்திட்டே
நானழைத்தால் வேலையென நாளும் உரைகின்றாள்;
உள்ளறையில் நீங்கள் ஒருநாள் உறங்குகையில்
மெள்ள நுழைந்துங்கள் மேனிநலங் கண்டா''ளென்(று)
அன்னம் பலவகையாய் அன்றொருநாள் நள்ளிரவில்
தன்கணவ னண்டை தயங்காமற் கூறியிந்த
வேலைக்கா ரச்சிறுக்கி வேண்டா; விடிந்தவுடன்,
கூலி கொடுத்தனுப்பி மற்றொருத்தி கூப்பிடுங்கள்"
என்று வழக்காட ஏற்றவனும் தானெழுந்தே
அன்று விடியலிற்போய் ஆறுமணி யாய்த்தேடிக்
கொஞ்சம் முதிர்ந்தவொரு பெண்ணாளைக் கூட்டிவந்தான்;
அஞ்சி இருந்ததனால் அன்னம் மகிழ்வடைந்தாள்.

வேலைக்கு நல்லதொரு பெண்ணாக வந்தவுடன்,
காலைமுதல் மாலை கழியாப் பொழுதெல்லாம்

உண்பதுவும் உண்டே உறங்குவதும் பிள்ளைக்குப்
பண்ணாத ஒப்பனைகள் பண்ணி மகிழுவதும்,
அன்னத்தாள் ஏற்றிருக்கும் அன்றாட வேலைகளாம்!
அன்னத்தின் மாமிக் கதில்மகிழ்ச்சி என்றாலும்.
இல்லப் பொறுப்பின்றி, இல்வேலைத் தூய்மையின்றிக்
கொல்லப் படுகின்ற பெண்மைக்குக் காப்பின்றிப்
போனதை எண்ணிப் பொருமியவா றேயிருந்தாள்;
தானவற்றை எண்ணாமல் அன்னம் தனித்திருந்தாள்!

அன்றைக் கொருநாளில் அன்னம் கணவனுடன்
என்றைக்கு மில்லாத இன்பமிகும் பேச்சிலுயிர்
தூவி மகிழ்ந்திருக்குந் நேரத்தினிலே "அத்தான், நம்
ஆவல் கனிக்கோர் அழகான மோதிரமும்,
முன்வீட்டுக் காரிசெய்த முத்துப் பதக்கம்போல்,
என்கழுத்திற் கொன்றுமா யித்திங்கள் ஊதியத்தில்
செய்யுங்கள்" என்றாள்; செவியில் இடியேற
"மெய்யாகச் செய்கின்றேன்! "முப்பதுக்குப் போகுமா?"
என்றான் அவளத்தான்; "என்னத்தான் பேசுகின்றீர்;
முந்நூறு போட்டால்தான் முத்தால் பதக்கமாம்;
பின்னூறு போட்டால்தான் பிள்ளைக்கு மோதிரமும்!
இன்ன படியிருக்க எப்படியாய்ப் பேசுகின்றீர்?',
என்று சினந்தாள்; "இருக்கட்டும் என்றனுக்கே
என்ன வருமானம் என்றே உணர்ந்தாயா?"
என்றான்; அதற்கவளோ "எவ்வளவென் றாலென்ன?
அன்றுபோ னோமே அரைஞாண் கொடிவாங்க!
காசுக் கடைத்தெருவின் கோடியிலே வந்திருக்கும்
மூசைப்பொன் விற்கின்ற 'மோகனராம் சேட்டிடத்தில்
நூற்றுக்குப் பத்தென்று நூறுபொன்னும்
வாங்கிடலாம்

சோற்றுக்குப் போகத் துணிபோகத் திங்களிலே
வட்டிக்குப் பத்தும் வரவில் இருபத்தும்
விட்டெறிந்தால் போயிற்று; வீழுமோர் ஆண்டிற்குள்
முத்துப் பதக்கமும் மோதிரமும் மீதியன்றோ?
சொத்துகள் சேர்க்கச் சிறந்த வழியிதுவே!,'
என்று விளக்கி இறுமாந்தே அத்தானின்
குன்றுதோள் சாய்ந்தாள்; கணவன்
உரைக்கின்றான்;

"கோலப் பொடிமுதலாக் குங்குமம், நல் மஞ்சளுக்கும்,
காலையிலே வாங்குகின்ற முல்லைக் கடிமலர்க்கும்
ஆகுஞ் செலவென்ன? ஆவின்பால், சீனிக்கே
ஏகும் பொருளென்ன? இட்டளிக்கும் தோசைக்கும்
போகும் பணமென்ன? புத்தரிசிச் சோற்றுக்கே
வேகும் பொருளென்ன? வெண்ணை தயிர்வகைக்கே
என்ன செலவாகும்? காய்கறிக்கே என்னாகும்?
பண்ணியங்கள் பண்ண பருப்பென்ன? வெல்லமென்ன?
தேய்த்துத் தலைமுழுக எண்ணெயென்ன? தேர்ந்தாயா?
வாய்க்குக் களிபாக்கு வெற்றிலைக்கும் என்னாகும்?

இத்தனைக்கும் போனால் இருப்பதில்தான் நீகட்ட,
அத்தைக்குக் கட்ட, அவன்கட்ட, நான்கட்ட,
வெள்ளைத் துணியும் வகைவகையாய்ப் பூந்துகிலும்
கொள்ளையென் றில்லாமற் போனாலும் இல்லையென்று
சொல்லாமல் பெற்றுச் சுவைகாண வேண்டாவா?
இல்லறத்து வாழ்க்கை இவற்றோடே விட்டதா?
உண்ண உணவும் உடுக்க உடைவகையும்

எண்ணினேம்! நாமிருக்க இல்லமொன்று வேண்டாவா?
சொன்ன செலவில் சுருக்க வகையுண்டா?
என்னதான் மீத்தாலும், என்றனுக்கும் உன்றனுக்கும்
வேண்டியவர் என்றும், விருந்தென்றும், அன்புளத்தைத்
தீண்டியவர் என்றும், தமக்குறவே என்றும்
வருவார் தொகையென்ன? வந்துபோகக் காசு
பெறுவார் தொகையென்ன? பெற்றோர்கள் இல்லையா?
தம்பிக்கும், தங்கை, தமக்கையர்க்கும் பஞ்சமா?
கும்பிக்குத் தந்தால் குரல்வளைக்குத் தீதில்லை!
இத்தனையும் செய்தே இருகாசு மீத்தால்தான்
சொத்தென்று கூறலாம்! சொல்வேன்கேள் அன்னமே!"

"வீடொன்று கட்டுமட்டும் வாடகையாய் ஈவதிலே
நாடொன்று வாங்கலாம்! நாமட்டும் இப்படியா?
எண்ணற்ற பேர்கள் இருவேளைச் சோறுண்ண
எண்ணற்ற வாறாய் இடர்ப்பட்டு மாள்கின்றார்!

மன்னும் பலதொல்லை மாந்தர்க் கிருக்கையிலே
பொன்னும், மணியும், பொலிபட்டும், வேண்டுமா?
கூறிவந்த எல்லா வளமும் குறைவற்று
நூறுபங்காய்ப் பன்னூறு நூற்றாண்டாய் நந்தமிழர்
வாழ்ந்துவர வில்லையா? வாய்த்ததென்ன அன்னவர்க்கே?
சூழ்ந்த வளங்கள் சுருங்கிற்ற தென்னவென
நீயறிய மாட்டாய்: நினைப்போல எண்ணற்றோர்
வாயுணரா மக்கள் வகையறிய மாட்டார்கள்!
கூறுகின்றேன் கேள்நீ;

— கரையுடைத்து நீர்ப்பெருக்கு
மீறுகின்ற காவிரியும், மென்மைப் புனலென்றும்
ஊறுகின்ற வையையும் நாட்டின் இருகண்கள்!
சீருஞ் சிறப்பும் செறிந்த தமிழகத்தை
வேற்றரசர் சீரழித்தார்! வேண்டுமட்டும் மாற்றார்கள்
ஏற்றிக் கொடுபோனார்? இவ்வகைக்குப் பின்னே
வடவர் தமிழகத்தை வந்தடைந்தார்! மக்கள்
கெடவும் தலைப்பட்டார்! காசுக் கடைவைத்த
மோகனராம் சேட்டுக்கு முத்துநகை எங்குவரும்?

ஆகவே நந்தமிழர் அண்டைநா டேகி,
வடைசுட்டும், ஆப்ப வகைசுட்டும் வாழ,
இடம்விட்டுப் போகாத நம்போல்வார் எல்லாரும்
வட்டிக்கு வாங்கி வகையற்று நாளடைவில்
கெட்டழிந்து போகின்றார்! கேட்பதற்கிங் காருள்ளார்?
வண்டிவண்டி யாக வருகின்றார்! வந்தவுடன்
உண்டிக் கடைதிறந்தே ஓராண்டில் தாம்பெருகி,
கொள்ளைப் பெருந்தொழிலைக் கண்வைத்துப்
பற்றுகின்றார்!

தொல்லைப் படுகின்றார் தொன்தமிழர்; இன்னும்
சிறிதுகா லஞ்சென்றால் செந்தமிழும் மாறி
'அரிதாந் தமிழ்'ரென ஆகுமென எண்ணுவாய்!
நீயிவற்றை என்றும் நினைத்திருக்க மாட்டாய்;என்
தாயறிய மாட்டாள்! அதனால் தவறிழைப்பீர்'

என்றவனும் கூற இருவிழியும் மாறாமல்
நின்றவளும் கேட்டாள்! நெடுமூச்சு விட்டாள்!பின்

"அத்தான்நான் அவ்வா றறியாம லுங்களுக்கே
எத்தனைநாள் தொல்லைக் கிடம்வைத்தேன்;மன்னியுங்கள்,
இல்லச் சிறுமைக்கும், ஏற்றக் குறைவிற்கும்

தொல்லைப் பணத்தொல்லை காரணமாம்; தொல்பெருமை
வாய்ப்பட்ட நந்தமிழர் வாய்க்காத செல்வத்தால்
நாய்ப்பட்ட பாடாக நாளும் படுகின்றார்!
உண்ணற் குணவும், உடுத்தற் குடைவகையும்
எண்ணற் கரிதான மக்களிடம் இன்றில்லை;

போலிப் பகட்டும், பழுதைப் பழியொழுங்கும்
கூலி பெறுவார்க்கும் நாளும் குறைவில்லை!
எத்தும் புரட்டும், இடர்செய்யும் தீயுளமும்,
குத்தும் களவும், கயமைக் கொடுஞ்செயலும்,
பாடில்லா துண்ணும் பயனில்லா வாழ்வமைப்பும்
மேடில்லா நன்னிலத்து நீர்போல் பரவியது!

காணி நிலத்தில் கிணற்றுக்குக் காற்பங்கு,
மாணப் பெருவீடும் சுற்றி மதிற்சுவரும்
மேலும் ஒருகாலை மேய்ந்துவிட, மீதியுள்ள
நாலில் இருபங்கில் நாடகத்துக் கொட்டகைக்கே
பங்கொன்று போகப் பகுதி நிலத்தினிலே,
எங்கு விளைவுவரும்? எப்படித்தான் நெல்விளையும்?

உண்ணற் குதவும் உழவே முதற் றொழிலாம்!
எண்ணில் உடையே இதன்பின்னாம்! இவ்விரண்டும்
கன்னித் தமிழகத்தின் கண்ணா யிருந்தனவே!
இந்நாளில் எங்கும் இயந்திரத்தால் வாழ்கின்றார்!
நெல்விளையும் நன்செய் நிலத்தை யழித்துவிட்டுச்
செல்வம் விளைக்கும் சிறுமைத் தொழில்செய்வார்!

கல்லூரி உண்(டு) அதிலே கல்வியுண்டு; கல்வியினால்
சொல்லூறிப் போவதல்லால் செந்நெல் விளைவுண்டா?

கல்வியெனின் என்ன? கதைப்படிப்பும் பாட்டுமே
கல்வியென் ருகுமா? கற்றவர்கள் எண்ணிடுக!
வேளாண்மைக் கல்லூரி, வித்துகளின் ஆராய்ச்சி,
கூல வகைக்கூடம், கற்கும் உடைப்படிப்பு,
மண்ணின் வகைபற்றி, வானின் மழைபற்றி,
உண்ணும் பொருட்சிறப்பே, ஊட்ட வகைச்சிறப்பே
என்னும் இவைபற்றி இந்நாளில் கற்றவர்கள்
என்ன அறிவார்; எழுதும் திறனல்லால்!

இந்நிலையே நாட்டின் இடர்நிலைக்குக் காரணமாம்!
அந்நிலையை நானறியேன், அத்தான் இதுவரைக்கும்.
நாட்டு நலிவாலும் நல்லறிவுக் கேடாலும்,
வாட்டம் அடைந்திருக்கும் இக்கால் வடவோரும்,
வேகின்ற வீட்டில் விழுந்ததெலாம் தாமெடுத்துப்
போகின்ருர் போலப் புகுந்திங்கு மேய்கின்ருர்!

முத்துநகை வேண்டா; முதலில் தமிழகத்தின்
சொத்தனைத்தும் நாம்காக்க வேண்டுமே! மேலுக்குப்
பட்டாடை வேண்டா; பழிவடவர் இந்நாட்டை
விட்டோடச் செய்யவழி வேண்டுமே! பிள்ளைக்கு
மோதிரமும் வேண்டா; கடல்கடந்த நம்மவர்க்கு
ஆதுணைநாம் ஆகிடவும் வேண்டுமே! ஆகயிந்தத்
தொண்டாற்று வார்க்கென்றன் அத்தானே
டென்றேநாளும்
தொண்டாற்றப் போகுமென்றே" அன்னம்
முழங்குகின்ருள்,
அன்னம்,பெண் அல்லள்; அவள்பத் தரைமாற்றுப்
பொன்னேபொன்! பொன்னேநற் பொன்!

∴ ∴ ∴



# மணல் திட்டு

• முன்னுரை.

மாந்தர் உள்ளங்களில் சிலபொழுது அறிவழுத்தம் குறைந்து நிற்கும். அக்கால் அங்குப் புல்லிய எண்ணங்கள் தோன்றி மேடிட்டு நிற்கும். ஆனால் அவை ஆற்றிடையில் ஏற்படும் மணல் திட்டுகளைப் போன்றவையே! அடுத்து வரும் அறிவு வெள்ளத்தால் அவை கரைந்து போகும் தன்மையன; ஆனால் அவ்விடைப் பொழுதில் அம் மணல் மேடுகளின் தோற்றமும் வலிவும் அவை தோன்றிய மாந்தரின் உள்ள நீரோட்டங்களை எவ்வளவு அலைக்கழிக்கின்றன!)

# 7. மணல் திட்டு [1966]



காலையில் எழுந்தாள் கயல்விழி;
வேலையில் எண்ணம் வீழாது அலைநதது!
கால்கள் இரும்பாய்க் கனத்தன; உள்ளம்
நூலிலாப் பட்டமாய்க் கட்டின்றிப் பறந்தது!
யார்க்கும் தொடர்பிலா நினைவுகள் மொய்த்தன!
பார்க்கும் பொருள்மேல் கண்கள் பதிந்தன!
கேட்கும் ஒலிகளோ தொடர்பின்றிக் கேட்டன!
தோள்கள் துவண்டன; மார்பகம் தொய்ந்தது;
நின்றுகொண் டிருந்தது நிலைக்கண் ணாடிமுன்
என்றவள் உணர அரைமணி சென்றது!

காலை நிலாவென முகம்வெளிர்ந் திருந்தது!
மாலைக் கதிரவன் போல விழிகளும்,
வற்றிக் காய்ந்த சருகுபோல் இதழ்களும்,
அழுகிய பழத்தோல் எனும்படி கன்னமும்,

இருந்தன கண்டாள்; இருளகம் கண்டாள்!
நெற்றித் துண்டம் நெருப்பாய்க் கனன்றது!
ஒற்றிய கையோ ஒடிந்த தாமரைத்
தண்டுபோல் மடியில் துவண்டு விழுந்தது!
கயல்விழி உள்ளமோ கயிற்றுமேல் நடக்கும்
கழைக்கூத் தாடியின் கைக்கழி போல,
மேலும் கீழுமாய் இடமும் வலமுமாய்க்
சுற்றிச் சுழன்று கொண்டே இருந்தது.

வெற்று வெளியை வெறித்து நோக்கினாள்.
கருநீ லத்து வானிலே மிதக்கும்
ஒருகோடி முகில்களும் இவள்உள் ளத்தே
வந்து மொய்த்து வட்டமிட் டிருந்தன!
முந்தைநாள் நிகழ்ச்சியோ மூட்டமிட் டிருந்தது!

அவளோ மணந்த ஆயிழை! பேதை!
துவளா நெஞ்சினள்! அன்பின் தொகுப்பு!
புதுவைப் பாவலர் குடும்ப விளக்கு!
புதுமைப் பாவையின் அழகுப் பொலிவு!
குளிர்ப்பூஞ் சோலை! கற்பின் கொழுந்து!
வெளிறோ டாத நீலவான் விரிவு!
கலங்கிலா நன்னீர்! ஆயினும் குழவியின்
இளங்கை வருடா மார்பினள் அவளே!
மணம்நடந்(து) ஏழரை ஆண்டுகள் மடிந்தன!
எனினும் மகப்பே றில்லா திருந்தாள்!
தாய்மைக் கேங்கித் தவித்தது அவள்மனம்!
சேய்முகம் காணத் துடித்தது அவள்விழி!
மகவு புரளா மடியின ளாகிய
அகவாழ் வவட்கே அனற்புழு வாழ்க்கை!

மனத்திற் குகந்த மணாளன் எனினும்
இனத்திற் கோருயிர் ஈகிலாத் தன்மையால்
ஏதோ ஒருகுறை இவளுளத் திருந்தது.
ஏதோ ஒருதுயர் இவளைத் தேய்த்தது.
உடல்நலந் தேய உள்ளமும் தேய்ந்தது!
கடல்போல் வாழ்வில் கலமிலா திருந்தாள்!

இவளருங் கணவன் வாணிக நோக்கன்!
இவள்உளக் கூவல் இணைந்தறி கல்லான்!
பிள்ளை ஆவலை வாணிகப் பிணிப்பின்
கொள்ளை ஊதியக் கொழுமையால் மறந்தான்!
வாணிகத் தொடர்பால் வெளியூர் வாழ்க்கை
பேணிக் கொள்ளும் பெற்றியோன் ஆனான்.
இம்முறை வெளிநா டேகி இருந்தான்;
மும்முறை திங்கள் முழுமை அடைந்தது!

கணவன் வெளியூர் இருக்கும் பொழுதெலாம்
மணந்தரா வாழ்வைக் கயல்விழி நினைப்பாள்!
பெண்ணின் அன்பு பெரியதே! எனினும்
பெண்ணின் பேதைமை நெஞ்சமும் பெரியதே!

அழல்எனும் பிரிவை ஆற்றிக் கொள்ளும்
விறல்அவள் உணர்வில் விளைவதே ஆயினும்
நேற்று நடந்த நிகழ்ச்சியோ கயல்விழி
ஊற்றெனும் நினைவிற்கு ஊறு விளைத்தது!
தேற்றிக் கொள்ள முனைந்தும் தோற்றாள்!
காற்றில் நெருப்பென எண்ணம் கனன்றது.

'முத்தன்' என்னும் முன்வீட்டு இளைஞன்
ஒத்துப் பழகிய பழக்கம் முதிர்ந்தே
மாற்றுதற் கின்றி மனத்தை அலைத்தது!
நேற்று மாலையில் இளையோன் வந்தான்.

கணவன் மடலைப் படித்துக் காட்டினாள்.
இனுமொரு மாதம் இருந்து வருவதாய்
வந்த செய்திக்கு இருவரும் வருந்தினர்.
வருத்தம் வளர்ந்ததும் இரக்கமாய் மலர்ந்தே,
உறுத்தும் வளமையால் அன்பெனக் காய்த்துக்
கயல்விழி பிரிவுக்குக் களங்கமாய்க் கனிந்தது!
மயலுறும் நெஞ்சம் அறிவை மறைக்கவே,
எண்ண வாய்க்கால் இருவர் நினைவையும்
ஒன்றாய் இணைத்தது! நினைவுநீர் வலுத்தது!
இருப்பினும் அச்சம் இருவர்க்கும் இருந்ததால்
விருப்பக் குறிப்பொடு விலகிச் சென்றனர்.
குழலால் பெய்த எண்ணத் தூறலில்
காலூன் றிற்று கயமைக் காளான்!
மறுநாள் மாலை இருவரும் பிணைவதாய்
ஒருநூறு சொற்களில் உளறிக் கொட்டினர்!

நடக்க விருந்த நச்சு நிகழ்ச்சியைக்
கடக்கக் கயல்விழி அஞ்சி அஞ்சியே
இரவு முழுவதும் உறங்காது இருந்தாள்!
உறவின் நினைவுகள் ஒழுங்கினார்க் கெங்ஙன்
நறவு பிலிற்றி நலஞ்செய் யும்மோ
அங்ஙனே ஒழுங்கிலார்க் கந்த நினைவுகள்
நஞ்சு பிலிற்றி நலங்கொலல் இயற்கை!



# 2

மயல்மேய் அறிவொடும் மனஞ்செல் நினைவொடும்
கயல்விழி காற்றிடைத் துரும்பெனச் சுழன்றாள்.
மாலை நடந்திடும் நிகழ்ச்சியின் நினைவால்
ஆலையில் இட்ட கரும்பாய்த் துவண்டாள்!

பல்லைத் துலக்குவாள்; நெஞ்சம் துலக்கிலள்!
வெள்வாய் அலம்புவாள்; மனக்கறை அலசிலள்!
அருள்தோய் உருவமுன் நின்றனள்; அஞ்சிலள்!
இருள்முகம் கழுவுவள்; இழிவுளம் கழுவிலள்!
குழல்நெய் வாருவாள்; குப்பைஉள் வாரிலள்!
தழல்முன் அமருவாள்; உளத்தணல் அவிக்கிலள்!
ஊணெடுத் துண்ணுவாள்; அறிவூண் உண்கிலள்!
மாண்உடை பூணுவாள்; மனத்துடை கலைந்திலள்!
வளையும் மானமும் அறிவும் வாய்ந்தவள்
இளையோன் எண்ணினாள்; கணவனை எண்ணிலள்!
மயங்கினள்; மருண்டனள்; மனமிக இருண்டனள்;
தயங்கினள்; வெருண்டனள்; தணலிடைப் புழுவினள்!
சாம்பினள்; தேம்பினள்; சாறிலள்; வீறிலள்;
கூம்பினள்; கூசினள்; குறைபடு மாசினள்!
எழுந்தனள்; நடந்தனள்; இளமைகொல் நினைவினள்!
விழுந்தனள்; புரண்டனள்; வெயர்த்தனள்;
அயர்ந்தனள்!

இன்பிலா இன்பம் எதிர்கொள முனைந்தவள்
துன்பினர் துன்பம் முழுவதும் தோய்ந்தனள்!

மாலையும் வந்தது! மங்கையும் மயங்கினாள்!
வாலைக் குமரனின் வரவெதிர் பார்க்கையில்

பக்கத்து வீட்டின் பாவை ஒருத்தி
'அக்கா' என்றே அழைத்த வாறாய்
உள்ளே வந்தாள்; வந்தவள் கயல்விழி
வெள்ளை வெளேரென் றிருப்பதைக் கண்டு,
மனமிக வருந்தி மணாளனின் பிரிவே
கனல்போல் இவளை வாட்டிய தென்று
கருதி உளத்தைத் தேற்றப் புகுந்தே
இறுதியில் இப்படி இயம்பத் தொடங்கினாள்:

'கடல்மேல் சென்ற கணவனை எண்ணி,
உடலும் உயிரும் வருந்துகின் றீர்கள்!
அவர்மேல் எத்துணை அன்புங் கட்கே'
எவர்தாம் இப்படிக் கணவனை நினைந்து
தோலும் எலும்புமாய்த் தோற்ற மளிப்பார்?
நாளுக்கு நாளும் இளைத்தீர் அக்கா!
கணவன் மனைவியர் காதல் என்றால்
உணவும் மறப்பதா? உறக்கமும் தவிர்ப்பதா?
உங்களைப் பற்றி ஊரில் யாவரும்
எப்படிப் பெருமையாய் இயம்பினர்; தெரியுமா?
அப்படிப் பேசுதல் அன்றோ பெருமை
கற்பின் விளக்கே! காதலின் செல்வீ!
பொற்பின் பூணே! பூவையர் அரசே!
உங்கட்கு என்றன் உளமகிழ் வாழ்த்து!
திங்கள் ஒன்றில் திரும்புவர் அதனால்
வருத்தம் கொள்ளாது இருங்கள்'—என்றே
திருத்த மொழிகளைக் கூறினாள் அவளே!

பொலபொல வென்றே பொழிந்த உரைபோய்
வெலவெலத் திருந்தவள் செவியினிற் பட்டதும்
உள்ளம் விழித்ததே! உறக்கம் கலைந்தது!

கள்ளம் அகன்றது கற்பும் உயிர்த்தது!
தன்னெறி நம்பி ஊர்தனக் கிட்ட
நற்பெயர் தன்னை நினைத்துப் பார்த்ததும்
அழுந்திக் கிடந்த உள்ளுணர் வெழுந்தே
புழுங்கிக் கிடந்த புரையை அவித்தது!
நலிந்திடப் போகும் நங்கையை ஊரார்
புகழ்ந்த கூற்றினால் நாணம் புகுந்தது!

புகுந்த நாணம் புன்மையைச் சுட்டது!
தகுந்தவ ளென்ற தகுதியைத் தந்தது!
ஊரார் உரைத்த உரைக்குத் தக்கதாய்
நேர்வழி நடக்கும் நினைவு வளர்ந்ததும்
உறங்கிய அறிவும் ஊற்றுக் கொண்டது!
கிறங்கிய நிலைபோய் கயல்விழி கிளர்ந்தாள்!

மூண்ட அறிவால் முன்னுள்ள பாவையின்
நீண்ட நிலாப்பிறை நெற்றியை நீவி
முத்தம் மொழிந்தாள்; முறுவல் மலர்ந்தாள்!

புத்தம் புதிய உணர்வொடும் அப்பெண்
சென்றதும் கயல்விழி சரேலென எழுந்து
கிடுகிடு வென்றே கிணற்றுக் கோடி
விடுவிடு வென்று பெரிய வாளியால்
இருபது வாளித் தண்ணீர் இறைத்துக்
குளிரக் குளிரத் தலையில் கொட்டினாள்
உடல்குளிர்ந் ததுபோல் உளமும் குளிர்ந்தது!
கடல்போல் நெஞ்சினால் கணவனை வாழ்த்தினாள்!

குளித்து முழுகிக் குழல்நீர் சொட்ட
வெளிர்நிறச் சீரை விரித்துடல் உடுத்து
மஞ்சள் நெற்றியில் செஞ்சாந் தணிந்தே

விஞ்சும் அன்பினால் கணவனின் அறைபோய்
அன்னவன் புகைப்படம் அன்பினால் அணைத்தென்
மன்னவ நீயும் வாழ்கநூ றாண்டே'
என்றே வாழ்த்தி எதிரறை வந்தாள்!

எதிர்வீட் டிளையோன் இவள்முன் நின்றான்!
அதிர்வெதும் இன்றி அன்னை அன்போடு
'தம்பி,வரு கெனத் தணிவொடு கூறினாள்.
செம்பொன் மணியிழை தாய்மைச் செவ்வியால்
அன்போ டழைத்த அவ்வுரை, அவன்பால்
முன்னர் இருந்த இருள்நிலை மாற்றிப்
பொய்யுணர் வெழுச்சியைப் புதைத்தது! ஆங்கே
மெய்யுணர் வெழுந்தது; மிளிர்ந்தது தூய்மையே!





# பட்ட மரம்


முன்னுரை.

(சிற்சில நேரங்களில் மாந்தனுக்கு ஏற்படுகின்ற உலகியல் அழுத்தங்கள் உள்ளத்தில் ஒருவகை வெறுப்புணர்வைத் தோற்றுவிக்கின்றன ஆனால், ஏதாவதொரு கொள்கைப் பிடிப்புள்ள உள்ளங்களை அவ்வுணர்வு ஒரு சிறிதும் தாக்குவதில்லை. கொள்கையற்ற வெறுமை உள்ளங்களே அச் சூழல்களில் முங்கித் தவிக்கின்றன; நிலைகுலைகின்றன. வாழ்க்கையில் வெறுப்புற்று, உயிரியக்கத்தையும் அழித்துக் கொள்ளத் தூண்டுகின்றன.

அக்கால் அத்தகைய உள்ளங்களுக்கு விழுப்பம் உடையாரின் வாய்ச் சொற்கள் பெரிதும் ஆறுதலளிக்கின்றன; வாழ்க்கையின் போக்கையே மாற்றிக்கொள்ளத் துணை நிற்கின்றன; வறண்டு காய்ந்து கிடக்கும் அவ்வுணர்வுகளுக்கு அவ்வாறுதல் மொழிகள் குளிர்ந்த நீரைப்போல் பசுமை ஊட்டுகின்றன. சோர்வடைந்து பட்டுப் போன அவ்வுள்ளங்களை மீண்டும் செழித்துக் குலுங்கச் செய்கின்றன.

பள்ளமும் மேடும் நிறைந்த உலகியல் போராட்டங்களில் சிக்கிச் சுழலும் உள்ளங்கள் கிளர்ச்சியுறும் பொருட்டு எழுதப் பெற்றது இது. அமைதி வேண்டுவார் படித்துத் தேறுவாராக.)

# 8. பட்டமரம் [1964]



திங்களிலா ஒருநாளில் ஊர்துயின்ற பின்னே
தீயவரும் உள்நடுங்கும் வல்லிருளில், உள்ளம்
முங்கிவரும் பேருணர்வால் எழுந்துநட மாட,
மொய்த்ததுயில் களைந்தெறிந்து கடற்கரையை நண்ணி,
கங்குலிட்ட பெருவானம், நெடுங்கடல்,விண் மீன்கள்
கண்டுகண்டு மகிழ்ந்திருக்கும் நல்லின்பப் போழ்தில்,
பொங்கிவரும் வாங்கலைக்குள் ஆங்கொருவன் பாயப்
போகையிலே ஓடோடி நான்தடுத்து நின்றேன். 1

நின்ற,எனை நோக்கி அவன் விம்மியுளம் நொந்தான்!
நெட்டுயிர்த்து நெடுந்தரையில் விழ்ந்தறைந்து
கொண்டான்!
ஒன்றுமறி யாதவனுய், 'என்ன'வென்று கேட்டேன்.
'ஓ'வென்ருன்; 'ஆ'வென்ருன்; 'ஏன்தடுத்தீர்' என்ருன்.

'நன்றுகொலோ நின்செயலும்; தற்கொலைசெய் மாறு
நடந்ததென்ன? கூறு'கென்றேன்; அவனழுது பொங்கி,
'கொன்றுகொள்ள வந்தவன்யான்; கொடுந்துயரம் பட்டேன்
கூறுகிலா இழிவெனக்கு வந்ததெனச் சொன்னான், 2

'தீக்காட்டின் நடுவினிலே, எரிமலையின் உள்ளே,
திக்கறியாக் கடல்நடுவில் இருட்சுழலின் ஊடே,
நோக்காட்டின் துயர்மழையில் வீழ்ந்ததுபோல் என்றும்
நொடிக்குநொடி தாழ்ந்திழியும் புல்லியரின் உள்ள
வேக்காட்டைத் தாளாமல் தொல்லைபொறுக் காமல்,
விம்மியழும் நெஞ்சத்தைத் தணிக்கவிய லாமல்
சாக்காட்டின் மடியினிலே தலைசாய்க்க வந்தால்
சாகும்முன் நீங்களெனை ஏன்தடுத்தீர்' என்றான் 3

'கடும்புயலில், வெம்பசிகொல் வல்வேங்கை முன்றில்,
கவுள்நனைய மதம்பெருக்குந் தனிக்களிற்றின் சூழ்வில்,
கொடும்பாம்பின் உடல்நெருக்கில், கொதிக்கின்ற நெய்யின்
கொப்பரையுட் பட்டதுபோல் கொடுங்கயவர் செய்யும்
அடும்பகைமை தாளாமல் உயிருடலங் காய்ந்தே
அறுத்தெடுக்கும் துயர்அரத்தை நிறுத்தவிய லாமல்
நெடுந்துயிலின் நல்லணைப்பில் அமைதியுற வந்தால்
நேர்வதன்முன் நீங்களெனை ஏன்தடுத்தீர்' என்றான். 4

'பிறப்பென்னும் கண்விழித்த நாள்முதலா உள்ளப்
பீடழிக்கும் கீழ்மையரின் குடியிருப்புக் குள்ளே
சிறப்பென்னும் வாழ்க்கையிலே ஒருதுளியும் காணாச்
சிறுமைமிகு நெடுந்துயரின் குத்தல்பொறுக் காமல்-
மறப்பென்னும் உளத்தூக்கம் தூங்கமுடி யாமல்,
மனத்திருக்குஞ் சுமையிறக்கும் வகையையுண ராமல்

இறப்பென்னும் மாளிகையில் கண்துயில வந்தால்
இறந்திடுமுன் நீங்களெனை ஏன்தடுத்தீர்' என்றான். 5

'சூழ்ந்திருக்கும் பெருந்துயருள், நெருஞ்சி முள்ளின்காட்டுள்,
சுட்டெரிக்கும் வெயில்நெருப்புள் புகலிடத்தைத் தேடி
வாழ்ந்திருக்க முடியாமல்-வழிவகைகாணாமல்-
வம்புரைக்கும் கள்ளரவர் நெம்புரைக்குள் மேலும்
ஆழ்ந்திருக்க வியலாமல்-ஆவியினைப் போக்க,
அணுவணுவாய் உளந்துணிந்தே, கடல்நடுவில் தாவி
வீழ்ந்திறக்கும் மகிழ்ச்சியிலே நான்முழுக வந்தால்
வீழ்வதன்முன் நீங்களெனை ஏன்தடுத்தீர்' என்றான். 6

என்றவனைத் தேற்றிஅவன் தோளினில்கை சார்த்தி
'என்னருமைத் தமிழ்மகனே, வருகவெனக் கூட்டிச்
சென்றவனை முன்னமர்த்தி, அருகமர்ந்து தேற்றி,
'செந்தமிழ்த்தாய் திருமகனே, நின்துயரம், மானம்
குன்றளவு பெரிதெனினும், வானினுயர் வெனினும்,
கோழையென மாய்ந்தொழிதல் யார்க்குநலஞ் செய்யும்?
இன்றுனது பேரிழப்பால் எவர்வருந்தப் போவார்?
எத்தனைநாள் நின்வருத்தம்? எண்ணிப்பார்' என்றேன்.

'இனித்திருக்கும் வாழ்க்கையன்றிங் கிருக்கின்ற யார்க்கும்!
எதிர்வரும்ஒவ் வொருநொடியும் துன்பப்போராட்டம்;
பனித்திருக்கும் மென்மலரை அகப்புறக்காம் பாய்ந்து,
பஞ்சணையில் தூவியுடல் சாய்ந்திருப்பார் தாமும்,
துனித்திருக்கும் பெருந்துயரால் உளம்புழுங்கு கின்றார்!
துன்பமெனும் குளிர்காற்று யாரைவிட்டு வீசும்?
தனித்தொருவன் சாவதனால் துயர்விலகல் இல்லை;
தாங்குபவன் எவனவனே நல்லின்பம் கண்டான். 8

'முன்வைத்த முதலில், கண் வைத்தார்கை வைக்க,
முதிர்வுள்ளம் வையாமல் உயிர்வையார் கோடி!
மின்வைத்த இடைவைத்தாள் மனம்வையா மைக்கே.
மெய்வைத்த நல்லுயிரைப் போட்டுடைப்பார் கோடி!
பொன்வைத்த நினைவினராய்ப் பொய்வைத்த வாழ்வில்
புகைவைத்துக் கொண்டவர்கள் எண்ணிறந்த கோடி!
மன்வைத்த உயர்நினைவை மனம்வைத்து நிற்கும்
மாந்தரினம் என்வைத்திங் கென்னபயன்' என்றேன். 9

துன்பமெனும் பெயரொன்று; வல்லுருவம் கோடி!
துயர்க்கென்றும் வருந்தாமல், உள்ளஞ்சோ ராமல்,
தன்புதுநோக் கொன்றினையே நோக்கிப்போ வார்க்குத்
தாங்குகிலாத் துயரென்றிவ் வுலகெங்கும் இல்லை;
இன்பமென ஒன்றினையே குறிக்கோளாய்க் கொள்வார்,
இம்மியதில் குறைந்தாலும் தாங்குகிலார் துன்பம்!
மன்பதையின் விளைவெல்லாம் இன்பமடா இன்பம்!
மற்றதற்குத் துன்பமெலாம் உள்ளப்பே ராவல்!' 10

உழைப்புண்டு; திறமுண்டு; மெய்வருந்தில் என்றும்
உற்றவிளை வுண்டதனல் உய்வுண்டு யார்க்கும்;
பிழைப்புண்டு; வாழ்வுண்டு; பேரின்பம் உண்டு!
பிறைநுதலார் உளம்பொங்கிக் கயல்விழியால் வெளவும்
அழைப்புண்டே; அன்புண்டே; அறவாழ்க்கை உண்டே!
ஆரெவர்க்கும் கரவாத மெய்வாழ்க்கை தோன்றின்
தழைப்புண்டு மாந்தர்க்கே; தற்கொலையா வாழ்க்கை?
தனியொருவன் உயிர்குடித்தால் கடல்வற்றிப்போமோ?

'தாங்குகிலாத் துன்பமென நீபுலம்பு கின்றாய்!
தந்தைதாய் மாண்டனரா? மனைவியுமாண் டாளா?
வாங்குகிலா வருத்தமென நீயழுங்கு கின்றாய்!
வளர்த்தமகன் செத்தானா? தம்பியிறந் தானா?

தூங்குகிலாத் துயரமென நீயரற்று கின்றாய்!
தோழனைநீ இழந்தனையா? ஈங்கிவர்யா ரேனும்,
நீங்கிடுநின் குற்றுயிரால் மீண்டிடுதல் உண்டா?
நின்னிறப்பால் என்னபயன் நேர்ந்திடப்போம்?'
என்றேன்,

'ஏறிவரும் நின்துயரம் என்னுருவா கட்டும்;
இடர்ப்பாட்டை நல்லறிவால் நின்றெதிர்ந்தே, உள்ளம்
வீறிவரும் நல்லுணர்வைக் கொண்ட,உயர் வாழ்க்கை
விளங்கிவரு மாறுபிறர்க் கெடுத்துரைத்துத் தீமை
நாறிவரும் மண்ணுலகைப் பொன்னுலகாய்ச் செய்யும்
நல்லபணி யொன்றினுக்கு நினையாக்கிக் கொண்டால்,
ஆறிவரும் நின்துயரம்; ஊறிவரும் இன்பம்!
அனைத்துயிரும் நின்தொண்டால் மாறிவரும் அன்றோ?'

'தான்பிறந்த நாட்டுக்கும், தாய்மொழிக்கும் செய்யும்
தனித்தொண்டே தலைத்தொண்டாம்;
பொதுத்தொண்டு செய்யார்
மான்பிறந்த கூட்டத்துள் பன்றிபிறந் தாற்போல்,
மயில்பிறந்த குழுவில்வான் கோழிபிறந் தாற்போல்,
கான்பிறந்த அகிற்காட்டில் கள்ளிமுளைத் தாற்போல்,
கடல்பிறந்த சிப்பிக்குள் பாசிபிறந் தாற்போல்,
ஏன்பிறந்தார் எனமக்கள் எண்ணிடுவார் ஆக
எவ்வுயர்வும் சேர்கிலராய் வீணழிவார்' என்றேன். 14

ஆகையினால், தமிழ்மகனே, செந்தமிழ்நற் றாய்க்கும்,
அன்றலர்ந்த தமிழ்நாட்டின் வாழ்வினுக்கும் உன்னை
ஈகையெனத் தந்துவிடில், நினக்குற்ற துன்பம்
எரியிரும்பின் முன்னர்வரும் ஈக்கூட்டம் போலாம்!
சாகையிலும் தண்டமிழை வாழவைத்துச் சாவாய்!
சாகாத பெரும்புகழைக் காவலிட்டுப் போவாய்!

வேங்கையிலும் நின்னுடலம் தமிழ்மணந்து வேகும்!
வெற்றுயிரும் செந்தமிழால் ஒளிசிந்திப் போகும்!' 15

'தொடர்ந்துவரும் பெரும்புயலால் ஒளிமழுங்கு மணிபோல்,
தொல்தமிழ்க்குச் சேர்ந்ததுகள் துடைத்தெடுத்து, மேன்மேல்
படர்ந்துவரும் பிறமொழியாம் வல்லிருளைப் போக்கிப்,
பரவிவரும் அறிவியலால் பட்டைபல தீட்டிச்
சுடர்ந்தொளிசேர் மாமணியாய், உளவிளக்காய் மெய்ம்மைச்
சூடேற்றி மருள்உலகில் உலாவரவும் விட்டால்,
அடர்ந்துபிற மொழியனைத்தும் ஏவல்செய் யாவோ?
அனைத்துலகும் செந்தமிழ்க்குக் காவல்செய் யாதோ?' 16

'செத்தொழியும் எண்ணத்தைக் கழற்றியெறி' என்றேன்;
'சீர்சுமந்த தமிழ்த்தொண்டைப் பூணுகநீ' என்றேன்;
'மத்தொழித்துத் தயிர்கடைதல் இல்லையடா இல்லை;
மனம்நீக்கி உயிர்கடைதல் என்னபயன் செய்யும்?
வித்தொழிந்து விளைவுண்டோ? தமிழ்வித்தை ஊன்றின்
விளைவதெல்லாம் நல்லொழுக்கம், வாய்மை, அறம், அன்பே!
முத்தமிழை மெய்யுணர்வாம் உருப்பெருக்கி கொண்டே,
முன்னிநிலை ஆய்ந்தவர்கள் காணுநிலை ஈதே!' 17

உயிர்கசந்த செந்தமிழா, உனக்கொன்று சொல்வேன்;
ஊழ்க்கின்ற நல்லுயிரைச் செந்தமிழ்க்கென் றூழ்க்க!
பயிர்போலும் காய்ந்ததது, தொண்டுமழை யின்றி;
பகலிரவாய், தெருத்தெருவாய், ஊர்ஊராய்ச் சென்றே,
அயர்வின்றிச் செந்தமிழ்த்தொண் டாற்றுக; நின் தொண்டால்
அடிகாயா முடிகாய்ந்த தமிழ்ப்பயிரும் வாழும்!

துயர்காணின் பெருவப்பால் தோள்தாங்கிக் கொள்வாய்!
தொல்பெருமை அகழ்ந்தெடுப்பாய், புகழ்வாரிச் செல்வாய்!'

என்றபடி யானுரைக்க அவனிருந்து கேட்டான்;
இறங்குமுகந் தூக்கியெனை ஏறிட்டுப் பார்த்தே,
'குன்றுபடி யாயிருந்த நல்லுணர்விங் கென்பால்
கூர்த்தபடி உயர்ந்ததுவே குளறுபடி யின்றி!
இன்றொருநாள் வாழ்க்கையிலே இறந்தெழுந்த நாளாம்!
இருள்வழிச்செல் மருள்மதிக்கே அருள்மொழிதந் தீர்கள்!
நன்றுசெய்வேன்; இன்றுசெய்வேன்! என்றுமினிச் செய்வேன்;
நான்பிறந்த நாடு, மொழி தமக்குத்தொண்' டென்றான்

'ஆருக்கும் உதவாமல் எனக்குமுத வாமல்:
ஆருயிரைப் போக்கவந்தேன். காய்ந்தெனது நெஞ்ச
வேருக்குள் பால்பொழிந்தீர்; செழுசெழுத்த துள்ளம்!
விடிவுற்ற தென்வாழ்க்கை; தெளிந்ததுயிர் என்றான்!
'யாருக்கும் யார்சுமையும் யார்பகையும் இல்லை;
யாக்கையெலாம் தோல்தசையும் நார்நரம்பு மாகும்;
நீருக்குள் குளிர்போல, நெருப்பின்ஒளிச் சூடாய்,
நின்றதொரு வெற்றுடற்குள் நின்றதுயர் நெஞ்சம்'

பூவினுக்குள் மணம்போல நெஞ்சலர்ந்து வீசும்
புதுமணத்தைத் தானுணரான் புறநாற்றம் மோப்பான்;
யாவினுக்கும் உள்ளதொரு வித்துப்போல் உள்ளம்!
யாக்கையெலாம் காய்கனிபோல் பிறர்க்குதவல் வேண்டும்;
மாவினுக்கும் பலவினுக்கும் தனித்தனிதோற் றம்போல்,
மாந்தருக்குள் பலதோற்றம்; நாற்றமும்அவ் வாறே!
ஆவினுக்கும் குதிரைக்கும் அரற்றொலிபோல் மக்கள்
அரற்றொலியே உளங்கலக்க மொழிமலர்ந்த' தென்றேன்

'தோன்றுமுயிர் பலவாக மொழிபலவு மாகித்
துலக்கினவே நல்லறிவை; விளக்கினநல் உள்ளம்!
ஊன்றுசெடி போலுமுயர் ஆல்போலும் பாரில்
உலவுமொழி பலவெனினும், உலகமெனும் நற்றாய்
ஈன்றமுது மொழிகளுக்குள் பழந்தமிழும் ஒன்றே!
இணரிணராய்ப் பூத்தமலர், சிம்புமிலா ரூர்ந்தே
ஆன்றுயர்ந்த ஆல்போல உணர்வெழுந்த தாயாய்
அனைத்துயிர்க்கும் உளம்மலர்த்தும் மொழிதமிழே
என்பேன்' 22

'முங்குபொருள் பலவினுக்கும் பயன்பலசேர் தல்போல்,
முகிழ்த்தமொழி அத்தனைக்கும் இடம்,பொருள்,பல்
நோக்கில்
தங்குபயன் பலவுடைத்தே! புறஅறிவுக் கொன்று;
தழலுக்குள் சூடேபோல் அகஅறிவுக் கொன்று;
பொங்குணர்வுக் கொன்றுயர்வாம் மெய்யறிவுக் கொன்று;
போக்குதனக் கொன்றுலகப் புத்தறிவுக் கொன்று;
கங்குலிலே ஒளிபோலப் பலபயனும் ஒன்றிக்
காழ்த்தமொழி தமிழ்மொழிபோல் யாண்டுமிலை
என்பேன்' 23

'உள்ளுணர்வால் கண்டறியார் புறங்கண்டு விள்ளார்;
உலகவுயிர்க் கிறுதிநிலை அறிவியலால் இல்லை;
தெள்ளுதமிழ்ப் பயன்துய்ப்பார் மெய்ப்பயனைக் காண்பார்!
திறந்தபிற சுவடிகளில் மெய்த்தமிழ்ப்பாங் கில்லை;
அள்ளுபயன் சிறிதெனினும் ஆக்குபயன் ஆர்ந்தே
அகத்துமுதல் தமிழ்ச்சுடர்போல் பிறிதில்ஒளி இல்லை;
எள்ளுநிலை வந்ததெலாம் ஏற்றநிலைக் கூற்றே!
எனவே,நின் நல்லுயிரால் தமிழ்வளர்ப்பாய் என்றேன்

இருள்படர்ந்த கண்களிலே ஒளிபடரக் கண்டேன்.
இகழ்ந்துரைத்த அவன்திருவாய் புகழ்ந்துரைக்கக்
கேட்டேன்
மருள்படர்ந்த நன்னெஞ்சம் நெருப்பிலிட்டுச் சுட்ட
மாற்றுயர்ந்த பசும்பொன்போல் சுடர்விடுதல்
கண்டேன்.
உருள்பொழுதும் விடிந்ததவன் உள்ளம்போல்; முகம்போல்!
ஒளிர்க்கதிர்க்கை பாய்ந்தவன்றன் விழித்துளியைத்
தீய்க்கும்!
அருள்படர்ந்த முகத்தினனாய் அவன்வணங்கிச் சென்றான்;
ஆர்த்தெழுந்த வல்லுணர்வால் நீர்துளும்பி நின்றேன்





# நடுகல்


முன்னுரை.

(கொள்கை உரம் உடையார்க்கும் காதல் ஒரு தடையாயிருப்பதில்லை. எனினும் அத்தகையார் கொள்கைக்கே தம் முதல் மதிப்பைத் தருகின்றனர். அவர்களை விரும்பும் மங்கையரும் தாம் மணக்கப் போகும் மறவர்தம் போராட்ட உணர்வைத் தம் காதலன்பினும் மேலாகவே மதிக்கின்றனர். அவர்களுக்குத் துணை நின்று கொள்கைக்காகப் போராடிச் சாவதையும் அத் தலைவியர் பெருமையாகவே கருதுகின்றனர்.

இணையத் துடித்த இரண்டு இளமை உள்ளங்கள். கொள்கைக் கெனப் போராடிச் சிறைப் பட்டன தமிழ்காக்கச் சிறைப்பட்ட அவ் விளங் காதலர்களுக்கு அதைவிட இன்பம் வேறென்ன விருக்கும்?

இறுதியில், தமிழை வாழ்விக்கப் போராடிய அவர்கள், தம்மை வாழ்வித்துக் கொள்ள முடியாமலேயே போயினர். ஆயினும் அவர்களின் சாவுப் பட்டயம் அவர்களைப் போன்ற பிறருக்கு ஊக்கமளிப்பதாகவே இருந்தது. 'பொய்யாத் தமிழ்மரபின் வாழ்வைப் புதுப்பிக்கப்' போராடிய அவர்தம் வேண்டுகோள் தமிழர்க்கு ஓர் உணர்வுப் பாசறை!)

## 9. நடுகல் [1964]



(சிறையிலிருக்கும் முத்தன் தன் காதலிக்கு மடல் எழுதுகின்றான்)

'முத்தழகி உன்அத்தான் முத்தன் எழுதுவது;
பித்தாகிப் போகாதே! பேதைமனம் நோகாதே!
இங்குநான் சென்னைச் சிறையில் இருக்கின்றேன்!
(அங்குநீ விம்முவதும் அப்படியே பொத்தென்று
கீழே விழுவதும் உள்ளத்தில் காண்கின்றேன்)
தாழம்பூ வே!நீ தனித்திருக்க விட்டுநான்
துன்பச் சிறையில் கிடந்து துவளுவதை
இன்பமென்றா எண்ணுவேன்? இன்னுங்கேள் நீமகிழ்வாய்
கம்பிச் சிறைபுகுந்தேன் என்று கழறியதும்,
வம்பு வழக்குகளில் வந்தனென எண்ணாதே'
அந்தப் படிநான் அணுவளவும் வாழ்ந்ததில்லை;
வந்து புகுந்த வகையை உரைப்பேன் கேள்;

பாழான இந்தி படரிருள்போல் பைந்தமிழை
வாழாமல் செய்யும் வகையைத் துணிந்தெதிர்த்தேன்:
நாம்பிறந்த நாட்டிற்கும் செந்தமிழ்க்கும் கேடுவந்தால்
தாம்பறுந்த காளையென உள்ளம் தழலாதோ?

கொஞ்சும் தமிழின் குரல்வளைக்குத் தீதென்றால்
நெஞ்சந் துடிக்காதோ கூனும் நிமிராதோ?

போக்கற்ற இந்தி, தமிழைப் புதைப்பதெனில்
தாக்குற்ற செந்தமிழர் தக்கைகளா, பார்த்திருக்க?

உள்ளத்தீப் பற்றி உடலெரிந்து சாகையிலே,
வெள்ளத் தமிழுணர்வு வீறிட்டுப் பொங்காதோ?

ஆகையினால் வெஞ்சிறைக்கே ஆளானேன் ஆருயிரே!
வாகைப்பூச் சூடி வருகின்றேன்; காத்திருப்பாய்!

என்னைத் தவறாக எண்ணாதே! என்னுள்ளம்
பொன்னைப் பழித்தொதுக்கும்! பூவே, நீ என்றனுயிர்!
மூவிரண்டு திங்கள்! முடிந்தவுடன் நான்வருவேன்.
பூவிரண்டு காம்பொன்றாய் வாழ்க்கை புதுக்கிடுவோம்!
பெற்றோர் இசைந்தபின்னே பேச்சென்ன நம்மணத்தைக்
கற்றோர் குழுமிக் களிப்போடு வாழ்த்துரைக்க
நன்றே முடிப்போம்;இந் நம்பிக்கை மாறாதே!
குன்றேறும் மான்போல் குடிவருவாய் என்தோளில்!
நெஞ்சம் நலியாதே; நின்னுடலை வாட்டாதே!
அஞ்சாதே! இங்குன் அழியா நினைவினிலே
செந்தமிழ்க்கு வந்த சிறுமை அழித்திடுவேன்!
சிந்துமிழும் வாயே, சிரி! *

## (சிறையில் வாடும் முத்தனுக்கு முத்தழகி எழுதும் விடை மடல்)

'அன்புள்ள அத்தான்! அருமை மடல் நான்பெற்றேன்
பின்புதான் உங்கள் பெருங்கடமை நெஞ்சுணர்ந்தேன்
நீங்கள் நினைத்ததுபோல் விம்மிற்று நெஞ்செனினும்
ஏங்கியுடல் வீழவில்லை; ஏற்றமொடு நின்றிருந்தேன்!
'காத்திருப்பாய்' என்பதுங்கள் கையெழுத்தா? நெஞ்செழுத்தா?
பூத்திருக்கும் முல்லைப் பொலிவழித்தீர் என்றாலும்,
'தக்கையன்று உங்கள் தடந்தோள்கள்' என்றறிந்து
திக்கறியா இன்பில் திளைத்திருந்தேன்; பொன்அத்தான்!
மண்ணன்றே உங்களுளம்; மாணுந் தமிழ்மரபின்
விண்ணென்று கண்டு வியந்து மகிழ்ந்திருந்தேன்!

உள்ளம், உயிர் உடலம் எல்லாம் உவகையினால்
துள்ளியதை என்சொல்வேன்? தொல்தமிழ்மேல் வந்தபகை
போக்கச் சிறைபுகுந்தீர்! உள்ளம் புடைக்காதோ?

காக்கும் பெரும்படையில் காதலரும் சேர்ந்திருக்கும்
வெற்றி நினைவென்னை வீழாமல் காத்ததென்பேன்.
நெற்றி குளிர நினைவிழந்து நின்றிருந்தேன்.

அத்தான்! நான் ஒன்றுரைப்பேன்; அன்னைத் தமிழ்க்குடலம்
செத்துமடிந் தீரெனினும், செம்மாந்து நான்சாவேன்.

ஆனாலும் அத்தான், அடியவளும் தாழ்ச்சியில்லை!
தேனான செய்தி! தெரிவிக்கப் போகின்றேன்!

மூவிரண்டு திங்களும் நாளுக்கு மூவேளை
ஆவின்நெய் ஊற்றி அமிழ்தம் படைத்தாலும்,
எட்டிக் கசப்பாய் எனக்கிருக்கும்; நீங்களங்கு
கட்டிக் களியுருண்டை காத்திருந்து வாங்கியுண்ண
எவ்வாறு நானிங்கே ஏங்கித் துயர்ப்படுவேன்!
ஒவ்வாது நெஞ்சம்! எனவே நான் ஒன்றுரைப்பேன்;

செந்தமிழ்க்கு நானும், எனக்குத் தமிழ்அமிழ்தும்
சொந்தமத்தான்சொந்தம்!உலகளவுசொந்தமென்பேன்:
நானும் தமிழச்சி! என்குடியும் தொல்குடியே!
ஈனும் புலிக்குடும்பம் பெண்குட்டி ஈன்றாலும்
பூனையென் றாய்விடுமோ? பூந்தமிழும் என்னுயிரே!
தேனும் புளிக்காதோ, செந்தமிழை மாந்தியபின்?

அத்தான்,இவ் வூரில் அணிவகுத்த போர்ப்படையில்
'முத்தழகி' என்றென் பெயரை முதல்கொடுத்தேன்!
செந்தமிழும் பேசாத ஊரில் உயிர்வாழேன்!
செந்தமிழும் பேசாத் தெருவில் குடியிருக்கேன்
இந்திவரின் நந்தமிழர் ஏற்றம்போம்! மானம்போம்!
முந்தி யதனை முறியடிக்க நானும்,என்
சிற்றுயிரைத் தந்தேன்; திரும்பி வரின்மணத்தைக்
கற்றவரைக் கொண்டு கடிதில் முடித்திடலாம்!
நேற்றுவரை உங்கள் நினைவால் துயருற்றேன்;
ஆற்றுவா ரின்றி அணுவணுவாய்த் தேய்ந்திருந்தேன்!
இன்றே மடல்பெற்றேன்; என்றன் உயிர்பெற்றேன்!

நன்றுதான்! இவ்வுடலம் செந்தமிழ்மண் நல்கியதாம்!
இந்திக் கொடுமையிலே எந்தமிழ்த்தாய் மாள்கையிலே
குந்தி யிருக்கவா? தாளேன்; கொலைவாளைத்
தூக்குவேன்; இந்தி உடலைத் துணித்திடுவேன்!
யாக்கை இனிப்பில்லை; நீர்மேல் எழுத்தென்றார்!
நல்லுயிர்க்கு மானம்உயிர் நங்கையர்க்கோ அஃதியற்கை!
வல்லுடலும் மானமதில் வாழ்ந்திருந்தால் தான்வாழும்!

'உங்கள் துணைவி ஒருத்தி, தமிழ்மறத்தி!
பொங்குணர்வுக் காரி! தமிழைப் புறம்பழித்த
இந்திதனைச் சாகடித்தாள்; ஆகையினால் செத்தொழிந்தாள்'
இந்த உரையுங்கட் கின்பத்தைச் சேர்க்கட்டும்!
என்னருமை அத்தான்! எனக்கு விடைகொடுங்கள்!
பின்னிருந்தால் வாழ்வோம் பிணைந்து!

[முத்தழகியும் இந்தி எதிர்ப்பில் சிறை சென்றாள்; ஓராண்டுக் கடுங்காவலில் இவள் மெல்லுடல் நலிந்தது; நோய்வாய்ப் பட்டுச் சிறையிலேயே இறந்தாள். இவளிறந்தாள் எனக் கேட்டு முத்தனும் இறந்தான். ஒரே கல்லறையில் இருவரும் துஞ்சினர். அக் கல்லறையின் முன் உள்ள நடுகல்லில் பொறித்திருக்கும் வரிகள் இவை]

'தங்காதல் மேலாய்த் தனித்தமிழைக் காதலித்தோம்!
பொங்குணர்வால் வன்மைச் சிறைபுகுந்தோம்! வெஞ்சிறையில்
நோயின்வாய்ப் பட்டோம்! உடலம் நொடிந்திறந்தோம்!
நாயின்வாய்ப் பட்டாற்போல் நந்தமிழும் இந்தியினால்
நாளும் சிதைந்தொழியும்! நற்றமிழர் பார்த்திருப்பார்
வாளும் மழுங்கியதோ? வன்மறமும் சாம்பியதோ?

அற்றைக் குடியும் அடியோடு வீழ்ந்ததுவோ?
ஒற்றைத் தமிழனும் இல்லா தொழிந்தானோ?

மாய்க்கின்ற செந்தமிழை மாளாமல் காத்தற்கே
வாய்க்கின்ற ஆளன் ஒருவன் வருவானோ?
வெட்டுண்டு சாயும் விறல்சேர் தமிழ்க்குடியை
முட்டுண்டு தாங்க ஒருவன் முளைப்பானோ?
இந்தி வெறியர் தமிழை இடர்ப்படுத்தும்
மந்திந் தனத்தை மறிக்கொருவன் வாரானோ?
ஆர்க்குந் தமிழ்நா டரசமைத்தே, இந்தியினைத்
தீர்க்கின்ற வல்லான் திருவுருவம் காணோமோ?
பொய்யாத் தமிழ்மரபின் தாழ்வைப் புதுப்பிப்பான்
எய்யாமல் எய்தும் புகழ்!"






# வழக்குரை காதை

## முன்னுரை.

(தமிழகத்தில் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்து மாணவர்கள் கிளர்ந்தெழுந்த எழுச்சிப் போராட்டம் 1965 இல் நடைபெற்றது. அதற்கு முன்பே எழுதியது இப் பாட்டு. 'பக்தவத்சலம்' என்னும் ஆரிய அடிமை அக்கால் தமிழகத்தின் முதலமைச்சாய் இருந்தது. அதன் கொடிய வல்லாண்மைக்கு இருநூற்றுக்கும் மேலான மாணவர்களும் பொதுமக்களும் பலியாயினர். மொழியடிப்படை தழுவிய தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் முதல் எழுச்சி அது. அதனால் இப்பாவித்யதுள் சூடு நிறைந்திருத்தல் இயல்பானது.

இப் பாவியத்தலைவனை 'வேல்மார்பனைப் போன்று விறலோர் ஆயிரக் கணக்கானவர் இத் தமிழ் மண்ணில் எழுச்சி பெறுகையில்தான் 'தமிழக விடுதலைப் போர் முற்றுப்பெறும்.

அவ்வுணர்வில் கிளர்ந்தெழச் செய்யும் வல்லமை வாய்ந்தது இப்பாவியம். ஆங்காங்கே இஃது ஓரங்க நாடகமாக நடிக்கப் பெறினும் பயன் மிகுதியாகும். உணர்வும் துடிப்பும் உள்ளவர்கள் அவ் வழிகளில் முயற்சி செய்யலாம். இந்தியெதிர்ப்புக் காலங்களில் எழுச்சியுற்ற பலரும் உணர்வு மாறித் திறம்பிய இக்கால் இப்பாவியமும், நாடக நடப்பும் பெரிய கிளர்ச்சிகளை உண்டாக்க உதவுவன.)



## காட்சியும் கருத்தும்

(வேல்மார்பன் என்னும் விறலோன் தமிழகத்தில்
கால்கோளும் இந்திக் கடாவைத் துணிந்தெதிர்த்தான்;
ஆகையினால் ஆள்வோர் அவனைச் சிறைப்பிடித்துச்
சாகும் படியடித்தும், சாகாமல் நீர்வார்த்தும்,
நெஞ்சில் உதைத்தும் நினைவழிக்க மாட்டாமல்,
எஞ்சி யிருந்த உயிரோ டவனுடலைத்
தூக்கி, அற மன்றத்தில் 'தொப்'பென்று போட்டார்கள்.
தாக்குண்ட வேங்கை தணல்கக்கப் பேசுகின்ற
காட்சியினைக் காணக் கணக்கற்றோர் வந்திருந்தே,
ஆட்சி உரைக்கும் அறத்தைச் செவிமடுப்பார்!
முன்னர் அரசினரின் சார்பில் வழக்காடும்
தன்னுணர்வு மாண்ட தமிழ வழக்குரைஞர்
வேல்மார்பன் தன்னின் வழக்கை விரித்துரைத்தே,

அன்றேன்முன் வந்தே அதிரும் இடிக்குரலில்
இன்ன படியுரைப்பார்; மன்றம் எதிரொலிக்கும்!)

இமிழ்கடல் வரைப்பின் 'இந்தியா' வென்னும்
அமிழ்தாம் 'பாரத' ஆட்சியி னின்று
தமிழக ஆட்சியைத் தனியே பிரித்திடக்
குமிழ்த்தெழும் உணர்வினுல் மக்களைக் கூட்டினை;
இனித்த சொல்லினுல் பாக்கள் எழுதினை:

தனித்தமிழ் என்றும், தமிழகம் என்றும்
சிதர்ந்த மக்களின் சிதைந்த உளங்களைப்
புதுக்கி அவற்றுள் உணர்வைப் புதுக்கினை;

கிளர்ந்தெழு கென்றே அவர்பால் கிளத்தித்
தளர்ந்த நெஞ்சினில் தமிழ்த்தீ மூட்டினை;
கொளுத்திய தீயால் அவர்கூன் நிமிர்த்தினை!
வெளுத்துக் கிடந்த அவர்தம் உளத்தில்
நாட்டுப் பிரிவெனும் நஞ்சை வார்த்தனை;

தீட்டுக கைவாள்; திரளுக நெடுந்தோள்!
கேட்டுப் பெறுகுவ தன்றே விடுதலை;
பூட்டிக் கிடக்கும் புலிகளே எழுகென,
இடிக்குரல் முழக்கினை; அவர்துயில் எழுப்பினை;

அடிக்கடி ஊர்க்குஊர் தெருத்தொறும் அவர்தமைக்
கூட்டி விடுதலை முரசங் கொட்டினை:
மூட்டிய உணர்வினுல் அரசமுன் னேற்றம்
முற்றும் தடைப்பட வில்லை ஆயினும்
சற்றே தளர்ந்தது: உன்போல் சழக்கரால்

வடக்கில் சீனன் வரம்பு மீறலை
அடக்கிடற் கில்லை; அடுத்துக் கெடுக்கும்
பாக்கித் தானின் பகையும் வளர்ந்தது;
போக்கிலி! உன்னால் உட்பகை புகைந்தது.

பிரிவினை பற்றி நினைக்கவும் பேசவும்
உரிமை உனக்கிலை; ஒருபெரு நிலத்துள்
தனித்தனி ஆட்சி தந்திடற் கில்லை;
எனைத்தனி யாக விடுகென் றியம்பினும்
உனைத்தனி விட்டிட அரசு ஒப்பாது;
தினைத்துணை மண்ணும் இந்தியா வென்னும்
பெருநிலத் தின்று பிரித்திடற் கில்லை!

உரிமை கேட்டனை, அதுபெருங் குற்றம்!
நாட்டின் அமைதியைக் குலைத்ததும் மக்களைக்
கூட்டி அவர்தமைத் தூண்டலும் குற்றமே!
ஆட்சிக் கிரண்டகம் புரிந்தனை; ஆகலின்
மீட்சி உனக்கிலை; முடிவாய் நின்பால்
வினாக்கள் சிற்சில வினவுவேன்; பிரிவினைக்
கனாக்காண் பார்க்கவை கண்களைத் திறக்கும்!
உரிமை உரிமை எனவுரைத் தாயே
குரல்மங் கிடக் கூக் குரலிட் டாயே,
எந்த உரிமையை இழந்தனை விரைந்துசொல்?

(வழக்கு மன்றத்தில் கூட்டம் கட்டுக் கடங்காமல் போயிற்று. காவலர்கள் அடிக்கொருவர் நின்று கூட்டத்தைக் கட்டுப் படுத்துகின்றனர். வழக்குரைஞர் கேட்ட கேள்விகளுக்கு வேல்மார்பனின் விடையைக் கேட்க மக்கள் ஆவலுடனிருந்தனர். வேல்மார்பன் பேசினான். அவன் இடிக்குரல் வழக்குமன்றச் சுவர்களில் பட்டு எதிரொலித்தது.)

வேல்மார்பன்:

மூச்சு முட்டப் பேசிவிட் டீர்கள்!
ஆச்சு; இனி என்னுயிர் அரைநா ழிகைதான்!
இவ்விடைப் பொழுதில் ஆகிலும் என்றன்
செவ்விய கருத்தினைச் சிறப்புறக் கூறுவேன்;
அறமன்றம் கேட்க; அறவோர் கேட்க!
மறத்தமிழ் மக்கள் மறவாது கேட்க!
உலகம் கேட்க! உயர்ந்த பெருமைகள்
இலவாகிக் கணவனை இழந்த ஒருத்தியாய்த்
தவிக்கும் என்றன் தமிழகம் கேட்க!
புவிக்குள் இவ்வுரை பொன்றா தாகுக!

'எந்த உரிமையை இழந்தனை' என்றீர்!
எந்த உரிமையை எனக்குத் தந்தீர்?
உணர்ந்து பேசிய கருத்தினை ஒவ்வாது
கொணர்ந்து நிறுத்தினீர் அறங்கூர் அவையம்!
இச்செயல் ஒன்றே என்றன் கருத்தினை
அச்சம் இலாமல் உரைக்கும் உரிமையை
எடுத்தது என்பேன்! இல்லைஎன் பீரா?
தடுத்தது பேச்செனின் செயற்குத்தாழ்ப் பாளே!
வாயில் அமிழ்தும் வளர்கலையும் ஊட்டிய
தாயின் மொழிக்கே தடைச்சுவர் வைத்தீர்!
இழவு வீட்டில் இடும்ஒப் பாரிபோல்
அழுகை இந்தியை அரசணை ஏற்றினீர்!

மொழிதரு உரிமையே முதன்மையா யிருக்கக்
கழியை இழந்த கண்ணிலார் போல
எங்களை ஆக்கிட இந்தியை நுழைப்பீர்!
வெங்கொடும் புண்ணில் வேல்நுழைத் தல்போல்

இந்தி சுட்ட புண்ணில் எரிதரும்
'வந்தே மாதரம்' நஞ்சினை வார்த்தீர்;
'வந்தே மாதரம்' எனின், 'தாய் வாழ்க'
என்பது பொருளெனின், எவர்தாய் வாழ்வது?

எம்தாய் நோஞ்சல்; இருமலால் சாகையில்
நும்தாய் பற்றி எமக்கென்ன கவலை?
புதுமை எவர்க்கும் பொதுமை அன்றோ?
''இதுதவ றப்பனே, எல்லார் தாய்களும்
ஒன்றுதான்'' என்றே உறைக்கின் நீரா?
நன்றுதான்; முதலில் நலிவுறும் எந்தாய்
வாடிக் கிடக்கும் நிலைவகை செய்க!
தேடக் கிடக்கும் ஒற்றுமை என்பது
தெருவில் கிடக்கும் தேய்ந்த செருப்பா?

ஒருவர்க் கொருவர் உதவுதல் அன்றோ
பெருமை ஒற்றுமை பேணி வளர்க்கும்!
எந்தமிழ் அழித்தே இந்தியை நுழைப்பது,
எந்தாய் பாடைக் கேற்றி,நும் தாயை
அரியணை ஏற்றல் ஆகா தோ?இதைப்
புரிதற்கு நீரென் உரிமை படைத்தீர்?
இத்தகு உரிமை எங்கட் கெம்நாட்டில்
முத்தமிழ் வளர்த்திட மட்டும் இல்லையா?
எந்த உரிமையால் இந்தியைக் கொணர்விரோ,
அந்த உரிமையால் அதனை எதிர்ப்போம்!
நுஞ்செயல் மட்டும் உரிமையால் நிகழ்ந்ததோ?
எஞ்செயல் மட்டும் உரிமை இழந்ததோ?

வெள்ளைக் காரனை எதிர்த்துப் பெற்ற
நொள்ளை உரிமை இதுவென் றுரைப்பின்

நீங்கள் அவனை எதிர்த்து நிற்கையில்
நாங்கள் மட்டும் நண்டா பிடித்தோம்?
உம்மொடு சேர்ந்தோம்; உம்மினும் பொருதினோம்;
உம்மின் முழக்கினும் உயர்முழக் கிட்டோம்!

மொழியின் உரிமை நெஞ்சில் முளைப்பது!
மொழியின் உரிமை உணர்வில் முகிழ்ப்பது!
தாய்மொழி உரிமை அற்றவர் பிறரை
நாய்போல் நத்தி வாழ்தலே நடப்பு!
ஓரிரு நாய்கள் உம் பின் வரலாம்;
ஈரோரார் எலும்புத் துண்டுகள் எடுக்கலாம்!
அதற்கெனப் பிறரையும் அவர்போல் நினைப்பதா?
புதுக்கினேன் உணர்வெனப் புகன்றீர்; உணர்வு
புதுக்கிடப் பித்தளை, செம்பா என்ன?
நல்லுணர் வென்றும் சாம்புவ தில்லை!
நல்லுணர் வதுதான் நாடி நரம்பினில்
ஓடிய வாறே மாந்தரை உய்ப்பது!
நீடுநல் உணர்விலார் நீர்மையர்! அவரால்
கேடுகள் விளையலாம்; நன்மைகள் கிளையா!

எந்தமிழ் மொழியில் நல்லுணர் வியற்கை!
அந்த உணர்வுதான் தமிழினம் அழியாது
இன்று காறும் இருந்து காப்பது!
பொன்றிய உரோம, கிரேக்கம் முதலிய
நாடுகள் பலவும், நல்லினம் பலவும்
ஓடு நீரிற் கரைந்த உப்பென
அழிந்த காரணம் அவ்வுணர் வின்மைதான்!
மொழியே உணர்வினை முழுதும் காப்பது!
இந்தநல் உணர்வோ டியல்வதால் அன்றோ
செந்தமிழ் தானும் செழித்து நிற்பது!

உணர்வால் மொழியும், மொழியால் அறிவும்
புணரும் அறிவால் வாழ்வெனும் பயனும்
எல்லா உயிர்க்கும் பொதுவென உணர்க!
கல்லா மாந்தர் மொழிக்கெனக் கவலார்;
அவரே இன்றை ஆட்சியில் இருப்பவர்;
இவர்தம் மால்தான் எம்மோர் நொடிவது!
இன்றை நிகழ்ச்சியே இறுதி அன்று;
பின்றை நடப்பவை பின்னுளார் அறிவர்!

ஒருவனின் உரிமையை-உயிரைப் பறிப்பதால்
உரிமை உணர்விங் கொழியுமா என்ன?
காலைக் கதிரவன் கடும்பகல் கொதிப்பதும்
மாலைபோய் இருளில் மாய்வதும் போலப்
பல்வகை ஆட்சி உலகினில் படர்ந்து
சில்நாள் இருப்பதும் சிறப்பதும் அழிவதும்
இயற்கை மக்கட் கிட்ட சட்டம்!
மயற்கை வேண்டா; மக்களின் உணர்வை-
உணர்வில் முகிழ்த்த மொழியின் உரிமையை
இணரிதழ் போலக் கிள்ளி எடுப்பது
அரசினர் மடமையென் றறிக! உரிமை
முரசைக் கிழித்தால் முழக்கம் நிற்குமா?
உள்ள முழக்கம் ஓயாப் பெருங்கடல்
எள்ளி அடக்குதல் ஆட்சிக்கு இறுதி.

**அ. சா. வழக்குரைஞர்:**

துடுக்குத் தனமாய்ப் பற்பல சாற்றினாய்!
அடக்குநின் பேச்சை! அறியா தவன், நீ,
உரிமை உரிமை என்றே உரைத்தாய்!
உரிமை பெரிதா, வாழ்க்கை உயர்ந்ததா?

**வேல்மார்பன்:**

உரிமை மணக்கும் வாழ்வே உயர்ந்தது!

**அ. சா. வழக்குரைஞர்:**

உலகமும் அதனுள் உள்ள பொருள்களும்
உலக மக்கள் யாவர்க்கும் உரிய,
அப்படி இருக்கையில் அறியார் சிலரொ(டு)
எப்படி என்நிலம் இதுவெனக் கேட்கலாம்?

**வேல்மார்பன்:**

உரிமை என்பது நீங்கள் உரைக்கும்
உலகமும் அன்று; பொருள்களும் அல்ல!
அவையெலாம் உடைமை! அவையொரு வற்கென்
றெவரும் விளம்பார்! இனுஞ்சில நாட்களில்
"நாடும் நிலமும், நகரும், ஊரும்
வீடும், வித்தும், அவைதரு விளைவும்
எல்லாப் பொருள்களும் எல்லாப் பயன்களும்
எல்லார்க்கு மாகும்" எனும்பொது உடைமை
வந்தே தீரும் வகையினை அறிவேன்!
முந்திடும் அந்நாள் விரைவினில் முகிழ்க்க
என்னால் முடிந்த தொண்டினை ஏற்பேன்!
இந்நாள் உரைக்கும் உரிமையிஃ தில்லை.
புறத்தே ஆகும் பொருள்களே உடைமை!
அறத்த தாகி, அகத்துள உணர்வையும்,
அவ்வுணர் வாலே அலரும் கருத்தையும்,
இவ்வுல கோர்க்கிங் கியம்பிடும் உரிமை
ஒன்றே நானிங் குரைக்க வருவது.
இன்றிவ் வுரிமைக் கிழுக்கு வந்தது.

**அ. சா. வழக்குரைஞர்:**

என்ன இழுக்கு வந்ததிங் இயம்பு?

**வேல்மார்பன்:**

செந்தமிழ் வழங்கும் சிறுவர் வாய்களில்
இந்தியைப் புகுத்தி விழுங்கெனல் இழுக்கே.

**வழக்குரைஞர்:**

புதுமொழி ஒன்றைப் படிப்பது தவறா?

**வேல்மார்பன்:**

புதுமொழித் தேவை என்னஇப் பொழுது?

**வழக்குரைஞர்:**

பிறன்வந் தாண்ட பெரும்'பா ரதத்தை'
அறவழி நின்றே மீண்டும் அடைந்தோம்!
பற்றிக் கிடந்த பகையினைப் போக்கி
ஒற்றுமை நிலவிட ஒருமொழி வேண்டும்!

**வேல்மார்பன்:**

ஒற்றுமை இலாமலா ஒன்றென நின்று
கற்றுத் தேர்ந்த கவின்பெறு மாங்கில
ஆட்சியைத் தொலைத்தோம்; அவர்களால் வந்த
கேடுகள் என்ன? நன்மையைக் கிளத்தின்
ஏடுகள் போதா! இருப்பினும் 'உரிமை'
ஒன்றினால் அன்றோ ஒருங்கிணைந் தெதிர்த்தோம்;
இன்றைக்கு மட்டும் என்ன வந்தது?

வடக்கில் சீனன் வாலை ஆட்டினான்.
இடக்குச் செய்தனன் இடர்பாக் கித்தான்;
கிடக்கு தென்றே சும்மா கிடந்தமா?
அடக்குதற் கனைவரும் அலைந்தெழ வில்லையா?
ஆனால் நீங்களோ,
ஒற்றுமை ஒற்றுமை என்றே இந்தியைக்
கற்றுக் கொடுப்பீர் கட்டாய மாக;
கற்றுக் கொடுக்க முன்வந் தீரே,
கற்றுக் கொள்ள நாங்கள்முன் வந்தமா?

**வழக்குரைஞர்:**

மொழிவெறி கொண்டு முன்னே றுதற்கு
வழியறி யாமல் இருந்திடும் நீங்கள்
அறியா வகையால் அதனைக் கற்கிலீர்!
வறியராய் மூடராய் வாழவே விரும்பினீர்!

**வேல்மார்பன்:**

இந்தி படித்தால் ஏழெட் டாயிரம்
வந்து குவிந்து வறுமையைப் போக்குமா?
இந்தியைக் கற்றால் இதுவரை நுழையா
மந்தை அறிவு மண்டையில் ஏறுமா?
செந்தமிழ் படித்தால் சீர்குலை வோமா;

பைந்தமிழ் கற்பதால் பாழாய்ப் போவமா?
இந்தி படித்தால் நிலாக்கோள் ஏறி
உந்தி வான்வழி உலாவரு வோமா?
இந்தியைப் படிக்கப் பசிஎடுக் காதா?
இந்தியை ஏற்றால் உழாமல் விளையுமா?

இந்தியைப் படிப்பதால் எந்தோள் மேலே
குந்தி எங்களைக் குதிரை யோட்டுவீர்;
வாய்ப்பூட் டேற்று வழிவழி அடிமையாய்ப்
பேய்ப்பணி செய்ய எங்களைப் பிணிக்குவீர்!
குடுமியைப் பிடித்துக் கொடுமைகள் புரிவீர்,
அடிமையாய் உங்களின் அடிதொழச் செய்வீர்
இவற்றைத் தவிர இந்தியால் விளைவதென்?

(மக்களைப் பார்த்து)

தவற்றைப் புரியும் தமிழக மக்களே!
செவிமடுக் கின்ற சிறுத்தைப் புலிகளே!
புவியில் தமிழினம் வடவரால் பொன்றிடும்!
அடிமை வாழ்க்கைக் காளா காதீர்!
விடிவே இல்லா இருளில் விழாதீர்!

**வழக்குரைஞர்:**

(அறமன்ற நடுவரைப் பார்த்து)

இப்பெரும் புரட்சிக் காரனை இக்கால்
தப்பவிட் டாலோ தமிழர் யாவரும்
கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போவர்;
எட்டுணை யும்நம் இந்திய நாட்டில்
ஒற்றுமைப் பாடோ உருப்படா திவனால்!
சற்றும் கனிவிலாது ஐயனே, இவற்குத்
தூக்குத் தண்டம் என்றே
நாக்கு குழறாது நவிலவேண் டுவனே!

**அறமன்ற நடுவர்:**

இந்திய நாட்டுக் கிரண்டகம் செய்தயிம்
மந்தியைத் தூக்கில் மாட்டுக உடனே!

**வேல்மார்பன்:**

அருள், அறம், மறஞ்சேர் அருந்தமி ழகமே!
இருளில் வீழ்ந்தனை: என்றெழு வாயோ?

புகழ்செய் புலவோர் புரந்தசெந் தமிழே
இகழ்படச் சாம்பினை என்றலர் வாயோ!

பழிபடா வாழ்க்கைப் பைந்தமிழ் மகனே
இழிபடக் கிடந்தனை என்றெழு வாயோ ?

(மக்கள் தீர்ப்பைக் கேட்டுக் கொதித்தெழுகின்றனர். வேல்மார்பனைக் காவலர்கள் இருவர் இழுத்துச் செல்கின்றனர். காவலர் தம் கைத்தடிகள் ஆரவாரிக்கும் மக்களின் மண்டைகளைப் பிளக்கின்றன. புகைக் குண்டுகள் வீசப்பெறுகின்றன. மக்கள் சிதர்ந்தோடுகின்றனர். இந்திய உயரற மன்றத்தின்மேல் கழுகுகள் வட்டமிடுகின்றன.)



# பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள்

○○○

| | | |
|---|---|---|
| 1. | கொய்யாக்கனி (பாவியம்) | 16.00 |
| 2. | ஐயை | 30.00 |
| 3. | பாவியக் கொத்து | 22.00 |
| 4. | கற்பனை ஊற்று | 40.00 |
| 5. | பள்ளிப் பறவைகள் (குழந்தைப் பாடல்கள்) | 18.00 |
| 6. | நூறாசிரியம் (விளக்க உரையுடன்) | 100.00 |
| 7. | திருக்குறள் மெய்ப்பொருளுரை (முதற்பகுதி) | 150.00 |
| 8. | உலகியல் நூறு (பொழிப்புரையுடன்) | 10.00 |
| 9. | பாவலரேறு பாடல்கள் – கனிச்சாறு (எட்டு தொகுதிகளாக) | (அச்சில்) |
| 10. | மகபுகு வஞ்சி | (அச்சில்) |
| 11. | எண்சுவை எண்பது | (அச்சில்) |
| 12. | அறுபருவத்திருக்கூத்து | (அச்சில்) |
| 13. | கழுதை அழுத கதை | (அச்சில்) |
| 14. | தன்னுணர்வு | (அச்சில்) |
| 15. | பாவேந்தர் பாரதிதாசன் | 25.00 |
| 16. | இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் | 5.00 |
| 17. | ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 7.00 |
| 18. | இனம் ஒன்றுபடவேண்டும் என்பது எதற்கு? | 2.00 |
| 19. | சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும் | 3.00 |
| 20. | செயலும் செயல்திறனும் | 45.00 |
| 21. | தமிழீழம் | (அச்சில்) |
| 22. | ஓ! ஓ! தமிழர்களே! | 11.00 |
| 23. | தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும் | 10.00 |
| 24. | நெருப்பாற்றில் எதிர்நீச்சல் | 6.00 |
| 25. | இளமை விடியல் | 50.00 |
| 26. | இட்ட சாவம் முட்டியது | (அச்சில்) |
| 27. | வாழ்வியல் முப்பது | (அச்சில்) |
| 28. | பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர் | 60.00 |
| 29. | தென்மொழி (பாவலரேறு ஐயா அவர்களின் இரண்டாம், மூன்றாம் ஆண்டு நினைவு மலர்) | 16.00 |
| 30. | தென்மொழி நாள்காட்டி | 20.00 |